பக்கங்கள்: இருபது

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2040 மார்கழி 01 புதன்கிழமை (16.12.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 02

# கூட்டமைப்பை மீறி சுயேச்சையாக களமிறங்குகிறார் சிவாஜிலிங்கம்

## ஸ்ரீகாந்தாவுடன் சென்று கட்டுப்பணம் செலுத்தினார்

கொழும்பு, டிசெம்பர் 16

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை மீறி ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடுகிறார். நேற்றுக் கூட்டமைப்பின் மற்றொரு உறுப்பினரான என் ஸ்ரீகாந்தாவுடன் சென்று அவர் கட்டுப்பணம் செலுத்தினார்.**

தமிழர்கள் சார்பில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தலாம் என்று யோசனை தெரிவிக்கப்பட்ட போதிலும் அதற்கான நடவடிக்கை எதனையும் முன்னெடுப்பதில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சமீபத்தில் முடிவு செய்திருந்தது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்கள் இருவரும் தமிழர் பிரச்சினை தொடர்பாக வெளியிடும் கருத்துகள், உறுதிமொழிகள் ஆகியவற்றை உள்வாங்கி அவர்களில் எவராவது ஒருவரை ஆதரிக்கலாம் அல்லது ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிக்கலாம் அல்லது இரு பிரதான வேட்பாளர்களையும் தவிர்த்து

(20ஆம் பக்கம் பார்க்க)

## சிவாஜிலிங்கத்தின் முடிவில் கூட்டமைப்புக்குத் தொடர்பில்லை

கொழும்பு, டிசெ. 16

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் எடுத்துள்ள முடிவு அவரது தனிப்பட்ட முடிவேயன்றி தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் தொடர்புடையது அல்ல - என்று அக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## தாம் சரண் அடைவதற்கு உதவி செய்யுமாறு விடுதலைப் புலிகள் ஐ.நாவைக் கேட்டிருந்தனர்

### ஜோன் ஹோம்ஸ் 'சி.என்.என்' தொலைக்காட்சிக்குப் பேட்டி

கொழும்பு, டிசெ. 16

விடுதலைப் புலிகளுக்கு எதிராக இலங்கை இராணுவம் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையின் இறுதிக் கட்டத்தில் சரணடைவதற்கு உதவுமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் ஐக்கிய நாடுகள் சபையிடம் வேண்டுகோள் விடுத்தனர் என்பதை ஐ.நாவின் மனிதாபிமான விவகாரங்களுக்கான செயலாளர் நாயகம் ஜோன் ஹோம்ஸ் உறுதி செய்துள்ளார்.

'சி.என்.என்.' தொலைக்காட்சிக்கு அளித்துள்ள பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

விடுதலைப் புலிகள் தாம் சரணடைய விரும்புவதாகவும் அதற்கு உதவுமாறும்

(20ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் களத்தில் இதுவரை 21 பேர் குதித்தனர்

கொழும்பு, டிசெ. 16

ஜனாதிபதித் தேர்தலுக்காக நேற்று எட்டு வேட்பாளர்களின் சார்பில் கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது.

இதற்கிணங்க இதுவரை கட்டுப்பணம் செலுத்தியவர்களின் மொத்த எண்ணிக்கை இருபத்தியொன்றாக உயர்வடைந்துள்ளது என தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்காக கட்டுப்பணம் ஏற்றுக்கொள்வது இன்று நண்பகல் 12 மணியுடன் முடிவடைகின்றது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை பொறுப்பேற்கும் நடவடிக்கைகள் நாளை இடம்பெறவுள்ளன என

(20ஆம் பக்கம் பார்க்க)

## சரத்தை அரச விடுதியிலிருந்து வெளியேற்றக் கோரி மனு

கொழும்பு, டிசெ. 16

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் சார்பில் பொதுவேட்பாளராக நிறுத்தப்படும் சரத் பொன்சேகாவை, அவர் தற்போது வசிக்கும் அரச விடுதி இல்லத்திலிருந்து வெளியேற்றுமாறு உத்தரவிடக் கோரி நேற்று உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது.

குருநாகலைச் சேர்ந்த சட்டத்தரணி யு.பி.ஜெயமானே என்பவரே இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

அரச பதவியிலிருந்து ஓய்வுபெற்று, ஜனாதிபதித் தேர்தலில் நிற்கும் ஒருவர் தமது தேர்தல் பணிக்காக அரச விடுதியில் தங்கியிருப்பது முறையற்றது என்றும் -

அரசுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் விதத்தில் கருத்து வெளியிட்டுவரும் ஒருவர் ஓய்வின் பின்னரும் அரச விடுதியைப் பயன்படுத்துவது தவறு என்றும் -

இதன் காரணமாக அவரை அந்த இல்லத்திலிருந்து வெளியேறுமாறு உத்தரவிடவேண்டும் என்றும் -

அந்த மனுவில் மேலும் கூறப்பட்டிருந்தது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய ஆகியோரும் இந்த மனுவில் எதிர்மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். (அ-சி)

## தாய்லாந்தில் தடுக்கப்பட்ட விமானத்திலுள்ள ஆயுதங்கள் மத்திய கிழக்கு நாட்டுக்குரியதாம்

### சர்வதேசப் பொலிஸாரின் விசாரணை மூலம் தெரியவந்தது

கொழும்பு, டிசெ. 16

தாய்லாந்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ள ஜோர்ஜியாவிற்குச் சொந்தமான விமானத்திலிருந்து கைப்பற்றப்பட்ட 40 தொன் ஆயுத தளபாடங்கள் மத்திய கிழக்கு நாடொன்று இரகசியமான முறையில் கொள்வனவு செய்துள்ளவை என சர்வதேச பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர்.

இந்த ஆயுதங்கள் இலங்கைக்குக் கொண்டுவரப்படவில்லை எனவும் அவர்கள் கூறினர்.

விமானத்தின் விமானியிடம் ஆறு மணி நேரம் நடத்தப்பட்ட விசாரணைகளில் இந்த விடயம் தெரியவந்துள்ளது. எரிபொருள் நிரப்புவதற்காகவே இலங்கைக்குச் செல்லவிருந்ததாக அவர் தெரிவித்ததார் எனவும் சர்வதேச பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர். இதனால் வடகொரியா மீது ஐக்கிய நாடுகள் அமைப்பு விடுத்துள்ள தடையை மீறி இலங்கை ஆயுதங்களை இறக்குமதி செய்தது என மேற்கொள்ளப்பட்ட பிரசாரத்தை சர்வதேச பொலிஸார் முடிவுக்குக் கொண்டுவந்துள்ளனர் எனக் கூறப்படுகிறது. (அ-சி)

## புயல் அபாயம் நீங்கியது; காற்றுடன் கூடிய மழை ஆங்காங்கே பெய்யும்

### வளிமண்டலத் திணைக்களம் தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.16

வடக்கு,கிழக்கு மாகாணங்களில் புயல் அபாய நிலை நீங்கிவிட்டது.எனினும் அடுத்த 24 மணிநேரத்தில் கடும் காற்று மற்றும் இடி மின்னலுடன் கூடிய மழை ஆங்காங்கே பெய்யும். கொழும்பு வளிமண்டலத்திணைக்களம் இத்தகவலை நேற்று நள்ளிரவு தெரிவித்தது.கிழக்கு மாகாணத்தில் நிலை கொண்டிருந்த தாழ

(20ஆம் பக்கம் பார்க்க)

## அரச இல்லத்திலிருந்து வெளியேறுகிறார் சரத்

கொழும்பு, டிசெ.16

இராணுவத் தளபதி மற்றும் முப்படைகளின் சிரேஷ்ட அதிகாரி ஆகிய பதவிகளில் இருந்து ஓய்வு பெற்ற பின்னரும், அந்தப் பதவி நிலைகளில் இருந்தபோது தாம் வசித்துவந்த அரச இல்லத்திலேயே தொடர்ந்தும் வாசம் செய்துவரும் ஜெனரல் சரத் பொன்சேகா, ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராகப் போட்டியிடுவதற்கான வேட்பு மனுவை

(20ஆம் பக்கம் பார்க்க)

## 'சனல் - 4' வீடியோப் படக்காட்சி நிஜமானது; உருவாக்கப்பட்ட ஒன்றல்ல என்கிறது 'ரைம்ஸ்'

மும்பாய், டிசெ. 16

இலங்கையில் தமிழ் இளைஞர்கள் என்று கருதப்படும் சிலர் சீருடை தரித்தவர்களினால் சுட்டுக் கொல்லப்படுகின்றமையைக் காண்பிக்கும் 'சனல் - 4' வீடியோ காட்சி உருவாக்கப்பட்ட ஒன்றல்ல, நிஜமானது என்பதை 'த ரைம்ஸ்' தனது விசாரணைகள் மூலம் உறுதிசெய்துள்ளதாக அது தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் சமஷ்டி புலனாய்வுப் பணியகத்தின் (எவ்.பி.ஐ.) தேசிய கல்லூரியின் பயிற்றுவிப்பாளராக உள்ள சுயாதீன வீடியோ தடயவியல் நிபுணர் கிராண்ட் பிரெட்ரிக்ஸ் மேற்கொண்ட ஆய்வின் மூலம் இது உறுதி செய்யப்பட்டுள்ளதாக 'த ரைம்ஸ்' மேலும் தெரிவித்துள்ளது.

நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி குறிப்பிட்ட வீடியோ போலியாக உருவாக்கப்பட்டது என்பதற்கான தடயங்கள் எதனையும் பிரெட்ரிக்ஸ் கண்டு பிடிக்க

(20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

யா/ சன்மார்க்க மகா வித்தியாலயத்தின் பிரதி அதிபர்
செல்வி செல்வராணி அவர்களின் தாயார்

**திருமதி பரமேஸ்வரி அமரசூரியா**

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(91419)

**ஆசிரியர் நலன்புரிக்கழகம்**
**யா/சன்மார்க்க ம.வி.**

## மரண அறிவித்தல்கள்

### பேணாட் யோசப்

(ஓய்வு பெற்ற ஆசிரியர், யாழ்.இந்துக்கல்லூரி)



வண்ணார்பண்ணையை வதிவிடமாகக் கொண்ட பேணாட் யோசப் நேற்று (15.12.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் பேணடேட்டின் அன்புக் கணவரும் சக்திதேவன்(UK), சக்திதேவி, றேணுகாதேவி (ஜேர்மனி) மற்றும் காலஞ்சென்ற அசோக்குமார் ஆகியோரின்அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான மாட்டின், பாக்கியநாதன் மற்றும் லில்லி மலர் ஆகியோரின் அன்புச்சகோதரனும் டேவிட் பேடினன்ஸ், பாஸ்கரன், சுதாசினி ஆகியோரின் மாமனாரும் லூசியா வினோத்தா, லூசியா அனித்தா, நித்தீசன் நர்மதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (17.12.2009) வியாழக்கிழமை பி.ப 3 மணியளவில் யாழ்.கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல: 03, இரத்தினம் ஒழுங்கை,*
*கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.* (91495)
*தொ.பேசி-0212223925*

தகவல்:
திருமதி யோசப்பேணடேட்
(மனைவி).

### எதிர்மன்னசிங்கம் திருச்செல்வம்

(முன்னாள் கமநல சேவை அலுவலர், கிளிநொச்சி)

நெடுந்தீவைப் பிறப்பிட மாகவும், குமரபுரம், பரந்தனை நிரந்தர வசிப்பிடமாகவும், வவுனியா, சமனங்குளத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட எதிர்மன்னசிங்கம் திருச்செல்வம் நேற்று (15.12.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான எதிர்மன்னசிங்கம் - சிசிலியாப்பிள்ளையின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (குளிரப்பா) - கதிராசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், கமலாவதியின் (பூபதி) அன்புக் கணவரும், ராஜினி, சிறிரங்கன், மோகன்ராஜ், ரமேஜினி, பிரதீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், அமிர்தராணி, ஞானம், சுகிர்தம், அன்ரன், றஞ்சிதம், அமலநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், பசுபதி, பரமேஸ்வரி, யோகநாதன்; வேதநாயகி, இந்திராணி, புஸ்பராணி ஆகியோரின் மைத்துனரும், சீலன் (WFP, உலக உணவு திட்டம், வவுனியா) சுதர்சினியின் பாசமிகு மாமனாரும், நோர்பின், யுவாறஸ், ஷர்மி, கெனோசிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.12.2009) வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று சமனங்குளம் குழந்தை யேசு ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் சமனங்குளம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சமனங்குளம், வவுனியா*
மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள். (91496)

தகவல்: சு.யோகநாதன்
(மைத்துனர்)
*யாழ்ப்பாணம்.*

## விற்பனைக்கு

ரைட்டிங்கிற்கு பாவித்த MP 3, VCD, Audio CD (கேசுடன்) Pana Sonic Fax மெஷின், ஜெனரேட்டர், டைனிங் ரேபிள் என்பன உடன் விற்பனைக்கு. 0777079531

## தேவை

போட்டோப் பிரதி, கணணி அனுபவம் உடையவர்களும், மல்ரி சென்றரில் பணி புரிவதற்கும், பெண் பிள்ளைகள் உடன் தேவை. (நல்லூர் பிரதேசசபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது) தொடர்பு - 0718964353

## தேவை

சாதாரண தொழிலாளி உடன்
நேரில் விவரங்களுடன் வரவும்.
பணிப்பாளர், சென்றல் நேசிங் ஹோம்,
பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.

## கண்ணீர் அஞ்சலி

எமது சபையில் கடமையாற்றும்
பிரதம பொறியியலாளர்
திரு.பா.தவேந்திரகுமார் அவர்களின் தாயார்

**திருமதி பாலசுப்பிரமணியம் தவரத்தினம்**

அவர்களின் மரணச் செய்திகேட்டு எமது ஊழியர், தொழிற்சங்க உறுப்பினர்கள் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.

(91472)

வட.பிராந்திய ஊழியர்
தொழிற்சங்கம், தேசிய நீர்வழங்கல்
வடிகாலமைப்புச் சபை

## கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலய
ஆசிரியை
திருமதி.தயாநிதி
யோகராஜனின்
அன்புத் தாயார்

**பஞ்சாட்சரதேவன் சறோஜினிதேவி**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி.

**ஆசிரியர் நலன்புரிக்கழகம்**
**அச்செழு சைவப்பிரகாச**
**வித்தியாலயம்.**

## கண்ணீர் அஞ்சலி



**கார்த்திகேசு நடராசா**

(தொல்புரம் கமநல சேவை நிலைய குழுத் தலைவர், அராலி தெற்கு விவசாய சம்மேளனத் தலைவர்)

எமது நிலையத்தில் குழுத் தலைவராகக் கடமையாற்றிய அமரர் கார்த்திகேசு நடராசாஅவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் கண்ணீர் அஞ்சலியையும் காணிக்கையாக்குகின்றோம்.

தொல்புரம் கமநல சேவை நிலைய நிர்வாகக்குழு
விவசாய சமமேளனங்கள்,
நிலைய உத்தியோகத்தர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கனகசபை பூரணம்

கரம்பகத்தைப் பிறப்பிடமாகவும் மிருசுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை பூரணம் நேற்று (15.12.2009) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபையின் அன்பு மனைவியும் பூபதி, பொன்னம்மா, செல்வரத்தினம், சிவலோகம், குணசிங்கம், காலஞ்சென்ற தேவராசா மற்றும் மகேந்திரன் ஆகியோரின் தாயும் ஐயம்பிள்ளை, காலஞ்சென்ற கந்தையா மற்றும் சுந்தரலிங்கம், ஜெயகுலராணி, கலைவாணி, திருச்சோதி (ஜெயா) ஆகியோரின் மாமியாரும் பாஸ்கரன் - யோகமீரா, சிறீதரன் - கலைச்செல்வி, சுபாஸ்கரன் - இந்தினி, சிவநந்தினி - புஸ்பராஜா, முரளிதரன், கிருபாகரன், பிரபாகரன் - தனுஷியா, சுதர்சன் - தர்சினி, சுகர்ணன் - சுகந்தினி, சுரேஷன் - லோஜினி, சுகிர்தா - குமாரசிங்கம், சுதாகரன் - சாந்தமலர், சுகுமார், தர்மினி, தயாளினி, தர்மிகா, செந்தூரன், மிதிலா, மலரவன், அபர்ணா, கோமதன், நிந்துஜன், நிதர்சன், நிதர்ஷனா, நிரூபனா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(16.12.2009) புதன்கிழமை மு.ப.10மணியளவில் மிருசுவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பெரியான் ஓட மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மிருசுவில் வடக்கு,*
*மிருசுவில்.*

தகவல்:
பிள்ளைகள்.

### கார்த்திகேசு நடராசா

(இளைப்பாறிய அதிபர், யா/மெய்கண்டான் வித்தியாலயம், பண்ணாகம்,
தலைவர், அராலி தெற்கு விவசாய சம்மேளனம்,
தலைவர், அராலி பிரதேச வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம்,
தலைவர், தொல்புரம் கமநலசபை சம்மேளனம்,
உபதலைவர், சங்கானை பலநோக்கு கூட்டுறவுச்சங்கம்)



சுழிபுரத்தைப் பிறப்பிடமாக்வும் அராலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு நடராசா 14.12.2009 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு -நாகமுத்து தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை -ஆச்சிமுத்து தம்பதியினரின் மருமகனும் ஜீவரெட்ணத்தின் அன்புக் கணவரும் உமாதேவி, இராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் தீலிபன் (Occupational Therapist, Ragama), சயந்தன் (ஆசிரியர், Angel international), கௌதமன் (முதலாம் ஆண்டு பௌதிகவில் பிரிவு மாணவன், சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்), வானதி (முதலாமாண்டு HNDM உயர் தொழில்நுட்பக் கல்லூரி, தெகிவளை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் விநாசித்தம்பி (அமரர்), அருணாசலம் ஆகியோரின் மச்சானும் Dr.மகாலிங்கம், சுப்பிரமணியம் (அமரர்), மாசிலாமணி (அமரர்), இரத்தினம் (அமரர்), கணேஸ், குணசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் முகுந்தன், சேந்தன், அமிர்தகணேசன், இந்திரா, சுந்தரலிங்கம், பரமலிங்கம்,கிருஸ்ணலிங்கம், பிரதீப், பிரகாஸ், பிரகலாத்,கேசவன், ஜெகநாதன், சாந்தினி, பிரியதர்ஷினி, சுசிஸ்த்திரா, சுபத்திரா, கிருசாந்மோகன், பிரியா, ஜீவகி, அமரேஸ் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.12.2009) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி பூனாவடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஆலடிச்சந்தி*
*அராலி தெற்கு, வட்டுக்கோட்டை.* (91499)

தகவல்:
குடும்பத்தினர்.

### பஞ்சாட்சரதேவன் சறோஜினிதேவி



குப்பிளானைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சறோஜினிதேவி பஞ்சாட்சரதேவன் நேற்று (15.12.2009) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் குப்பிளானைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - சின்னம்மா தம்பதிகளின் புதல்வியும், பஞ்சாட்சரதேவனின் (அம்பிகா - ஓய்வுபெற்ற விவசாய போதனாசிரியர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - நாகமுத்து தம்பதிகளின் மருமகளும், தயாநிதி (ஆசிரியை, யா/அச்செழு சைவப் பிரகாச வித்தியாலயம்), தயாநந்தன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், யோகராஜன் (யுகு, உரிமையாளர், செல்வக்குமரன் ரெக்ஸ்ரைல்), விஜிதா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற சச்சிதானந்தத்தின் (பதில் முகாமையாளர் , வாழைச்சேனை கடதாசிக் கூட்டுத்தாபனம்) அன்புச் சகோதரி யும், காலஞ்சென்றவர்களான தருமலிங்கம், சிவசம்பு, மனோன்மணி மற்றும் பாலசிங்கம்(A.I), காலஞ்சென்ற சரஸ்வதி, மகாலிங்கம் (ஒய்வுபெற்ற ஆசிரியர்), அருந்தவம் (சுவிஸ்), நேசராணி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.12.2009) புதன்கிழமை பி.ப. 2 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*க.பஞ்சாட்சரதேவன் (அம்பிகா)*
*(கணவர்)*
Tel.*021 4591928, 0776102699*
*+41417501990 (சுவிஸ்)*

*காளி கோவில் ஒழுங்கை,*
*நீர்வேலி வடக்கு.* (91483)

## மரண அறிவித்தல்



### சங்கரப்பிள்ளை செல்வவிநாயகம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர், யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை)

இணுவிலைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் நெட்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை செல்வவிநாயகம் 11.12.2009 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.12.2009) புதன்கிழமை நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது தவிர்க்கமுடியாத காரணத்தால் நாளை (17.12.2009) வியாழக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நெட்டிலிப்பாய்,*
*கோண்டாவில்.* (91489)

தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# பொன்சேகாவின் க(ா)ரணம்

முல்லைத்தீவு இறுதிச் சமரின்போது வெள்ளைக்கொடி ஏந்தி சரணடையத் தயாராக வந்த விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் நடேசனும், புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவனும் இன்னும் சில புலிகளின் தலைவர்களும் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்றும்-

அத்தகைய நடவடிக்கைகளை எடுக்குமாறு களத் தளபதிகளுக்குப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவே உத்தரவிட்டார் என்றும் -

சாரப்படும் விதத்தில், முன்னாள் இராணுவத் தளபதியும், எதிர்க்கட்சிகள் தரப்பின் தற்போதைய ஜனாதிபதித் தேர்தலின் பொது வேட்பாளருமான ஜெனரல் சரத் பொன்சேகா கூறினார் என வெளியான கருத்துகளை அடுத்து ஏற்பட்ட பரபரப்பும், சூடும், அவ்விடயங்களை மறுத்து அடுத்த நாள் பொன்சேகா வெளியிட்ட அறிவிப்பைத் தொடர்ந்து அப்படியே அடங்கிப் போயின.

விடுதலைப் புலிகள் மீதான யுத்த வெற்றியை முன்னிறுத்தி இப்போது தென்னிலங்கையில் நடத்தப்படும் அரசியல் சூதாட்டக் களத்தில், இந்த விவகாரம் மிக முக்கிய அம்சமாக வெளிப்பட்டு, ஜெனரல் பென்சேகாவின் மறுப்போடு இப்போது தணிந்துபோயிருக்கின்றது. இது இப்படியே நிரந்தரமாக அடங்கிப்போகுமா என்பதுதான் கேள்வி.

'த சண்டே லீடர்' ஆங்கில வார இதழுக்கு ஜெனரல் பொன்சேகா தெரிவித்த தகவல் எனக் குறிப்பிட்டு அந்த வார இதழின் முன்பக்கத் தலைப்புச் செய்தியாக கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை அவ்விடயம் வெளியானமையை அடுத்து அன்று காலை முதலே இவ்விவகாரம் பெரும் சர்ச்சைக்குரியதாக உருவெடுத்துப் பல தரப்பிலும் பரபரப்பாகப் பேசப்படும் விடயமாயிற்று.

ஆனால், அவ்வளவு முக்கிய விடயம் குறித்து - அதுவும், இப்போது ஜனாதிபதித் தேர்தல் இவ்வளவு சூடு பிடித்து, அது தென்னிலங்கையின் சரித்திரப் போராட்டக் களமாகியிருக்கையில் - அதில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையே எதிர்த்து எதிரணியின் பிரதான வேட்பாளராகக் களமிறங்குகின்ற சரத் பொன்சேகா, அந்த விடயத்துக்கு ஒன்றரை நாள் கழித்து, பார்த்திருந்துவிட்டு, திங்கட்கிழமை பிற்பகலில் - சாவகாசமாக - மறுப்புத் தெரிவிக்க முற்பட்டமை ஏன், இத்தாமதத்தின் பின்னணி என்ன என்ற கேள்விகள் பலத்த சந்தேகத்தை உருவாக்கியுள்ளன.

அதுவும் -

* ஜெனரல் சரத் பொன்சேகா 'த சண்டே லீடர்' இதழுக்குத் தெரிவித்த கருத்துத் தொடர்பாக குற்றப்புலனாய்வுப் பொலிஸார் அவரை விசாரிக்க வேண்டும் என்ற தீர்மானத்தை அரசுத் தரப்பு எடுத்துள்ளதாகச் செய்தி வெளியான பின்னர் -

* இவ்விடயத்தில் பொன்சேகாவுக்கு எதிரான சட்ட நடவடிக்கை தொடர்பில் அரசுத் தலைமை சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற முடிவு செய்துள்ளது என்ற தகவல் கசிந்த பின்னர் -

* இவ்விடயம் மூலம், இதுவரை இராணுவத்துக்குக் கிடைத்த யுத்த வெற்றி, இப்போது காட்டிக் கொடுப்புக்கு உள்ளாகி விட்டது என்ற சாரப்பட தற்போதைய இராணுவத் தளபதி பகிரங்கமாகவே சீறியதைத் தொடர்ந்து -

* 'த சண்டே லீடர்' பேட்டியின்படி, அப்போதைய இராணுவத் தளபதி பொன்சேகாவை மீறி, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ களமுனைத் தளபதிகளைத் தாமே நேரடியாக உத்தரவு பிறப்பித்து வழி நடத்தியிருக்கின்றார் என்றும், அச்சமயம் இராணுவத் தளபதி பொன்சேகா யுத்த நடவடிக்கைகளின் முக்கிய விடயங்களில் இருந்து தள்ளிவைக்கப்பட்டிருந்தார் என்றும் ஜெனரல் பொன்சேகாவே ஒப்புக்கொள்வது வெளிப்படுவதால், தற்போதைய யுத்த வெற்றிகளுக்கு கோத்தபாய ராஜபக்ஷவே பொறுப்பு, பொன்சேகா அல்லர் என்பதை பொன்சேகாவே ஏற்றுக்கொள்ளுகின்றார் என்று, அந்தச் செய்தி தொடர்பான கருத்துநிலை தென்னிலங்கையில் உருவாகிவருவது குறித்து எச்சரிக்கையும் ஆலோசனையும் பொன்சேகாவுக்கு வழங்கப்பட்டமையை அடுத்து-

யுத்த களத்தில் நடந்தவற்றுக்கெல்லாம் இராணுவத் தளபதி என்ற முறையில் நானே பொறுப்பு எனக் கூறி, யுத்த களத்தில் வெள்ளைக் கொடியோடு எவரும் சரணடைய முன்வரவில்லை எனத் தெரிவித்து 'பல்டி' அடித்துவிட்டார் பொன்சேகா.

தென்னிலங்கை அரசியலில் - தேர்தலில் - வெற்றி பெறுவதற்காகத் தான் மெல்ல கசியவிட்ட தகவல், விஸ்வரூபம் எடுத்து, 'பூமராங்' ஆகத் திரும்பி சர்வதேசப் போர்க் குற்ற விசாரணைப் பூதமாகத் தென்னிலங்கையையே திருப்பித் தாக்கும் சாத்தியம் தென்பட்டதும், தென்னிலங்கைப் பேரினவாதத்துக்கே அதனால் ஆபத்துவரும் என்று கருதி, அதனைக் காப்பாற்ற அரசியல் வேறுபாடுகளை மறந்து, வழமைபோலப் பேரினவாதத் தலைவர்கள் வரிசையில் தாமும் ஒருவர் என்பதை நிரூபித்துக் காட்டும் வகையில், ஜெனரல் பொன்சேகாவும் இப்படி நடந்து கொண்டாரோ என்ற கருத்து தமிழர்கள் மத்தியில் இயல்பாகவே எழுகின்றது.

'நீர் இந்த விடயங்களை அம்பலப்படுத்த முற்பட்டால், உம்முடன் சம்பந்தப்பட்ட பல பிரதான துரும்புச் சீட்டுகளை நாம் தூக்கி அடித்து, வெளிப்படுத்த வேண்டிவரும்' - என்ற சாரப்பட, இறுதி யுத்த கால நடவடிக்கைகளின் உள்வீட்டு இரகசியங்கள் குறித்து சம்பந்தப்பட்ட தரப்புகளால் பொன்சேகாவுக்கு எச்சரிக்கைப் பாணியில் நினைவூட்டப்பட்டது எனவும், அதை அடுத்தே இந்த அதிரடிப் பின்வாங்கல் என்றும் சில மட்டங்களில் தகவல் கசிகின்றது.

அது உண்மையாகவும் இருக்கலாம், பொய்யாகவும் இருக்கலாம். ஆனால், 'த சண்டே லீடர்' பேட்டி தொடர்பாக ஒன்றரை நாள் தாமதம் காட்டி பொன்சேகா விடுத்த மறுப்பு, தேர்தலில் தென்னிலங்கைச் சிங்கள வாக்குகளைத் தக்க வைக்கவும், சத்தியத்துக்காக சிங்களத் தலைமைக்கு எதிராக உண்மையைக் காட்டிக் கொடுக்கும் ஆளல்லன் தான் என்பதை சிங்கள மக்களுக்கு நிரூபிக்கவும் அவர் எடுத்த நடவடிக்கைகளாகவே தமிழர்களால் கருதப்படும்.

# யாழ்.மாவட்ட பதிவாளர் திணைக்களத்தின் பதிவுகளை கணனிமயமாக்க 300 மில்லியன் ரூபா தேவை

## நிதியுதவி கிடைத்தால் துரித சேவையை வழங்க வழிஏற்படும்

யாழ்ப்பாணம்.டிசெ.16

யாழ்.மாவட்டத்தில் உள்ள மக்களின் இறப்பு, பிறப்பு மற்றும் காணிப்பதிவுகளை கணனி மயப்படுத்த 300 மில்லியன் ரூபா நிதி தேவைப்படுகிறது. இந்த நிதி கிடைக்குமானால் துரித சேவையினை வழங்க முடியும் என்று யாழ்.மாவட்டப் பதிவாளர் திணைக்களத்தின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ்.மாவட்டத்தில் உள்ள மக்களின் பிறப்பு, இறப்பு பதிவுகள் யாவும் தற்போது சாதாரண பதிவேடுகளிலேயே பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகின்கின்றன.

இதனால் இறப்பு, பிறப்பு பிரதிகளைப் பெறவருகின்ற மக்களுக்கு விரைவாகவும், நிறைவனாதுமான சேவையினை வழங்க முடியாமல் உள்ளது.

இத்தகைய பதிவுகள் யாவும் கணனிமயப்படுத்தப்படுமானால் பொது மக்களுக்கு விரைவாக சேவையினை வழங்க முடியும்.அத்துடன் பொதுமக்கள் தாம் விண்ணப்பிக்கும் ஆவணங்களுக்குரிய கணனிப்பிரதியினையும் பெற்றுக்கொள்ள ஏதுவாக இருக்கும்.

எனவே இத்தகைய பதிவுகள் கணனி மயப்படுத்தப்பட்டு மக்களுக்கு நிறைவான சேவையாற்றுவதற்கு 300 மில்லியன் ரூபா நிதி தேவைப்படுகிறது -என்றார். (04-9)

# சேந்தாங்குளம்-கீரிமலை வீதி பல வருடங்களின்பின் பொதுமக்கள் போக்குவரத்துக்காகத் திறக்கப்பட்டது

## அமைச்சர் டக்ளஸ் கலந்துகொண்டார்

யாழ்ப்பாணம், டிசெ.16

சேந்தாங்குளம் - கீரிமலை வீதி நேற்று முதல் பொது மக்கள் பாவனைக்காக திறந்துவிடப்பட்டது. சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கோரிக்கையை அடுத்து ஜனாதிபதி வழங்கிய அனுமதியைத் தொடர்ந்து சேந்தாங்குளம் சந்தி முதல் கீரிமலை வரையான இந்த வீதி நேற்றுத் திறந்துவிடப்பட்டது. மேற்படி வீதியை சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய ஆதீன கர்த்தா கு.நகுலேஸ்வரக் குருக்கள் ஆகியோர் திறந்து வைத்தனர். இந்த நிகழ்வில் யாழ். அரச அதிபர் கே.கணேஷ், தெல்லிப்பழை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.ராஜகோபால், பலாலி 515 ஆவதுபடைத் தளபதி பிராங்கிளின் றொட்றிக்கோ, கேணல் அலிகேவல உட்பட இராணுவ அதிகாரிகள், அந்தணர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர். வீதி பகல் 12.30 மணியளவில் அமைச்சரால் திறந்து வைக்கப்பட்டதை அடுத்து நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்ததுக்குச் சென்றனர். அங்கு விடே பூசைகள் இடம் பெற்றன. அதனைத் தொடர்ந்து கீரிமலைக் கேணியையும் சுற்றாடல் பகுதிகளையும் அமைச்சரும் ஏனைய பிரமுகர்களும் பார்வையிட்டனர். (50-111)

(படங்கள் 19 ஆம் பக்கத்தில்)

## ஆசிரியர் சங்கம் இன்று அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், டிசெ.16

வடக்கு மாகாண ஆசிரியர் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் இன்று முற்பகல் 10 மணிக்கு ஆரியகுளம் கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசிரியர்களை கலந்துகொள்ளுமாறு சங்கத்தின் தலைவர் எஸ். ஞானாகரன் தெரிவித்துள்ளார். (ஒ-1)

# தனங்கிளப்பு கண்ணகை அம்மன் ஆலயத்தில் 10 வருடங்களின் பின்னர் பூசைகள்

யாழ்ப்பாணம், டிசெ.16

தனக்கிளப்பு பெரும்படை கண்ணகை அம்பாள் ஆலயத்தில் பத்து வருடங்களின் பின்னர் பூசை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஆலயத்தில் பூசை செய்ய அனுமதியளிக்கப்பட்டதையடுத்து நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை விசேட அபிஷேகம் நடத்தப்படவுள்ளதால் அடியார்களை கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 1999 ஆம் ஆண்டு டிசெம்பர் 13 ஆம் திகதி அப் பகுதியிலிருந்து மக்கள் முழுமையாக வெளியேறியதை அடுத்து பல இந்து ஆலயங்கள் பூசைகளின்றி இருப்பது குறிப்பிடத்தக்கது. (1-207)

# கொழும்புத்துறைப் பகுதி குடியிருப்பாளருக்கு இலந்தைக்குளம் கிணற்றில் இருந்து குடிதண்ணீர்

யாழ்ப்பாணம், டிசெ.16

கொழும்புத்துறைப் பிரதேசத்துக்கு வதிரிபீட (இலந்தைக்குளம்) பிள்ளையார் கோயில் கிணற்றில் இருந்து குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த விநியோகத்தை மேற்கொள்வதற்கு முன்னோடியாக அந்தக் கிணற்றுத் தண்ணீரில் கொள்ளளவு தரம் என்பன பற்றிய அறிக்கையை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையிடம் யாழ். மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா கேட்டுள்ளார்.

இந்த அறிக்கையைப் பெற்ற பின்னர் அந்தக் கிணற்றில் இருந்து தண்ணீரைப் பெற்று, மேல் நீர்த்தாங்கியில் சேமித்து விநியோகம் மேற்கொள்வதென முடிவு செய்யப்பட்டுள்ளது என்று மேயரின் செயலாளர் அறிவித்துள்ளார்.

ஏற்கனவே உப்புக்குளம் பிள்ளையார் கோயில் கிணற்றில் இருந்து கொழும்புத்துறை மக்களுக்கு குடிதண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வந்தது. நாளடைவில் அந்தத் தண்ணீர் பாவனைக்கு உதவாததாக மாறியதிலிருந்து திருநெல்வேலியில் இருந்து பவுசர் மூலம் குடிதண்ணீர் எடுத்துவரப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகிறது. (ஒ-1)

## சாவகச்சேரிக்கு முஸ்லிம்கள் வருகை

யாழ்ப்பாணம், டிசெ.16

சாவகச்சேரி நகரப் பகுதிக்கு முஸ்லிம் குடும்பங்களைச் சேர்ந்த சிலர் மீள் குடியமர்வுக்காக வருகை தந்துள்ளனர்.

இவர்களின் வசிப்பிடங்கள், பள்ளிவாசல் போன்றவை சேதமடைந்த நிலையில் உள்ளதால் தற்போது நண்பர்களின் வீடுகளில் தற்காலிகமாக அவர்கள் தங்கி உள்ளனர். (ஒ-207)

# அகில இலங்கை ஓவியப் போட்டி

யாழ்ப்பாணம், டிசெ.16

உலக ஈரநில தினத்தை முன்னிட்டு மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் கடந்த 5 ஆம் திகதி மாணவர்களிடையே நடத்தப்பட்ட ஓவியப் போட்டியின் மாகாண மட்டத் தெரிவுகள் வெளியாகி உள்ளன. வடமாகாணத்தில் சிரேஷ்ட,கனிஷ்ட பிரிவுகள் இரண்டிலும் மூன்று இடங்களும் யாழ். மாவட்டத்துக்குக் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தெரிவாகியுள்ள மாணவர்களின் விவரம் வருமாறு:-

**சிரேஷ்ட பிரிவு**

வி.சந்திரதாஸ் விமல்- மானிப்பாய் இந்துக் கல்லூரி (முதலாமிடம்), போ.டேமினியன்ராஜ்- கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி (2 ஆம் இடம்), ந.கார்த்திக்-வைத்தீஸ்வராக் கல்லூரி (மூன்றாமிடம்)

**கனிஷ்ட பிரிவு**

ர.முகமட் யாசர் - வண்ணை நாவலர் வித்தி.(முதலாமிடம்),ஜெ.ஜனுஷா- யாழ். இந்து மகளிர் கல்லூரி (2 ஆம் இடம்), பா. பிரியந்தினி- சுண்டுக்குளி மகளிர் கல்லூரி (3 ஆம் இடம்)-

இந்த மாணவர்களுக்கான தேசிய மட்டப்போட்டி எதிர்வரும் 23 ஆம் திகதி புதன்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது. பிரஸ்தாப மாணவர்களை அன்றையதினம் காலை 7.30 மணிக்கு இல.104, டென்சில் கொப்பேக்கடுவ மாவத்தை, பத்திரமுல்லவில் உள்ள மத்திய சுற்றாடல் அதிகாரசபை தலைமை அலுவலகத்துக்கு சமுகமளிக்குமாறு உதவிப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஒ)

# நல்லூரில் தெற்குப்புற வீதியிலேயே இனி வாகனத் தரிப்பிடம்,சிறு கடைகள்

## யாழ்.மாநகர சபை நிர்வாகம் முடிவு

யாழ்ப்பாணம், டிசெ.16

நல்லூர் கந்தசுவாமி கோயில் முகப்பில் உள்ள வாகனத்தரிப்பிடங்கள், கடலைக் கடைகள் மற்றும் சிறு வியாபாரக் கடைகள் போன்றவற்றை ஆலயத்தின் தெற்குப்புற வீதியில் உள்ள வெற்றுக் காணியில் அமைத்து செயற்பட வைப்பதற்கு மாநகர சபை நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

பொதுமக்களின் வசதியைக் கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று மேயரின் செயலாளர் கு.பற்குணராஜா தெரிவித்தார்.

இதேவேளை - ஆலயத்தின் முகப்பு முன்புற வீதியை சுமார் 2.2 மில்லியன் ரூபா செலவில் கம்பித் தடுப்புப் போட்டு அழகுற அமைப்பது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இதற்காக வெளிநாடுகளில் வசிக்கும் புலம்பெயர்ந்த மக்களிடம் இருந்து அன்பளிப்பைப் பெறுவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-1)

## நாளை

| | |
|---|---|
| மார்கழி 02 | 17.12.2009 |
| | வியாழக்கிழமை |
| திதி: | பிரதமை |
| | மு.இ. 07.18 வரை |
| நட்சத்திரம்: | மூலம் |
| | மாலை 06.52 வரை |
| சுபநேரம்: | 07.52-09.22 வரை |
| ராகுகாலம்: | 01.52-03.22 வரை |

## வரணி விபத்தில் இளைஞர் காயம்

யாழ்ப்பாணம், டிசெ.16

வேகமாக வந்ததாகக் கூறப்படும் வான் அவ்வழியே வந்த மிதிவண்டியை மோதியதில் அதில் பயணித்த இளைஞர் காயமடைந்தார்.

நேற்றுமுன்தினம் வரணியில் இடம் பெற்ற இந்த விபத்தில் அதே இடத்தைச் சேர்ந்த எஸ்.வினோத் (வயது 18) என்பவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதாரவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

வடமாகாணத்தில் முதன்முறையாக ISO சர்வதேச தரச் சான்றிதழைப் பெற்றுள்ள நிர்மாணத்துறை முன்னோடிகளான யூரோவில் தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனத்தினர் மேலும் பல்வேறு சாதனைகளை நிலைநாட்டி, நிர்மாணத்துறையில் புதிய சகாப்தம் படைக்க வாழ்த்துகின்றோம்.

**மேரி கட்டட ஒப்பந்தகாரர்,**
**ஆனைக்கோட்டை** (சி/563284)


# மரண அறிவித்தல்கள்

## முத்துக்குமாரு குமாரசாமி



(ஊழியர்,பிள்ளையார் மெற்றலி வேக்ஸ்)

அராலி மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு குமாரசாமி 14.12.2009 திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.12.2009)புதன்கிழமை அவரின் இல்லத்தில் மு.ப.10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் பூனாவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அராலி மத்தி, வட்டுக்கோட்டை.* தகவல்:
T.P- 0776140077 (91486) குடும்பத்தினர்.

## திருமதி செல்லத்துரை பாக்கியம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர், அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம்)



கோப்பாய் தெற்கு, பழைய தபாற்கந்தோர் முன் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் 19/4, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை பாக்கியம் 11.12.2009 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை செல்லத்துரையின் (ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்) அன்பு மனைவியும் சிறீஸ்கந்த செல்வன் (காப்புறுதி ஆலோசகர், சிறீலங்கா இன்சூரன்ஸ்), குமாரசெல்வி, காலஞ்சென்ற சந்திரகுமாரி மற்றும் உருத்திரகுமாரி (உப அதிபர், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), விக்னகுமார் (London), பாஸ்கரகுமாரி(Canada),கௌரிகுமார் (Canada), விஷ்ணுகுமார் (Canada) ஆகியோரின் தாயும் காலஞ்சென்ற கனகாம்பிகை (Pensioner, Jaffna Kachcheri) மற்றும் அரியரட்ணம் (Pensioner, Jaffna Kachcheri, Nehrp world Bank Project, Trincomalee), சுரேந்திரகுமார் (Retired Engineer) சகுந்தலா, பாலராணி, சுகந்தி, சுதாகரன் (Engineer) ஆகியோரின் மாமியும் காலஞ்சென்ற துஷ்யந்தி (Bachelor of law (LLB), Attorney- at-law, Notary Public, Commissioner of Oaths, Company Secretary), கஜேந்தினி (B.Sc.- பகுப்பாய்வாளர் S.G.S.Lanka B.B.T- LTD), ஆரணி, Dr.கரிகஜன், கரிகேசன் (Computer research in Soft Ware Engineering), துவாரகா (IT), மாதங்கி, கௌசிகன், கௌசியன், கௌசிகா, எதுர்சன், சர்மிலா, பிரியன், சர்மினி, கிருஷ்ணா, குமரன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.12.2009) புதன்கிழமை நடைபெறவிருந்தது. ஆயினும் தவிர்க்க முடியாத காரணத்தினால் நாளை (17.12.2009) வியாழக்கிழமை ந.ப. 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*19/4, செட்டித்தெரு ஒழுங்கை,* தகவல்: பிள்ளைகள்,
*நல்லூர்.* (91487) பேரப்பிள்ளைகள்.

# படையினர் ஏற்பாட்டில் நத்தார் ஒளிவிழா

யாழ்ப்பாணம், டிசெ. 16

நத்தார் தினத்தை ஒட்டி 51 ஆவது படைப் பிரிவினரின் ஏற்பாட்டில் ஒளிவிழா நிகழ்வு எதிர்வரும் 27 ஆம் திகதி மாலை 6 மணிக்கு துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

குடாநாட்டு மக்களை இந்த நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு 51 ஆவது படைப் பிரிவின் கோரியுள்ளனர். (ஓ-1)

# புலமைப் பரீட்சையில் சித்திபெற்ற மாணவருக்கு வங்கியின் பரிசளிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.16

தேசிய சேமிப்பு வங்கியின் சுன்னாகம் கிளையில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட உள்ளன.

வங்கியில் சிறுவர் சேமிப்புக் கணக்கை வைத்திருக்கும் 2009 ஆம் ஆண்டு 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கே இப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. குறித்த மாணவர்கள் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் வங்கிக் கணக்குப் புத்தகத்துடன் வருகை தந்து பரிசில்களைப் பெற்றுக்கொள்ளும்படி அதன் முகாமையாளர் கேட்டுள்ளார். (ஓ-10)

# இணுவிலில் கடை உடைத்துத் திருட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 16

இணுவில் மத்திய கல்லூரிக்கு முன்பாகவுள்ள பலசரக்குக்கடை நேற்றுமுன் தினம் இரவு உடைக்கப்பட்டு பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

கடையின் பின்பக்கக்கதவை உடைத்து உட்புகுந்தவர்கள் அங்கிருந்த பால்மா மற்றும் பெறுமதியான பொருள்களை திருடிச் சென்றதாகச் சுன்னாகம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (1-86)

# அரியாலை சிறுவர்களுக்கு கல்வி உபகரணங்கள்

அரியாலை கிழக்கு, நாவலடி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் சங்க உறுப்பினர்களின் சிறுவர்களுக்கு சாந்திகம் உளவளத்துணை நிலையம் கல்வி உபகரணங்களை வழங்கியுள்ளது.

சங்கத் தலைவி திருமதி சண்முகராசா விக்கினேஸ்வரி தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் சங்கச் செயலாளர் வைத்திய கலாநிதி சர்மிலா தம்பிராசா, பொருளாளர் செல்வி விஜிதா தம்பிராசா ஆகியோர் பங்கு கொண்டு கல்வி உபகரணங்களை வழங்கினர். (ஒ-1)

## திருத்தி வாசிக்கவும்

நேற்றைய பதிப்பில் நான்காம் பக்கத் தில் வெளியான நவரத்தினம் செல்வநாயகியின் மரண அறிவித்தலில் அவரின் பிள்ளைகளில் இருவரான சுந்தரேஸ்வரன் (கனடா), சுந்தரேஸ்வரி ஆகியோரின் பெயர்கள் தவறுதலாகப் பிரசுரமாகவில்லை. அந்த இருவரதும் பெயர்களையும் சேர்த்து வாசிக்கவும்.


# சாவகச்சேரி லயன்ஸ் கழகம் மாபெரும் பொங்கல் விழா

எமது கழகம் எதிர்வரும் பொங்கல் விழாவை பாரம்பரிய விளையாட்டு விழாவாக கொண்டாட உத்தேசிக்கிறது. பின்வரும் விளையாட்டுக்கள் இடம்பெறவுள்ளன :-

1. மரதன் ஓட்டப் போட்டி
2. விரைவு நடைப் போட்டி
3. சைக்கிள் ஓட்டப் போட்டி
4. கிறிஸ்மரம், தலையணைச் சண்டை போன்றவை.

இவற்றில் பங்குபெற விரும்புவோர் தமது விருப்பத்தைக் கடிதம் மூலம் லயன் ப. செல்லத்துரை, கைதடி மேற்கு, கைதடி என்ற விலாசத்திற்கு 31.12.2009 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும். சகல விடயங்களிலும் கழகத்தின் முடிவே இறுதியானதாகும்.

தலைவர்,
(91469) சாவகச்சேரி லயன்ஸ் கழகம்.


# மரண அறிவித்தல்கள்

## திருமதி மனோன்மணிஅம்மா நாகநாதன்



கொக்குவில், பிரம்படியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மனோன்மணி அம்மா நாகநாதன் நேற்று (15.12.2009) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - கனகம்மா தம்பதிகளின் மகளும் அமரர் பொன்னையா நாகநாதனின் அன்பு மனைவியும் விஜயநாதன் (U.K), மகாநாதன் (I.S.A, யாழ்ப்பாணக் கல்வி வலயம்), விஜயமலர், செல்வநாதன் (U.K), யோகநாதன் (U.K), மாலினி, மனோகரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: N.மகாநாதன் (மகன்),
*மில்லேன், பிரம்படி.* R.செல்வராசா (மருமகன்),
*021 2225024* (91490) W.மாலினி (மகள்).

## திருமதி காங்கேயன் செல்லம்மா



உடுவில் தெற்கு , மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி காங்கேயன் செல்லம்மா நேற்று (15.12.2009) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற விசுவலிங்கம் காங்கேயனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்- செல்லாச்சி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் - சின்னத்தங்கம் தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்றவர்களான இராசம்மா, செல்லத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற ஆனந்தகுமாரசாமி (முன்னாள் ஊழியர், இலங்கைவங்கி) மற்றும் சதானந்தம் (கனடா), குகானந்தம் (கனடா), சிவானந்தம் (கனடா), சந்திராகாந்தி (அவுஸ்திரேலியா), இந்திராதேவி (கனடா), அருளானந்தம் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், லோஜினி, சிவலோககெங்கா (கெங்கா - கனடா), ரதி (கனடா), கலா (கனடா), சங்கரதாசன் (அவுஸ்திரேலியா), பாலசுப்பிரமணியம் (கனடா), ரேகா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஸ்ரீஜனனி (வலயக் கல்வி அலுவலகம், தென்மராட்சி), ஸ்ரீஜனன் (இலங்கை வங்கி பாதுகாப்பு ஊழியர்), பிரயாஜினி, சங்கீதா, நிருஷா, நிவேதன், துஷிக்கா, மஞ்சுதன், மைத்திரேஜி (சியா), மதுஷன், நிதனி, நிதர்சன், நிராஜ், சிந்துஜன், பவித்தா, பிரித்தா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.12.2009) புதன்கிழமை மு.ப 9.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிப்பிலி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உடுவில் தெற்கு, மானிப்பாய்.*
*தொ.பேசி : 077 8507339* தகவல்:
*021 7900742, 416-267-3298 (கனடா)* குடும்பத்தினர்.


# வலி.கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
# மீள் கேள்வி அறிவித்தல் - 2010

கீழ் குறிப்பிடப்படும் சந்தை, இறைச்சிக் கடைகளினை 2010ஆம் ஆண்டிற்கு குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 16.12.2009 - 23.12.2009 நண்பகல் 12 மணிவரை
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 24.12.2009 பி.ப 1 மணி வரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 24.12.2009 பிப 2 மணி
(கேள்விகள் திறந்து பரிசீலிக்கும் போது கேள்விதாரரும் சமுகமளிக்கலாம்)

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை 'செயலாளர், வலிகிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர்', எனும் முகவரிக்கும் இணைப்பிரதியை பிராந்திய 'உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.' எனும் முகவரிக்கும் எதிர்வரும் 24.12.2009 நண்பகல் 1 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

| இல. விவரம் | கேள்விப் பத்திரப் பணம் (வற் நீங்கலாக) | மீளளிக்கப்படக் கூடிய வைப்புப்பணம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|
| அச்சுவேலி உப அலுவலகம் | | | |
| 01. அச்சுவேலி ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 38,000.00 |
| புத்தூர் உப அலுவலகம் | | | |
| 01. புத்தூர் பொதுச் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 6,900.00 |
| 02. ஆவரங்கால் பொச்சந்தை | 100.00 | 250.00 | 12,350.00 |
| நீர்வேலி உப அலுவலகம் | | | |
| 01. நீர்வேலி ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 9,500.00 |
| 02. நீர்வேலி பொதுச்சந்தை | 100.00 | 250.00 | 7,600.00 |
| 03. நீர்வேலி மீன்சந்தை | 100.00 | 250.00 | 4,750.00 |
| கோப்பாய் உப அலுவலகம் | | | |
| 01. கோப்பாய் வடக்கு பொதுச்சந்தை | 200.00 | 500.00 | 14,250.00 |
| 02. கோப்பாய் வடக்கு மாட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 71,250.00 |
| 03. கோப்பாய் வடக்கு ஆட்டிறைச்சிக்கடை | 100.00 | 250.00 | 2,850.00 |
| உரும்பிராய் உப அலுவலகம் | | | |
| 01. உரும்பிராய் மத்திய சந்தை | 500.00 | 2,000.00 | 33,250.00 |
| 02. ஊரெழு ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 6,000.00 |

குறிப்பு - மேலதிக விவரங்களையும் கேள்விப் பத்திரப் படிவங்களையும் உப அலுவலகங்களில் [illegible]
வலி.கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர்
16.12.2009 (சி/563258) தம்பையா ந. ராஜா
செயலாளர்.


# வாகனங்கள் செல்வதில் சிரமம்

நவாலி, டிசெ. 16

மானிப்பாய் பிரதேசஆனைக்கோட்டை அரசினர் வைத்திய சாலைக்கு, முன்பாக வுள்ள சில மின்கம்பங்களினால் கனரக வாகனங்கள் செல்வதில் பல சிரமங்கள் ஏற்பட்டுள்ளன. (1-100)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் வேலுப்பிள்ளை செல்வராசா

(ஓய்வுபெற்ற வைத்தியசாலை ஊழியர்)

**தோற்றம்**
**01.02.1937**

**மறைவு**
**16.11.2009**

இல்லற தர்மமதை இனிதாகக் கைக் கொண்டு
நல்லதோர் வாழ்வுதனை நலமோடு வாழ்ந்து
வல்ல பல பணிதனை மனை மக்களோடாற்றி
மெல்லவே இறை ஏந்த எம் அன்புத் தெய்வமே!
உம் ஆத்ம சாந்திக்காய் எந்நாளும் தொழுதிடுவோம்.

*அராலி கிழக்கு,* இராசேந்திரம்
*வட்டுக்கோட்டை.* (91481) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலேரியாக் காய்ச்சல் பீடிக்கப்படுவோரின் எண்ணிக்கை யாழ்ப்பாணத்தில் குறைவடைந்தது

## தொடர்ச்சியான விழிப்புணர்வுச் செயற்பாடுகளே காரணம்

யாழ்ப்பாணம்,டிசெ.16

குடாநாட்டில் மலேரியா நோய்த்தாக்கம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. அதனால் மலேரியா காய்ச்சலினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை வெகுவாகக் குறைவடைந்துள்ளது.

யாழ்.சுகாதாரத் திணைக்களத்தின் மலேரியா தொற்றுநோய் தடுப்பு இயக்கத்தின் வைத்திய பொறுப்பதிகாரி இத்தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ்.குடாநாட்டில் முன்னர் மலேரியா நோயின் தாக்கம் அதிகரித்துக் காணப்பட்டது.

இந்த ஆண்டு மலேரியா நோயின் தாக்கத்துக்குள்ளானவர்கள் மூன்றுபேர் என இனங்காணப்பட்டனர்.

கடந்த காலங்களை விட இம்முறை இத்தொகை குறைந்து காணப்படுகிறது. மலேரியா நோய்த் தாக்கம் தொடர்பாக வைத்திய அதிகாரிகள், பொது சுகாதார பரிசோதகர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள் மற்றும் சுகாதாரத் தொண்டர்கள் மேற்கொண்ட விழிப்புணர்வு நடவடிக்கைகள் காரணமாக இத்தகைய மாற்றம் ஏற்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டுக்குள் யாழ்.குடாநாட்டில் மலேரியா நோயின் தாக்கம் முழுமையாகக் கட்டுப்படுத்தப்படும் - என்றார். (50-9)

# பொதுசன மாதாந்த உதவிப் பணக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,டிசெ.16

வலிகாமம் கிழக்கு, கோப்பாய் பிரதேச செயலக பிரிவில் மீளக் குடியேறியவர்களுக்கான பொதுசன மாதாந்த உதவிப் பணக் கொடுப்பனவுகள் வழங்குவதற்கான பட்டியல் தபாலகம், உப தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்டவர்கள் கொடுப்பனவுகளை எதிர்வரும் 19ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்னர் உரிய தபாலகங்களில் பெற்றுக்கொள்ளுமாறு கோப்பாய் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் அறிவித்துள்ளார். (50-204)

## வலி.தென்மேற்கில் இயங்கும்

# செஞ்சிலுவைச் சங்கத்தின் அலுவலகத்துக்கு ஒரு லட்சம் ரூபா பெறுமதியான தளபாடங்கள்

சண்டிலிப்பாய்,டிசெ.16

வலி.தென்மேற்குப் பிரிவில் இயங்கி வரும் செஞ்சிலுவைச் சங்கத்திற்கு கனேடிய செஞ்சிலுவைச் சங்கம் ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான காரியாலயத் தளபாடங்களை வழங்கியுள்ளது.

ஆனைக்கோட்டைச் சந்திக்கு அருகில் இயங்கிவரும் மேற்படி சங்கம் கணனிக் கல்வியை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் இளைஞர், யுவதிகளுக்கு கணனிப் பயிற்சி நெறியை நடத்தி வருகின்றது.

சங்கத்தின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டும், கணனிப் பயிற்சி நெறியில் கலந்து கொள்ளும் மாணவர்களின் நன்மை கருதியும் கனேடிய செஞ்சிலுவைச் சங்கம் ஒரு லட்சத்து 25ஆயிரம் ரூபா பெறுமதியான கதிரைகள், மேசைகள், அலுமாரிகள் உட்படக் காரியாலயத்திற்குத் தேவையான பல தளபாடங்களை வழங்கியுள்ளது. (50-115)




# சமூக பாதுகாப்புச்சபை ஓய்வூதியத் திட்டத்தில் கரவெட்டிப் பிரதேச செயலகம் முதலிடம்

யாழ்ப்பாணம்,டிசெ.16

கரவெட்டிப் பிரதேச செயலகம் சமூக பாதுகாப்புச் சபையின் 2008ஆம் ஆண்டுக்கான ஓய்வூதியத் திட்டத்தில் அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்றுள்ளது.

இது தொடர்பான அறிவித்தலைச் சமூக பாதுகாப்புச் சபையின் தலைமையலுவலகம் கரவெட்டிப் பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைத்துள்ளது.

2008ஆம் ஆண்டின் சமூக பாதுகாப்புச் சபை ஓய்வூதியத் திட்டத்தில் அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்ற கரவெட்டிப் பிரதேச செயலகத்துக்கான விருது விரைவில் வழங்கப்படவுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (50-224)

# பரீட்சைப் பெறுபேறு மீள் மதிப்பீட்டுக்கான விண்ணப்பத்தை 24ஆம் திகதி வரை அனுப்பலாம்

கொழும்பு,டிசெ.16

ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளை மீள் மதிப்பீடு செய்வதற்கான விண்ணப்ப முடிவுதிகதி இம்மாதம் 24ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்கவே மேற்படி திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

மேலும் பாடசாலையைச் சேர்ந்த பரீட்சார்த்திகள் பாடசாலை அதிபர்கள் ஊடாகவும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தனியாகவும் விண்ணப்பங்களை அனுப்பி வைக்க முடியும்.

பாடசாலை அதிபர்கள் பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் அனைத்தையும் ஒரே உறையில் இட்டு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்க வேண்டும் என்றும் பரீட்சைத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (50-16)

## முகாம்களிலிருந்து விடுவிக்கப்பட்டு மீளக் குடியேறியவர்களில்

# கொடுப்பனவு கிடைக்கப் பெறாதவர்கள் அமைச்சருடன் தொடர்புகொள்ள முடியும்

யாழ்ப்பாணம்,டிசெ.16

நலன்புரி முகாம்களிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ள மீள் குடியமர்த்தப்பட்டுள்ளவர்களில் இதுவரை கொடுப்பனவுகள் கிடைக்கப் பெறாதவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளலாம் என்று சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா அறிவித்துள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் மீள் குடியமர்த்தப்பட்ட மக்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்டு மீள் குடியமர்த்தப்பட்ட மக்களுக்கான கொடுப்பனவுகள் கட்டம் கட்டமாக வழங்கப்பட்டு வருகின்றன. எனவே கொடுப்பனவுகள் எதுவும் இதுவரை கிடைக்கப் பெறாதவர்கள் யாழ்.ஸ்ரான்லி வீதியில் உள்ள சமூக சேவைகள் அமைச்சின் யாழ்ப்பாண அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அவ்வாறு தகவல் எனக்கு கிடைக்கப் பெறும் பட்சத்தில் உரியவர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் - என்றார். (50-9-111)

# சங்கத்தானை - பெருங்குளம் வீதி 25 வருடங்களாக திருத்தப்படாத நிலையில்

யாழ்ப்பாணம்,டிசெ.16

சாவகச்சேரி, சங்கத்தானை - பெருங்குளம் வீதி கடந்த 25 வருடங்களாகத் திருத்தப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.

சரசாலை, மட்டுவில், கல்வயல், கெருடாவில் போன்ற பகுதிகளைச் சேர்ந்த சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்கள் இவ் வீதியையே பயன்படுத்தி வருவதாகவும் சாவகச்சேரி வைத்தியசாலைக்குச் செல்லும் இப்பிரிவுகளைச் சேர்ந்த மக்களும் இவ்வீதியையே பயன்படுத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மழை காலங்களில் இவ் வீதியைப் பயன்படுத்துவோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (1-207)

# யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்தோருக்குக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,டிசெ.16

நலன்புரி முகாம்களிலிருந்து விடுவிக்கப்பட்டு யாழ்.பிரதேசசெயலர் பிரிவில் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ள 922 குடும்பங்களுக்கான கொடுப்பனவுகள் நேற்று செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டன.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா இந்த நிகழ்வில் கலந்துகொண்டு மீளக்குடியமர்ந்தோருக்கான கொடுப்பனவுகளை வழங்கினார்.

ஒவ்வொரு குடும்பங்களுக்கும் தலா 5 ஆயிரம் ரூபா அமைச்சரால் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ்.பிரதேச செயலர் திருமதி சு.தெய்வேந்திரம் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்த மக்களுக்கான 2ஆம் கட்ட கொடுப்பனவுகளை அடுத்த மாத முற்பகுதியில் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அங்கு தெரிவித்தார். (50-9-111)

# கட்டாக்காலி கால்நடைகளின் நடமாட்டத்தால் யாழ்.நகரின் பிரதான வீதிகளில் அடிக்கடி விபத்துகள்

யாழ்ப்பாணம்,டிசெ.16

யாழ்.நகரின் பிரதான வீதிகளில் கட்டாக்காலிகளாக அலையும் கால் நடைகளால் வீதி விபத்துகள் ஏற்படுவதுடன் வாகனங்களைச் செலுத்துவதிலும் பொது மக்கள் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். ஆஸ்பத்திரி வீதி, கே.கே.எஸ் வீதி, பிரதான வீதி, முற்றவெளி மற்றும் பண்ணைப் பகுதிக்கும் செல்லும் வீதிகள் ஆகியவற்றில் கட்டாக்காலிக் கால்நடைகளின் நடமாட்டம் வெகுவாக அதிகரித்துக் காணப்படுகின்றது.

இந்தக் கட்டாக்காலிக் கால்நடைகள் பிரதான வீதிகளில் இரவு, பகல் பாராது நடமாடுவதால் போக்குவரத்தில் சிரமங்கள் ஏற்படுவதுடன் கால் நடைகள் திடீரென வீதிகளுக்குக் குறுக்காக ஓடுவதால் விபத்துகளும் ஏற்படுவதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே காட்டாக்காலிகளாகத் திரியும் இந்தக் கால்நடைகளை அவற்றின் உரிமையாளர்கள் கட்டி வளர்க்க வேண்டும் எனவும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தக் கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதற்கு யாழ்.மாநகரசபை நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (50-224)



புனரமைப்புச் செய்யப்பட்ட காரைநகர் கசூரினாக் கடற்கரையை மக்கள் பாவனைக்கு திறந்து வைக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றபோது வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்ட விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதை முதலாவது படத்திலும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரையாற்றுவதையும் வடமாகாண ஆளுநர் மரக்கன்று ஒன்றினை நடுவதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். மாநகர சபை ஊழியர் சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கம்
## சிற்றுண்டிச்சாலைக் குத்தகைக்கான
## கேள்வி அறிவித்தல் - 2010

யாழ். மாநகரசபை வளாகத்தினுள் பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்திருக்கும் மேற்படி சங்கத்திற்குச் சொந்தமான சிற்றுண்டிச் சாலைக் கட்டடமும் தளபாடங்களும், சமையல் பாத்திரங்களும் 01.01.2010 முதல் 31.12.2010 வரையான ஒருவருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் இத்தால் கோரப்படுகின்றன.

1. கேள்விப்படிவக் கட்டணம் ரூபா 300/= ஐயும் மீளளிக்கப்படக் கூடிய கேள்விப் பிணைப்பணமாக ரூபா 1000/= ஐயும் செலுத்துவதன் பேரில் வழங்கப்படும் கேள்விப் படிவங்களில் கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

2. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்படிவங்களை மேற்படி சங்க அலுவலகத்தினுள் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியினுள் சேர்ப்பித்தல் வேண்டும்.

3. வருடாந்தம் ஆகக்குறைந்த கேள்வித் தொகை ரூபா 100000/= ஆகும்.

4. கேள்விப் படிவங்கள் 21.12.2009 ஆம் திகதி திங்கள் பிற்பகல் 3 மணிவரை விநியோகிக்கப்பட்டு 24.12.2009 ஆம் திகதி வியாழக் கிழமை நண்பகல் 12 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

5. கிடைக்கப்பெறும் கேள்விகள் 24.12.2009 ஆம் திகதி வியாழக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்குத் திறக்கப்படும் .

6. மேலதிக விவரங்கள் யாழ். மாநகரசபை அலுவலகத்தில் இயங்கும் மேற்படி சங்க அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

நா. இரகுமார்,
தலைவர்.

15.12.2009 (சி/563282)


IDM
IDM Affiliated University College
Chavakachcheri Campus
புதிய கல்வியாண்டு 2010
Undergraduate Programmes
BTEC-HND in Software Development
BTEC-HND in ICT Systems Support
BTEC-HND in Business Management
Foundation Degree Programmes/Diploma
BTEC-Diploma in ICT
BTEC-Diploma in Buss. Management
BTEC-Diploma in Computer Hardware
BTEC-Diploma in Multimedia
சிறுவர்களுக்கான கணனிப் பாடநெறிகள் E-KIDS & TEENS
Diploma in Web Application Development, Web Design, Graphics Designing, Maya, 3D MAX, Video Editing, Java, Vb.net
புதிய பிரிவுகள்: 20-12-2009 ,24-12-2009 28-12-2009,02-01-2010 9.00 am
for more details: 0217390030 0217390035
IDM -Chavakachcheri Campus
No-5-1/1 Kandy Road, Chavakachcheri

Computer Express
Institute of Information Technology
கணனி ஆர்வலர்களே!
பாடசாலை மாணவர்களே!
ஊழியர்களே! தாங்கள் நலன்கருதி
யாழ்நகரில் முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன்
தொழில்சார் கணனி கற்கைநெறிகள் ஆரம்பமாகின்றன...
Professional Diploma in Microsoft Office 3500/= 3 Months
Diploma in Printing Technology & Desk-top Publishing 22500/= 4500/= 4 Months
Diploma in Server Technology & Web Page Designing 22500/= 4500/= 3 Months
Diploma in Graphic Designing & Adverdisement Marketing 22500/= 4500/= 4 Months
Diploma in Hardware Engineering & Net working 20000/= 4000/= 3 Months
Diploma in Computerized Accounting & E-Commerce 22500/= 4500/= 3 Months
Diploma in Computer Science & Programming 22500/= 4500/= 4 Months
Diploma in Auto CAD & Arcetecture Designing 22500/= 4500/= 3 Months
Honours Diploma in Information Technology 32500/= 6500/= 6 Months
80% off
100% செய்முறைப்பயிற்சி ஒவ்வொரு மாணவர்களின் மீதும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்
50 % Advance Courses
Diploma in Film Technology & Video Editing 10000/= 5000/= 4 Months
Diploma in Studio Technology & Multi Media 9500/= 4750/= 4 Months
No.167, Kasthuriyar Road, Jaffna.
Tel: 021 222 8250
புதிய பிரிவுகள் ஆரம்பம்
Batch I 18-12-2009 10Am or 2PM
Batch II 19-12-2009 11Am or 2PM
Batch III 20-12-2009 11Am or 2PM
Batch IV 23-12-2009 10Am or 2PM


## சாரணிய ஆணையாளர்களுக்கான கலந்துரையாடல் நாளை

யாழ்ப்பாணம், டிசெ.16

யாழ்.மாவட்டப் பெண் சாரணிய அமைப்பின் மாவட்ட ஆணையாளர், பிரதேச மட்ட ஆணையாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை வியாழக்கிழமை மாவட்ட ஆணையாளர் திருமதி நீ.தர்மகுலசிங்கத்தின் இல்லத்தில் முற்பகல் 11 மணிக்கு இடம்பெறவுள்ளது.

மலேசியப் பெண் சாரணிய அமைப்பின் சர்வதேச ஆணையாளர் ஜெயதேவி சுப்பிரமணியம் கலந்துகொண்டு முக்கிய விடயங்கள் தொடர்பாக கலந்துரையாட விருப்பதனால் சம்பந்தப்பட்டவர்கள் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (50-14-16)

## 78 இலங்கையரை ஏற்க சுவீடன் மறுப்பு

சிட்னி, டிசெ.16

''ஓசியானிக் வைக்கிங்'' கப்பலில் இருந்து வெளியேறிய 78 பேரை மீள தமது நாட்டில் குடியமர்த்துவதற்கு முன்வைக்கப்பட்ட கோரிக்கையை சுவீடன் அரசாங்கம் நிராகரித்துள்ளது.

இந்த வருடத்தில் மாத்திரம் அதிக அளவிலான சட்டவிரோத படகுகள் அவுஸ்திரேலியாவை அடைந்துள்ள நிலையில் அகதிகள் எண்ணிக்கையும் கூடியுள்ளதாலேயே இந்த நிராகரிப்பு இடம்பெற்றுள்ளது.

இதற்கிடையில் கடந்த வெள்ளிக்கிழமை 10 இலங்கைத் தமிழர்கள் அடங்கிய அகதிகள் குழு ஒன்று பிரிஸ்போர்ண் கடற்பரப்பை வந்தடைந்தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 12வாரங்களுக்குள் குடியமர்த்தப்படுவதாக அவுஸ்திரேலிய அரசாங்கம் வழங்கிய உறுதிமொழியை அடுத்து, இந்தோனேசியாவில் தரையிறங்கிய ''ஓசியானிக் வைக்கிங்'' அகதிகள் சம்மதித்தனர்.

இந்த நிலையில் ஐக்கிய நாடுகள் சபையின்அகதி குடியமர்தல் ஒப்பந்தத்தில் உள்ள நாடு என்ற அடிப்படையில் சுவீடனில் அவர்களை குடியமர்த்த முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன.

எனினும் அந்த கோரிக்கையை சுவீடன் அரசாங்கம் நிராகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (50)

## தென்மராட்சியில் சமுர்த்தி நிவாரணம்

தென்மராட்சிப் பிரதேச சமுர்த்திப் பயனாளிகளுக்கான டிசெம்பர் மாத உலர் உணவுப் பொருள்கள் அந்தந்தப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக்கிளைக் கடைகளில் வழங்கப்படுகின்றன. எதிர்வரும் 24ஆம் திகதிக்கு முன்னர் பொருள்களைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (1-207)

## யாழ்ப்பாணம் மாநகரசபை ஆதனவரி அறிவித்தல் - 2010

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 252ஆம் அத்தியாயத்தின் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரங்களின் படி யாழ்ப்பாணம் மாநகர சபை பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டுள்ளமை இத்தால் அறியத்தரப் படுகின்றது.

1. மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 238ஆம், 247ஆம் பிரிவுகளின் பிரகாரம் நேர்முன் ஆண்டான 2009ஆம் ஆண்டிற்கான பெறுமதி மதிப்பீட்டை அல்லது ஆதன மதிப்பீட்டையே 2010 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடாக அல்லது ஆதனவரி மதிப்பீடாக கொள்ளுதல்.

2. 2010ஆம் ஆண்டிற்கான வீதவரிப்பணங்கள் யாவும் நான்கு சம கந்தாய தவணைகளில் 2010 ஆம் ஆண்டு முறையே மார்ச் 31, யூன் 30, செப்ரெம்பர் 30, டிசெம்பர் 31 ஆகிய திகதிகளன்றோ அல்லது அதற்கு முன்னரோ செலுத்தப்படல் வேண்டும்.

3. 2010 ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ வருடாந்த வீதவரிகள் முழுமையாகச் செலுத்தப்பட்டால் ஒரு பத்து சதவீதம் (10%) கழிவு அனுமதிக்கப்படும் என்பதுடன் வீதவரி வருமதியாகவுள்ள அந்தக் கந்தாயத்திற்குரிய முதல் மாதத்திற்குள்ளாக கந்தாயவரி செலுத்தப்பட்டால் ஒரு ஐந்து சதவீதம் (5%) கழிவு அனுமதிக்கப்படும்.

4. மேற்கூறப்பட்ட பந்தி 2இல் குறிப்பிடப்பட்ட உரிய திகதிகளுக்கு முன்பு குறித்த வீதவரிகளைச் செலுத்தாதவிடத்து வெறும்காணிகள் மற்றும் வதிவிடங்கள் மீது பதினைந்து (15%) சதவீதத்திலும் ஏனைய இடங்கள் மீது இருபது (20%) சதவீதத்திலுமான விறாத்துச் செலவு அறவிடப்படும்.

5. மேலும் புதிதாக காணி கட்டடங்களைக் கொள்வனவு செய்வோர் அவற்றுக்கான ஆதன பெயர் மாற்றங்களை உடனுக்குடன் மேற்கொள்ளுமாறும், புதிய கட்டடங்களைக் கட்டும் போதும், சேதமடைந்த ஆதனங்களைத் திருத்தம் செய்யும் போதும் மாநகர சபையின் அனுமதியினைப் பெற்றுக்கொள்ளுமாறும் அறிவுறுத்துகின்றேன்.

மாநகர சபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
2009.12.15 (சி/563236)

திருமதி.யோகேஸ்வரி பற்குணராசா.
மாநகர முதல்வர்,
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

## நல்லடக்க நினைவு வழிபாடு



சண்டிலிப்பாய் தென்னிந்தியத் திருச்சபையின் மூத்த உறுப்பினரும்,
செனட் மகா சபையின் அங்கத்தவருமான

**அமரர் C.D சின்னக்கோன்**

அவர்களின் நல்லடக்க நினைவு வழிபாடு இன்று (16.12.2009) புதன்கிழமை பி.ப. 4 மணிக்கு சண்டிலிப்பாய் தென்னிந்தியத் திருச்சபையில் நடைபெறும். அன்னாரின் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

திருச்சபையினர்,
திருச்சபை ஊழியன்
அருட்பணி.செபஸ்டியன் அன்ரனி.

தென்னிந்தியத் திருச்சபை,
சண்டிலிப்பாய். (91480)

## மரண அறிவித்தல்கள்

### செல்லர் நாகராசா

(உரிமையாளர்-ஆட்டிறைச்சிக்கடை, இல 01, கோட்டி, யாழ்ப்பாணம்)



கோவில் ஒழுங்கை, நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லர் நாகராசா நேற்று (15.12.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னவி-முத்து தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வைரமுத்து - தெய்வானை தம்பதியினரின் அன்பு மருமகனும், தவயோகத்தின் அன்புக் கணவரும், சந்திரகுமார் (சுவிஸ்), செல்வகுமார், கிசோக்குமார் (லண்டன்), மங்களேஸ்வரி (மங்களம்), சுசிகலா (லண்டன்), சசிக்குமார் (சசி), டயானி, ராகினி ஆகியோரின் அன்புத் தந்தையும், பரிமளாதேவி (சுவிஸ்), செல்வநாயகி (பட்டு), கௌசலா (கௌரி-லண்டன்), ஆனந்தராசா (சிங்காரம் மத்தியஸ்தர் -உதைபந்தாட்ட லீக், யாழ்ப்பாணம்), சிவபாலன் (லண்டன்), காமினி தெய்வேந்திரம் ஆகியோரின் அன்பு மாமனும், சுவிஸில் வசிக்கும் நிதுசன், அனுசன், மற்றும் கனிஸ்ரலா (சென்.ஜோன்ஸ் அன்புலன்ஸ், யாழ்.போதனா வைத்தியசாலை), கபில்நாத், கபஸ்ரீனா, வினுஸ்ரலா, லண்டனில் வசிக்கும் விதுசா, அபினாஸ் மற்றும் அனுஸ்ரலா, சுஜிபன், ஜஸ்வின், கபிசன், நிவேதன் மற்றும் கோபிராஜ், ரோகினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழைய முகவரி:
56/12, கோவில் ஒழுங்கை,
நாவாந்துறை.

புதிய முகவரி:
48, காதி அபூபக்கர் வீதி,
நாவாந்துறை.

தகவல்:
குடும்பத்தினர்

தொ.பே: 0776691279 (சிங்காரம்),
0777070676 (சசி), 021 2229223 (91473)

### பண்டிதர் தம்பிப்பிள்ளை மார்க்கண்டு

(முன்னாள் அதிபர்,யா/நவாலி மகாவித்தியாலயம்)



ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், ''செந்தில்'' கோயில் வீதி, கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் தற்போது லண்டனில் வசித்தவருமான பண்டிதர் தம்பிப்பிள்ளை மார்க்கண்டு (2009.12.13) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் பரமேஸ்வரியின் (யா/கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலய முன்னாள் ஆசிரியை) அன்புக் கணவரும், உதயகுமார், ரஞ்சனா, யசோதரா ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான தம்பிஐயா, மகேஸ்வரி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:
சி.நடராசப்பெருமாள்
(மைத்துனர்)

மணியர்பதி வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில். (91476)


திருமண சேவை இணையத்தளத்தினூடாக
உள்நாட்டிலும், UK, USA, Canada, Denmark, Germany மற்றும் France போன்ற வெளிநாடுகளிலும் வசிக்கும் எம்மவர்கள் வாழ்க்கைத் துணையைத் தேட இணையத்தளத்தைப் பயன்படுத்துவது வழக்கம். இணையத்தளத்தில் உங்கள் விபரங்களையும் பதிவு செய்து கொள்வதன் மூலம் தாங்கள் தங்கள் வாழ்க்கைத் துணையைத் தேடிக்கொள்ள வாய்ப்புகள் அதிகமாகும். எனவே உங்கள் விபரங்களை இணையத் தளத்தில் பதிவு செய்து கொள்வதற்கும், மேலும் விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்கும் எம்மைத் தொடர்புகொள்ளவும்.
INTERNET
Reg. No.W/A44834
Bristol Cyber Cafe
8/3/4, Bristol Street, Colombo-01. Tel: 2 39 39 19 / 077 427 6579


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




16.04.1986

✱ இணைப்புச் சார்ந்த தீர்வையே இந்திய அரசு வலியுறுத்தும் என்று புதுடில்லி வட்டாரங்கள் கருத்து வெளியீடு.

✱ இலங்கை அரசின் புதிய யோசனைகள் அடங்கிய திட்டத்துடன் வெளிவிவகார அமைச்சர் ஏ.சி.எஸ். ஹமீட் இந்தியாவுக்குப் பயணம்.

✱ நாட்டின் சகல இன மக்களுக்கும் ஏற்புடையதான விதத்தில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுமென தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அதுலத்முதலி தெரிவிப்பு.

17.04.1986

✱ பேச்சுக்கள் நடத்த இறுதிச் சந்தர்ப்பம் இதுவே என்பதால் இதனைச் சரியான வகையில் பயன்படுத்துமாறு இலங்கை அரசுக்கு இந்தியா வலியுறுத்தும் என இந்திய அரசியல் தரப்புக்கள் கருத்துத் தெரிவிப்பு.

✱ ஜனாதிபதி ஜே. ஆரும் மக்களும் ராஜீவ் காந்தியில் நம்பிக்கை இழப்பது போல் தெரிவதாக அமைச்சர் தொண்டமான் தெரிவிப்பு.

18.04.1986

✱ இலங்கை அரசின் புதிய யோசனைகள் பலனளிக்கக்கூடியவையாக அமையப் போவதில்லை என த.வி.கூட்டணிச் செயலாளர் அமிர்தலிங்கம் கருத்து.

✱ மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கு உள்ளாகியிருக்கும் இலங்கை அரசின் பிரதிநிதிகளுடன் அவுஸ்திரேலிய அரசு தொடர்பு பேணுவது தவறென அவுஸ்திரேலிய செனெட் சபை எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு.

✱ இலங்கையில் இடம் பெறும் தேர்தல்களை மேற்பார்வையிட கண்காணிப்புக் குழுவொன்றை அனுப்பிவைக்குமாறு சிறிமாவோ, சர்வதேச ஜூரர் சபையிடம் வேண்டுகோள்.

19.04.1986

✱ திருகோணமலை முதலிக் குளத்தில் நிலக்கண்ணிவெடித் தாக்குதலில் எட்டு விமானப்படை வீரர்கள் பலி.

✱ இந்திய வெளியுறவுத்துறை உயரதிகாரிகள் ஜி.பி.பார்த்தசாரதி, ஏ.பி. வெங்கடேஸ்வரன், ரொமேஷ் பண்டாரி ஆகியோர் அடங்கிய உயர்மட்டக்குழு இலங்கையின் புதிய யோசனைகள் குறித்து ஆராயும்.

20.04.1986

✱ இலங்கை அரசும் அந்நாட்டுத் தமிழரும் சிவில் யுத்தமொன்றை நோக்கிச் செல்வதாக உலகப் பிரசித்திபெற்ற 'சயன்ஸ் மொனிட்டர்' சஞ்சிகை விமர்சிப்பு.

✱ அரசின் புதிய யோசனைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள மாகாணசபைக்கான அதிகாரங்களை அரசு வேண்டிய நேரத்தில் ரத்துச் செய்ய இயலுமென ஏ.எ.பி செய்தி ஸ்தாபன அறிக்கையில் விவரிப்பு.

✱ மூதூர் கட்டைபறிச்சான் கிராமத்தில் மூன்று தமிழ்ப் பொதுமக்களது சடலங்கள் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் கண்டுபிடிப்பு.

21.04.1986

✱ கந்தளாய்க் குளம் உடைப்பெடுத்ததால் பல கிராமங்கள் நீரில் மூழ்கின. நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருக்கலாம் என அச்சம்.

✱ இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவேண்டுமென ஜனாதிபதி ஜே.ஆர் கூறிவருவது, உலக, இந்திய அபிப்பிராயங்களைத் திசை திருப்பும் உத்தி என எஸ்.ஸி. சந்திரகாசன் விமர்சிப்பு.

22.04.1986

✱ யாழ். பிரதம தபால் நிலையத்திலிருந்து கோட்டைக்குள் இருக்கும் தபால் நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்ட 9 லட்சம் ரூபா பெறுமதியான முத்திரைகள் இனந்தெரியாதோரால் அபகரிப்பு.

✱ தொண்டைமானாற்றில் படையினர்-போராளிகள் மோதல்;

செல்வச்சந்நிதி கோயில் தேர் தீக்கிரை;

எட்டு இராணுவத்தினர் பலி;

அர்ச்சகர் உட்பட மூன்று பொது மக்கள் பலி.

23.04.1986

✱ கந்தளாய்க் குளம் உடைப்பெடுத்ததில் மொத்தம் 56 தமிழ்ப் பொதுமக்கள் உயிரிழக்க நேரிட்டதாக அறிவிப்பு.

✱ மக்கள் கொல்லப்படும் மனிதப் பிரச்சினையைத் தீர்க்க யுத்த நிறுத்தமொன்று அவசியம் என அமைச்சர் தொண்டமான் தெரிவிப்பு.

✱ அரசியல் தீர்வு காணுமாறு இலங்கை மீது உலக நாடுகளின் அழுத்தம் அதிகரித்துள்ளதாகவும் அதில் இந்தியாவுக்குப் பெரும் பங்குண்டு எனவும் முன்னாள் இந்திய வெளியுறவுச் செயலர் ரொமேஸ் பண்டாரி தெரிவிப்பு.

24.04.1986

✱ அநுராதபுரத்தில் எண்ணெய் நிரப்பிக் கொண்டிருந்த வடபகுதி பவுஸரில் குண்டு வெடித்ததில் எண்ணெய் குதங்களில் தீ; ஒன்பது பேர் மரணம்.

✱ வெள்ளவத்தைப் பொலிஸ் நிலையத்தில் பார்சல் குண்டு வெடித்தது; ஐந்து பொலிஸார் உட்பட பலர் காயம்.

25.04.1986

✱ அன்னைதிரேஸா தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வருகை.

✱ வடபகுதியில் இராணுவ முகாம்களுக்கு அருகிலுள்ள அரச, தனியார் கட்டடங்கள் போராளிகளினால் பாவிக்கப்படுமானால் விமானத்தாக்குதல் மூலம் அவை அழிக்கப்படுமென கூட்டுப்படைத்தளபதி அறிவிப்பு.

✱ அடையாளம் காண்பதற்காக 'முகமூடி' யின் உதவிபெறப்பட்டு 58 தமிழர்கள் அம்பாறையில் படையினரால் கைது.

26.04.1986

✱ இலங்கை இராணுவத்தினருக்கு கிளிநொச்சி, மட்டக்களப்பு, தியத்தலாவ இராணுவ முகாம்களில் வைத்து இஸ்ரேல் மொஸாட் படையினர் பயிற்சி வழங்குவதாக ஈழமக்கள் புரட்சிகர முன்னணி குற்றச்சாட்டு.

✱ போராளிகள் தற்கொலைப்படை பாணியிலான தாக்குதல்களுக்குத் திட்டமிட்டு வருவதால் அதனைச் சமாளிக்கும் வழிவகைகள் குறித்து தேசிய பாதுகாப்புச்சபை அவசர அவசரமாக ஆராய்ந்தது.

✱ இந்திய மத்திய இணை அமைச்சர் சிதம்பரம் மற்றும் இந்திய முன்னாள் வெளியுறவு அமைச்சர் ரொமேஸ் பண்டாரி ஆகியோர் அடங்கிய தூதுக் குழு இனப்பிரச்சினை குறித்து இலங்கைத் தலைவர்களுடன் பேச வருகிறது.

27.04.1986

✱ கூட்டணியினர்-ராஜீவ்காந்தி இடையே இடம்பெற்ற பேச்சுக்களில் ஒரு மொழி மாநிலம் உள்ளடக்கிய தீர்வே அவசியமென கூட்டணியினர் வலியுறுத்து.

✱ மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பட்டிருப்புப் பாலம் குண்டு வைத்துத் தகர்ப்பு.

✱ விமானத் தாக்குதல் அபாயத்தைத் தவிர்த்துக் கொள்ளும் வகையில் தெல்லிப்பளை அரசினர் ஆஸ்பத்திரியின் மேற்கூரையில் செஞ்சிலுவைச் சின்னம் பெரிய அளவில் பொறிக்கப்பட்டது.

28.04.1986

✱ இனப்பிரச்சினைத் தீர்வுதொடர்பாக ஆராய இங்கு வரும் இந்தியத் தூதுக்குழு எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்த முடிவு.

✱ கந்தளாய்க் குள அணைக்கட்டு உடைப்பினால் 2 ஆயிரத்து 500 பேர் வரையில் காணாமற்போயுள்ளதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவிப்பு.

✱ தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அதுலத் முதலி தாம் தமிழ் மொழியைக் கற்று வருவதாகத் தெரிவிப்பு.

29.04.1986

✱ இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான பேச்சுக்களின் போது இலங்கை அரசிடமிருந்து திட்டவட்டமான கருத்தை எழுத்தில் பெறுமாறு இந்தியக் குழுவுக்கு இந்திய அரசு ஆலோசனை.

✱ ஜனநாயக வழிகளில் உரிமைகளைப் பெற இயலாததாலேயே தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்த நேர்ந்தது என பிரதி நீதி அமைச்சர் ஷெல்டன் ரணராஜா தெரிவிப்பு.

30.04.1986

✱ இலங்கை இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காணப்படும் வரை இந்தியா தனது நல்லெண்ண முயற்சிகளிலிருந்து ஓயாது என கொழும்பு வந்த இந்திய தூதுக் குழுவின் தலைவர் அமைச்சர் பி.சிதம்பரம் தெரிவிப்பு.

✱ இந்தியக் குழுவுக்கும் ஜனாதிபதி ஜே.ஆருக்கும் இடையேயான சந்திப்பின் போது அமைச்சர்கள் லலித் அதுலத்முதலி மற்றும் ஏ.ஸி.எஸ்.ஹமீட் ஆகியோரும் உடனிருப்பர்.

✱ யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல இடங்களில் இரண்டு இளைஞர் இயக்கங்கள் தமக்குள் பரவலாக மோதிக் கொண்டதில் பல இளைஞர்களும் சில பொது மக்களும் உயிரிழப்பு.

# ராஜீவ் கொலை வழக்கு குறித்த விசாரணைகள் விரைவில் முடிவு

கொழும்பு, டிசெ. 16

ராஜீவ் காந்தி படுகொலை வழக்கு விசாரணைகள் முடிவுறுத்தப்படவுள்ளன என இந்திய வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த வழக்கின் பிரதான சந்தேக நபர்களான புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மற்றும் புலனாய்வுப் பிரிவின் தலைவர் பொட்டு அம்மான் ஆகியோர் உயிரிழந்துள்ளனர் என இலங்கை உத்தியோக பூர்வமாக அறிவித்ததைத் தொடர்ந்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த இருவரும் இறுதிக் கட்ட யுத்தத்தில் உயிரிழந்துள்ளனர் என இலங்கை அரசு, இந்தியாவிடம் உத்தி யோகபூர்வமாக அறிவித்துள்ளது.

உத்தியோகபூர்வ அறிவிப்பைத் தொடர்ந்து வழக்கு விசாரணைகளை முடிவுக்குக் கொண்டு வரமுடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

# இத்தாலி வாழ் இலங்கையர்கள் அரசிற்கு எதிராகவும் ஆதரவாகவும் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, டிசெ.16

இத்தாலியில் வாழும் இலங்கை மக்களிடம் காணப்பட்ட ஐக்கியத்தை சீர்குலைத்து அரச மற்றும் எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் தற்போது அங்குள்ள இலங்கைத் தூதரகத்தின் முன்னாள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

அரசிற்கு எதிராக சிலரும், அரசிற்கு ஆதரவான சிலரும் இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும்போது இத்தாலியிலுள்ள விடுதலைப் புலி ஆதரவாளர்கள் இதனை வேடிக்கைப் பார்த்து வருகின்றமையானது பெரும் அசௌகரியத்தை ஏற்படுத்தியிருக்கிறது என இலங்கைத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் இலங்கையர்களை தூதரக அலுவலகத்திற்கு வெளியில் சென்று எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடுமாறு இத்தாலிய பொலிஸார் உத்தரவிட்டுள்ளனர். (சி)

# 2 பிரதான ஜனாதிபதி வேட்பாளருக்கும் நிரந்தரமான கொள்கைகள் ஏதுமில்லை!

**சிறிதுங்க ஜயசூரிய தாக்கு**

கொழும்பு, டிச. 16

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இரண்டு பிரதான வேட்பாளர்களுக்கு நிரந்தரமான கொள்கைகள் எதுவுமில்லை - என்று ஐக்கிய சோசலிசக் கட்சியின் தலைவரும் அதன் ஜனாதிபதி வேட்பாளருமான சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

இரண்டு பிரதான வேட்பாளர்களும் ஒருவருக்குகொருவர் சேறுப்பூசும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள் அபிவிருத்தித் தொடர்பான எவ்வித திட்டங்களையும் இதுவரை முன்வைக்கவில்லை. நாட்டை அபிவிருத்தி செய்யவும் நாட்டை ஒன்றிணைக்கும் நோக்கிலும் தாம் ஜனாதிபதித் தேர்தலில் பேட்டியிடுகிறார் எனவும், கட்சி மாறும் நடவடிக்கைகளை நோக்கும்போது, பிரதான கட்சிகளின் வேட்பாளர்களுக்கு நிரந்தக் கொள்கையில்லை என்பது புலப்படுகிறது எனவும் சிறிதுங்க ஜயசூரிய மேலும் கூறியுள்ளார். (சி)

# கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 8 ஆவது வருடாந்த ஆராய்ச்சி மாநாடு

## இன்றும் நாளையும் நடைபெறுகிறது

கொழும்பு, டிசெ.16

'புதிய பரிணாமத்திற்கான மாற்றம்' (Transition for new paradigms) என்னும் கருப்பொருளில் இன்றும் நாளையும் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 8 ஆவது வருடாந்த ஆராய்ச்சி மாநாடு பல்கலைக் கழகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறுகின்றது. இலங்கையின் பல்கலைக் கழகங்களான ஜயவர்த்தனபுர, கொழும்பு, ரஜரட்ட, பேராதனை, யாழ்ப்பாணம் போன்றவற்றில் இருந்தும், ஆய்வு நிறுவனங்களில் இருந்தும் 50 க்கும் மேற்பட்ட ஆய்வாளர்கள் மேற்கொண்ட ஆய்வுகள் இந்த மாநாட்டில் முன்வைக்கப்பட இருக்கின்றன.

இந்த மாநாட்டில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவப் பேராசிரியரான கலாநிதி என்.பஞ்சநாதம் பிரதம விருந்தினராகவும், மகப்பேற்று நிபுணரும் பேராசிரியருமான வைத்திய கலாநிதி எஸ்.விஸ்வநாதன், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.அருமைநாயகம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

துணைவேந்தர் கலாநிதி என்.பத்மநாதன் தலைமையில் இடம்பெறும் இந்த மாநாட்டில் விவசாயம், விஞ்ஞானம், பேண்தகு சுற்றாடல், பிராந்திய அபிவிருத்தி, முகாமைத்துவம், சமூக விஞ்ஞானம் சார்ந்த பிரிவுகளில் ஆய்வுக் கட்டுரைகள் அமைவதால் இது முக்கியமான மாநாடாகக் கருதப்படுகின்றது.

இந்த மாநாட்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பி.பாலசுந்தரம்பிள்ளை, பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ரியுடர்.டி.சில்வா, கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் பிரதிப் பணிப்பாளர் திருமதி சாந்தி வில்சன் மற்றும் கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் கே.பத்மநாதன் ஆகியோரின் முதன்மை பேச்சும் இடம்பெறவுள்ளன. இந்த மாநாட்டிற்கு வர்த்தக முகாமைத்துவபீட சிரேஷ்ட விரிவுரையாளர் வ.கனகசிங்கம் இணைப்பாளராகச் செயற்படுகின்றார். (50)

# வடிகால்களில் கழிவுப்பொருள்களை அகற்றும் பணியில் தொழிலாளர் மும்முரம்

யாழ்ப்பாணம், டிசெ.16

யாழ்.நகரப் பகுதியில் வடிகால்களில் தேங்கியுள்ள வெள்ளத்தை அகற்றும் பணியில் மாநகரசபைத் தொழிலாளர்கள் நேற்று மும்முரமாக ஈடுபட்டிருந்தனர்.

குறிப்பாக யாழ்.ஆஸ்பத்திரி வீதி, கே.கே.எஸ் வீதி ஆகியவற்றில் அமைந்துள்ள வடிகால்களில் வெள்ளம் வழிந்தோட முடியாதவாறு கழிவுப் பொருள்கள் தேங்கியிருந்தன.

வடிகால்களில் அடைபட்டுக் கிடந்த இந்தக் கழிவுப் பொருள்களை அகற்றி வெள்ளத்தை வழிந்தோடச் செய்யும் பணியில் யாழ்.மாநகரசபையின் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் நேற்றுக் காலை மழைக்கு மத்தியிலும் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர்.

இதேவேளை -

யாழ். முனீஸ்வரன் வீதியில் புல்லுக் குளத்துக்குச் செல்லும் வடிகால்களிலும் கழிவுப் பொருள்கள் நிரம்பியுள்ளதாகக் காணமுடிகின்றது. (50-224)

# தொழிலாளர்கள் தொடர்புகொள்க

யாழ்ப்பாணம், டிசெ.16

வவுனியா நலன்புரி முகாம்களில் ஒப்பந்த அடிப்படையில் சுகாதாரத் தொழிலாளர்களாகப் பணிபுரிந்து யாழ்ப்பாணத்திற்கு விடுவிக்கப்பட்ட தற்காலிக ஊழியர்களை யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார் அறிவித்துள்ளார். (204)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல்வாதிகளின் தோல்வியில் முடியும் தீர்வு யோசனைகளைப் புறமொதுக்கி ....

# புத்திஜீவிகளைக் கொண்ட சுயாதீன ஆணைக்குழு நிறுவி பொருத்தமான அரசியல் கட்டமைப்பை உருவாக்க வேண்டும்

## அரசியல் தீர்வு நிராகரிக்கப்பட்டால் மீண்டும் போர் வெடிக்கும்.... ? 2

(நேற்றையதொடர்ச்சி)

இந்த வியூகத்தக்குப் புறம்பானதொரு இராச்சியமென்ற கொள்கை வகுத்துக் கொண்ட தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் அரசியல் வியூகத்தில் தடம்பதிப்பதற்கு, இலங்கைக் குடியரசு என்ற அரசமைப்பின் மூலம் சிறுபான்மைச் சமூகங்களின் அனைத்துச் சட்டரீதியிலான மற்றும் நியாயமான உரிமைகள் இல்லாதொழிக்கப்பட்டமையே காரணமாக அமைந்தது. மேற்படி திருப்புமுனையாக அமைந்த சந்தர்ப்பம் வரையிலும் நிலவிய அரசமைப்பின் 27ஆவது விதியின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்த சிறுபான்மைச் சமூகங்களின் உரிமைகளும், சிறுபான்மைச் சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்திநின்ற ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்களும் நீக்கப்பட்டமை மற்றும் மூதவை இல்லாதொழிக்கப்பட்டமை ஆகியவை மூலம் சிறுபான்மை இனங்களின் உரிமைகள் வெட்டிக்குறைக்கப்பட்ட மையும், சிங்களமொழி அரச கரும மொழியாகவும் பௌத்தம் தேசிய மதமாகவும் அரசமைப்பிலேயே உறுதிப்படுத்தப்பட்டுப் பிரகடனப்படுத்தப்பட்டமையும் தமிழ் மக்கள் என்போர் இலங்கை நாட்டினுள் அவர்களது உரிமைகளைப் பொறுத் தவரையிலும் கீழ் மட்டத்தரப்பொன்றே என்பது உணர்த்தி விடப்பட்டது.

இவை ஒருபுறமிருக்க, அரசமைப்பின் 13ஆவது திருத்தமென்பது இந்திய அழுத்தத்தின் மூலமாக அவசரகதியில் நிறைவேற்றப்பட்ட இலங்கைக்குச் சற்றும் பொருந்தாத முறைமையொன்றே என்ற மேலுமொரு எதிர்வாதக் கருத்தும் முன்வைக்கப்பட்டுள்ளது. ஆனால் விடுதலைப் புலிகளின் யுத்த முன்னெடுப்புக்கள் இடம்பெற்று வந்த சந்தர்ப்பத்தில், இலங்கையரசு மற்றும் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர்களுக்கிடையில் இந்தியாவின் மத்தி யஸ்தத்துடன் இடம் பெற்ற திம்புப் பேச்சுகள் மற்றும் புதுடில்லி ஒப்பந்தத்தின் அடிப்படையில் 1985இல் அரசு மற்றும் விடுதலைப் புலித்தலைவர்களென்ற இவ்விரு தரப்புக்களுமே, அரசமைப்பின் 13ஆவது திருத் தத்தின் மூலம் முகிழ்ந்திருந்த இந்தியத் தரப்பின் அரசமைப்பு வரைபினூடான அதிகாரப் பகிர்வு நிர்வாக மொன்றுக்கு இணக்கம் கண்டிருந்தன.

பிற்காலத்தில், மங்கள முனசிங்க குழுவின் அறிக்கைக்கு அமையவும், தற்போது தயாரித்து முடிக்கப்பட்டுள்ள அனைத்துக் கட்சிக்குழுவின் அறிக்கைக்கு அமையவும் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படுவதற்கு மிகப்பொருத்தமானதாக அரசமைப்பின் 13ஆவது திருத்தம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அத்தோடு, மஹிந்த ராஜ பஷவால் இந்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்து வெளிப்பாடுகளுக்கு அமைய மாகாண சபையின் மூலம் பகிர்ந்தளிக்கப்படவுள்ள அதிகாரத்துக்கு அப்பாலும் பயணிக்கும் முறைமையூடாக அதிகரிக்க அதிகாரங்களை பகிர்ந்தளிப்பதற்கும் அவர் தயாராகவிருந்தார்.

அவ்வாறான,போதிலும், இலங்கையினுள் மாகாணசபைகள் என்பவை வெற்றிகரமான அதிகாரப்பகிர்வு நிர்வாக முறைமையொன்றாக அமையவில்லையென்பதைக் கடந்த இருதசாப்தகாலப் பட்டறிவுகளுக்கு அமைய தீர்மானிக்க முடிகிறது. 1990 முதல் 2008 வரையிலும் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் செயற்பட்டுள்ள மாகாண சபைகள் பொதுநிதியை வீண்விரயமாக்கும் தோல்வி நிலை நிர்வாக முறைமையே என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தத்தமது அரசியல் கட்சிகளின் வெற்றிக்காக பொதுமக்களது வளங்களையும் தமது அதிகாரப்பலத்தைப் பிரயோகித்துக் கொள்ளும் அடாவடித் தரப்புக்களை இயக்கிச் செல்லும் மையமொன்றாகவும், மத் திய நிர்வாகம் சார்ந்த அரசியல்வாதிகளின் குடும்ப உறுப்பினர்களை தேசிய அரசியலுக்குள் புகுத்திவிடுவதற்கான பயிற்சி மையமாகவும், இந்த இரண்டாம் மட்ட அரசியல் உறவினர்கள் தேசிய நிதியைத் தமது விருப்புகளுக்கமைய சூறையாடிக்கொள்வதற்கு வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுக்கும் நிறுவனமொன்றாகவும் மட்டுமே மாகாணசபைகள் செயற்பட்டு வருகின்றன.இந்தத் தோல்வி நிலைக்குக் காரணமாக அமையும் அடிப்படை ஏதுக்கள் நிறையவே உள்ளன.

முதலாவதாக அரசமைப்பின் 13ஆவது திருத்தத்துக்கு அமைய, மாகாண சபைகளுக்குக் கிட்டவேண்டிய அதிகாரங்களை அவை நடைமுறைப் படுத்துவதற்கான வாய்ப்புக்களை வழங்க அரசு தயாரில்லை என்பதைச் சுட்டிக்காட்ட முடியும். இதற்கமைய, விசாலமான நிதிவளம் விரயமாக்கப்பட்டு இயக்கிச்செல்லப்படும் மாகாண சபைகளின் மூலம் இடம்பெறுவது உள்ளூராட்சி நிறுவனங்கள் மூலமாக நிறைவேற்றப்படும் கருமங்களாகவே அமைவதோடு, மக்களுக்கான ஒரே செயற்பாட்டுக்கு இரண்டு நிறுவனங்களை இயக்கிச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அதேபோன்று, அரச உத்தியோகத்தர்களுக்கு தமது பொறுப்புக்களை நிறைவேற்றும்போது மத்திய அரசின் அரசியல்வாதிகளினதும் மற்றும் மாகாணசபை களி ன் அரசியல் வாதிகளினதும் சட்டத்துக்கு முரணான அழுத்தங் களுக்கு இரு கோணங்களில் அடி பணிய வேண்டி நேர்கிறது. இவ்விதமா னபாதிப்பான நிலைப்பாடுகளேயன்றி அரசசேவையில் செயற்றிறன் மிக்க தன்மைக்கு அங்கு இடமிருப்பதில்லை. அதன்மூலம் அரசசேவைகள் என்ப வை வரையறையற்ற அரசியல் அழுத்தங்களினுள் ஊழல் மயமாவதன் ஊடாக மக்களுக்குக் கிட்டக்கூடிய சேவை அற்றுப்போய்விடும் பாதகமான நிலையொன்றே மாகாணசபைகள் மூலம் உருவாகியுள்ளது.

புத்தி ஜீவிகளைக் கொண்ட ஆணைக்குழு நிறுவி பொருத்தமான தீர்வைப் பெறுவதே உகந்தது.

மேலும், அரசமைப்பிலேயே சட்ட பூர்வமாக மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள பெருமளவிலான அதிகாரங்கள், மாகாண சபைகளால் நடைமுறைப்படுத்தப்படுவதைத் தடுத்து விடுவதன் மூலமாகவும் கூட, மாகாண சபைகளை எந்தவொரு அதிகார பலமுமற்ற நிறுவனங்களாக்கி விடும் உத்தி கடந்த இரு தசாப்த காலமாகவே நடந்தேறிவந்துள்ளது. முக்கியமாக, காணி அதிகாரங்கள் மற்றும் பொலீஸ் அதிகாரங்கள் என்பவை சட்ட ரீதியாகவே மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள போதிலும் அவை செயலுருவில் நடைமுறைப்படுத்தப்படுவதைத் தடுத்துவிடும் அதிகாரபலம் மத்திய அரசு மற்றும் ஜனாதிபதியின் வசத்தில் அமைந்துள்ளது. அத்தோடு மாகாண ஆளுநர் பதவியில் தமக்கு நெருக்கமான ஒருவரை அமர்த்தி மாகாண சபையின் நிறைவேற்று அதிகாரங்களைக் கடும்பிடியில் கட்டுப்படுத்தி விடும் அதிகார பலமும் கூட ஜனாதிபதியின் வசமுள்ளது. இதற்கமைய நிறைவேற்று ஜனாதிபதிப் பதவிக்கு உள்ள வரையறையற்ற அதிகாரங்களின் கீழ் அதிகாரங்கள் பரவலாக்கப்படுவதென்பது செயலுருவில் மேற்கொள்ளப்பட இயலாத தொரு நிலைப்பாடென்பது புலப்படுகிறது.

எனவே, இனப்பிரச்சனைக்குக் தீர்வொன்றாக அதிகாரங்களைப் பரவலாக்கிவிடும் கட்டமைப்பு மற்றும் பரவலாக்கப்பட வேண்டியிருக்கும் அதிகாரங்கள் தொடர்பான முறையானதொரு பரிசீலனையை மெற்கொள்ளாது அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின் மீது தங்கியிருப்பதானது மேற்குறிப்பிடப்பட்டுள்ள நிலைப்பாட்டினுள் சாத்தியப்படாததொரு கருமமே என்பதைக் குறிப்பிட்டுக் கூறமுடியும்.

1957 ஆம் ஆண்டிலிருந்தே இச்சிக்கலுக்கான தீர்வுகளைத் தேடிப்பெறும் பொறுப்பை அரசியல்வாதிகளே தமது கரங்களில் எடுத்துக் கொண்டு வழங்கியுள்ள அனைத்துத் தீர்வுகளும் தோல்வி யிலேயே முடிந்துள்ளன. அந்தவகையில், 1957ஆம் ஆண்டில் பண்டாரநாயக்க செல்வநாயகம் இடையிலான ஒப்பந்தம் முதற்கொண்டு இற்றைவரையிலும் மேற்கொள்ளப்பட்ட அனைத்துத் தீர்வு மார்க்கங்களும் சிதைவடைந்து, நாட்டை அழிவை நோக்கி இட்டுச் சென்ற யுத்தமொன்றும் கூட உருவாகிவிடுவதற்கு அரசியல்வாதிகளின் அவ்விதத்திலான நடவடிக்கைகளே காரணமாகியிருந்துள்ளன.

இவ்வளவுக்குப் பின்னரும், இன்றைய அரசு, தீர்வு மார்க்கங்களைத் தேடிப்பெறுவது இதொடர்பான அக்கருமத்தை அனைத்துக் கட்சிக் குழுவிடம் ஒப்படைத்துள்ளது. இங்கு

இனப்பிரச்சினை சம்பந்தமான சமமான கருத்துக்களைக் கொண்டுள்ள எந்தவொரு அரசியல் கட்சிகளையோ அல்லது குறைந்த பட்சமாக இரு அரசியல் கட்சிகளையோ, தேடிக் கண்டறிந்து கொள்ள இயலாதுள்ள நிலைப்பாடொன்றினுள், பல்வேறு ஒன்றுக்கொன்று முரணான கொள்கை நிலைப்பாடுகளை அடித்தளமாக அமைத்துக் கொண்டுள்ள கட்சிகள் அனைத்தினதும் இணக்கப்பாட்டுடன் தீர்வொன்றைத் தேடிகொள்வதென்பது செயல்பூர்வமாகச் சாத் தியப்படமாட்டாதென்பது அரசுக்குப் புலப்படாதிருப்பது துரதிஷ்டவசமானதாகும்.

இலங்கையின் அரசியல் வரலாற்றை மட்டுமே ஆராய்ந்து பார்த்தாலும் கூட, ஆக்கபூர்வமான நடைமுறைகளைக் கண்டறிந்து கொள்ள முடியும். அந்த வகையில், ஆங்கிலேயரது ஆட்சிக் காலத்துள் அரசுக்கு எதிராக முன்னெழுந்த மக்கள் எழுச்சிகளுக்குப் பரிகாரங்களைத் தேடிப் பெறுவதற்காக புத்திஜீவிகள் உள்ளடங்கிய ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்ததாகவும் கோல் புரூக் ஆணைக்குழு, டொனமூர் ஆணைக்குழு, சோல்பரி ஆணைக்குழு, 1927 ஆம் ஆண்டின் உள்ளூராட்சி ஆணைக்குழு என்ற ஆணைக்குழுக்க ளினால், அரசுக்கு வழங்கப்பட்ட பரிந்துரைகள் அடித்தளமாகக் கொள்ளப்பட்டு, அவற்றின் மூலம் அடிமைத்தளை மட்டத்திலிருந்து டொமினியன் நிலைப்பாடு வரையில் இலங்கை நாட்டை இட்டுச் சென்ற நிர்வாக முறைமைகள் முகிழ்ந்திருந்ததை எம்மால் அறியமுடிகிறது.

மேலும், 1818 மற்றும் 1848ஆம் ஆண்டுகளில் தலையெடுத்த கிளர்ச்சி களின் போது ஆயுத பலத்தால் அவற்றைத் தோல்வியுறச் செய்வதற்கு முடிந்திருந்த போதிலும் கூட, அவற்றின் பின்புலங் களாகியிருந்துள்ள மக்களின் அதிருப்தி நிலை தொடர்பாக ஆணைக்குழுக்களிடமிருந்து பரிந்துரைகளைப் பெற்று, நிர்வாகக் கட்டமைப்புக்கள் நேர்சீர் செய்யப்பட்டன என வரலாற்றிலிருந்து எம்மால் பாடங் களைக் கற்றுத் தேற முடியும்.

எவ்வாறான போதிலும், இன்றைய அளவில், வெற்றிகரமானதொரு அரசியல் தீர்வொன்றின் மூலம் நிரந்தர சமாதானத்தை நோக்கிப்பயணிப்பதற்கான கதவு இந்த யுத்த வெற்றியை அடுத்து இன்றைய அரசுக்குத் திறந்துவிடப்பட்டுள்ளது. அரசியல் வாதிகளின்தோல்வியில் முடியும் தீர்வுயோசனைகளைப் புறமொதுக்கி வைத்து, புத்திஜீவிகள் உள்ளடங்கும் சுயாதீன ஆணைக்குழு வொன்றை நிறுவி, பொருத்தமான, அரசியல் நிர்வாகக்கட்டமைப்பைச் சம்பந்தப்படுத்தும் பரிந்துரைகளைப் பெறுவதற்கு இன்றைய அரசு செயற்படுமானால், அது, புத்திசாலித்தனமான கருமமாக அமையக் கூடும். ★★★

கொழும்பில் உள்ள மனித உரிமைகள் காப்பகத்தைச் சேர்ந்த சட்டத்தரணி கருணாரத்ன ஹேரத் 04.12.2009 'ராவய' இதழில் எழுதிய கட்டுரையின் தமிழ் வடிவம் இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தரப் பரீட்சையில் உயர் பெறுபேறுகளைப் பெற்று கல்வித்துறையில் புகழ் சேர்த்த மாணவர்கள்

2009ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின. இதில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று கல்வித்துறையில் சாதனை புரிந்த மாணவர்களின் அனுபவங்களையும் அவர்களது கருத்துக்களையும் உதயன் தொடர்ச்சியாக வெளிப்படுத்த உள்ளான். அதில் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.



## ஞானசேகரம் கஜந்தா
### ஸ்கந்தவரோதயாக் கல்லூரி
கலைப்பிரிவு - 2ஏபி மாவட்ட நிலை - 152

நான் எனது ஆரம்பக் கல்வியினை தரம் 11 வரை கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையில் கற்றேன். பின் உயர் கல்வியினை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியிலும் கற்றேன். இவ்விரு பாடசாலைகளிலும் ஆசிரியர்கள் புகட்டிய அறிவுத் துளிர்கள் தான் என்னை இப்பெறுபேறு எட்ட அடிப்படையாக இருந்தது.

நான் எனது உயர்தரப் படிப்பிலே தமிழ், சங்கீதம், அளவையியல் ஆகிய பாடங்களைத் தெரிவு செய்து அதிபர், ஆசிரியர்களின் வழிகாட்டலின் கீழ் என்னால் கற்க முடிந்தது.

சந்திப்பு : கர்ணன், தமிழ்வண்ணன்

குறிப்பாக எனது வகுப்பாசிரியரும் தமிழ்ப்பாட ஆசிரியருமான பா.மகாலிங்கசிவம் ஆசிரியர் எனக்கு மேலும் ஊக்கம் கொடுத்து எனது கற்றலை மேம்படுத்தினார். மற்றும் தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்களும் எனக்கு ஊக்கம் கொடுத்துக் கற்பித்தார்கள். அத்தோடு எனது குடும்பத்தினர் எனக்கு எனது படிப்பிலே சித்திபெறுவதற்கு மிகவும் உறுதுணையாக இருந்தார்கள்.

எனது குடும்பம் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தது. அப்பா தோட்டம் செய்பவர். எனக்கு 4 சகோதரர்கள். என்னுடன் சேர்த்து 5*சகோதரியாக எங்கள் ஐந்து பேரையும் வளர்த்துப் படிக்க வைக்க எனது பெற்றோர் எவ்வளவு கஷ்ரப்பட்டார்கள்.

இப்போது எல்லோரும் ஒவ்வொரு துறையில் உள்ளனர். எனது வீட்டில் நான் கடைசிப் பிள்ளை. ஆகவே நான் சித்தியடைய வேண்டும் என்று எதிர்பார்த்து எனது குடும்பத்திற்கு என்னால் முடிந்த சிறு பணிதான் இது. அத்தோடு எனது நண்பர்களும் எனக்குத் தோளோடு தோள்நின்று உதவினார்கள். அவர்களுக்கு எனது நன்றிகள். எனக்குக் கடவுள் பக்தி நிறைய இருந்தது. இவை எல்லாம் சேர்ந்துதான் எனக்கு சித்தியடைய உதவியது.

அத்தோடு எனது தன்னம்பிக்கையும் கடவுள் நம்பிக்கையுமே என்னை இப்பெறுபேறு எட்டக் காரணமாக இருந்தது. தற்போது உயர்தரம், சாதாரணதரம் பரீட்சை எழுதப் போகும் மாணவர்களுக்கு ஒரே ஒரு வேண்டுகோள். வகுப்பில் படிக்கும்போது தூங்காதீர். இரவில் படிக்கும் போது தூக்கம் வந்தால் தூங்குங்கள். எனக்கு உதவிய எல்லோருக்கும் எனது நன்றிகள்.



## கணேசலிங்கம் திஷாந்
### ஸ்கந்தவரோதயாக் கல்லூரி
கலைப்பிரிவு - 2ஏபி

நான் அளவெட்டி என்ற கிராமத்தில் பிறந்து எனது ஆரம்பக்கல்வியை எமது கிராமத்தில் உள்ள அ.மி.த.க பாடசாலையில் கற்றுத் தரம் 6 இற்கான அனுமதியை ஸ்கந்தவரோதாயாக் கல்லூரியில் பெற்று உயர்தரக் கல்வியையும் அங்கேயே கற்றேன்.

உயர்தரத்தில் நாடகமும் அரங்கியலும், அளவையியல், அரசியல் ஆகிய பாடங்களைத் தெரிவு செய்தேன். அதில் நாடகமும் அரங்கியலும் மிகவும் பிடித்த பாடமாக இருப்பினும் ஏனைய பாடங்களையும் விருப்பத்துடன் கற்றேன். அதில் 2ஏபி என்ற பெறுபேற்றைப் பெற்றுள்ளேன்.

நான் படிப்பதற்கென்று குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கவில்லை எப்பொழுது படிக்க வேண்டுமென்று தோன்றுகிறதோ அப்பொழுது எனது கல்விச்செயற்பாட்டை மேற்கொண்டேன். இதனால் படிக்கும் அனைத்தையும் நினைவில் வைத்திருக்க என்னால் முடிந்தது.

எனக்கு நாடகத்துறையில் நாட்டம் அதிகமாக இருந்ததால் 2008 ஆம் ஆண்டிற்கான தமிழ்த்தினப் போட்டியில் குழுநாடகத்தில் பங்குபற்றி தேசிய மட்டத்தில் 2ஆம் இடத்தைப் பெற்றேன்.

இத்தனை வெற்றிகளுக்கும் உதவிய எனது வகுப்பாசிரியர், எனக்குக் கல்வியை புகட்டிய ஏனைய ஆசிரியர்களுக்கும், எனக்குச் சகல வழிகளிலும் உதவிபுரிந்த குடும் பத்தினருக்கும், நான் படிப்பதற்கு பக்கபலமாக இருந்த நண்பர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.



## பாக்கியநாதன் தர்ஷிகா
### வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி
கலைப்பிரிவு - 2ஏபி

நான் ஆரம்பக் கல்வியை நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியையும் உயர்தரக் கல்வியையும் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியிலும் கற்றேன்.

உயர்தரத்தில் கலைத்துறையைத்தெரிவு செய்யும்போதே ஒரு குறிக்கோளுடனே ஆரம்பித்தேன். அதற்கான முயற்சிகளையும் இடையறாது செய்தேன். இறைவனின் அருளால் சிறந்த ஆசிரியர்கள் எனக்குக் கிடைத்தார்கள்.

அதுமட்டுமல்லாது எனது பாடசாலைச் சமூகம் எமது பாடசாலை அதிபரது ஆலோசனைகள், வழிகாட்டல்கள் எனது கற்றல் செயற்பாட்டிற்குப் பக்கபலமாக அமைந்தது.

நான் அன்றாடம் கற்பவற்றை வீட்டிலே வந்து கற்பதோடு ஆசிரியர்களின் ஆலோசனைப்படி பல பயிற்சிகளையும் தொடர்ந்து செய்து வந்தமையால் பரீட்சைக்கு ஆயத்தமாவது இலகுவாக இருந்தது. பரீட்சை பற்றிய பயம் குறைவாகவே இருந்தது.

எனது முயற்சிக்கு நிச்சயம் பலன் கிடைக்கும் என எதிர்பார்த்தேன். இறையருளாள் எனது முயற்சி வீண் போகவில்லை.

இவ்வாறான பெறுபேற்றைப் பெறப் பக்கபலமாக அமைந்த எனது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள், எனது பெற்றோர், சகோதரர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளதோடு எல்லோருடைய ஆசியுடனும் எனது கல்விப் பயணம் உயர் இலக்கை அடையும் வரை தொடரும்.



## சிறிஸ்கந்தராசா ஜயப்பிரபாகரன்
### மகாஜனாக் கல்லூரி
வர்த்தகப்பிரிவு - 2ஏபி மாவட்ட நிலை - 52

நான் அளவெட்டியைச் சொந்த இடமாகக்கொண்டவன். இருப்பினும் யுத்தம் காரணமாக துன்னாலையில் உள்ள அல்லையம்பதியில் வசித்தேன்.

எனது ஆரம்பக்கல்வியை தரம் 1-5 வரை காசிநாதர் வித்தியாலயத்திலும், தரம் 6-8 வரை ஹாட்லிக் கல்லூரியிலும் கல்வி பயின்றேன்.

பின்னர் எமது சொந்த இடத்திற்கு வசிக்க வந்தமையால் அன்றிலிருந்து தரம் 8-13 வரை மகாஜனாக் கல்லூரியில் கல்விகற்று வந்தேன்.

எனது அப்பா 'மில்' வைத்திருக்கிறார். அதிலிருந்து வரும் வருமானத்தைக் கொண்டே நான் கல்வி பயின்றேன். எனக்கு 2 அக்கா உள்ளனர். அதிலொருவர் எச்.என்.டி.ஏ. பட்டம் பெற்றுள்ளார். மற்றவர் உயர்தரத்துடன் படிப்பை நிறுத்திவிட்டார்.

நான் சாதாரண தரத்தில் சிறப்பான சித்தியைப் பெற்று உயர்தரத்தில் வர்த்தகப் பிரிவைத் தெரிவு செய்து படித்தேன். எனக்கு வர்த்தகம் மிகவும் பிடிக்கும். எனவே நான் ஆர்வத்துடன் கற்றேன். இதனாலேயே என்னால் 2ஏபி எனும் பெறுபேற்றை அடைய முடிந்தது. அத்துடன் மாவட்ட மட்டத்தில் 52 ஆவது இடத்தை அடைந்துள்ளது மகிழ்ச்சியைத் தருகிறது.

நான் இச்சிறப்பான பெறுபேற்றை அடைய ஊக்கப்படுத்தியவர்கள் என்ற வகையில் முதலில் என் இருகண்களாக இருக்கும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள் ஆகியோருக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

மற்றும் எனது குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் எல்லோரும் என்மீது வைத்த அன்பினாலும், அக்கறையாலும், நம்பிக்கையாலும் இந்நிலையை என்னால் அடைய முடிந்தது. எனக்கு வர்த்தகத்துறையில் மிகவும் பிடித்த பாடமாக கணக்கீட்டைக் கூறுவேன். ஆனால் என்னால் கணக்கீட்டுக்கு 'பி' சித்தியே பெறமுடிந்தது.

நான் தினமும் படிப்பவற்றை தினமும் வீட்டிலும் படித்தேன். வகுப்பறையில் மிகவும் ஆர்வத்துடன் நன்றாக அவதானித்து விளங்கிக் கல்வி பயின்றேன். இதனாலேயே என்னால் இந்நிலையை அடைய முடிந்தது. மேலும் நான் சிறந்த முறையில் எனது பட்டப்படிப்பை நிறைவுசெய்து எம் சமூகத்திற்கு என்னால் முடிந்தளவு சேவைகளை எதிர்காலத்தில் ஆற்ற விரும்புகின்றேன்.

கடைசியாக நான் அனைத்து மாணவர்களுக்கும் ஒரு வேண்டுகோளை முன்வைக்கின்றேன். உயர்தரத்தில் பாடங்களைத் தெரிவு செய்யும்போது மாணவர்கள் வேறு நபர்களின் கட்டாயங்கள் இன்றி சுயமாக தாம்விரும்பும் பாடங்களைத் தெரிவு செய்து கல்வி கற்க வேண்டும்.



## அருளானந்தம் நேதிகா
### இணுவில் மத்திய கல்லூரி
கலைப்பிரிவு - 2ஏபி

நான் ஆரம்பக்கல்வி முதல் உயர்தரம் வரை இணுவில் மத்திய கல்லூரியிலேயே கற்றேன். ஜி.சீ.ஈ. உயர்தரத்திலே தமிழ், இந்துநாகரிகம், புவியியல் ஆகிய பாடங்களைத் தெரிவு செய்து கற்றேன்.

எனது தந்தை ஓர் விவசாயி ஆனபோதிலும் எனக்கு எந்தவொரு குறையுமில்லாது படிப்பித்துள்ளார். நான் பகல்வேளைகளிலும், இரவு வேளைகளிலும் அதிகம் படித்தேன். எனக்கு கடவுள்மீதிருந்த அதிக நம்பிக்கையும், விடா முயற்சியுமே இந்த வெற்றிக்கு வழிவகுத்தது.

எனது அம்மா, அப்பா, சகோதரர்கள் அனைவருமே எனக்குக் கொடுத்த உற்சாகமும், ஆதரவுமே எனது இலட்சியத்தை அடைய இலகுவாக இருந்தது. எனது கல்லூரி அதிபர் அ.சதானந்தன், ஆசிரியர்களான திருமதி சுகுமாரன், திருமதி சத்தியேந்திரன், திருமதி இராகவன் ஆகியோர் எனது கல்விக்காக அரும்பாடுபட்டனர்.

நான் நல்ல பெறுபேறு பெறவேண்டும் என்பதில் ஆலோசனைகள், படிக்கும் நுணுக்கங்களை உரைத்தார்கள். இவர்களோடு தனியார் கல்விநிறுவன ஆசிரியர்களான என்.பாலா, எஸ்.சுரேஸ், எஸ்.குமரன், எஸ்.சந்திரசேகர் ஆகியோரும் அறிவை மேலும் வளர்க்க மிகுந்த துணையாக இருந்தார்கள். இவர்களுடன் நான் இந்த நல்ல பெறுபேறு பெறுவதற்கு எனது நண்பியான சங்கீர்த்தாவும் ஊக்கம் அளித்தாள்.

நான் கல்வியோடு கலைத்துறை, ஏனைய போட்டிகளிலும் பங்குபற்றி பல சான்றிதழ்களும், பரிசில்களும் பெற்றுள்ளேன்.

பாடசாலையில் பல நிகழ்ச்சிகளைத் தலைமையேற்று செய்ததால் ஆளுமை விருத்தியும் என் கல்லூரி எனக்குத் தந்துள்ளது. 2008ஆம் ஆண்டு ''மனிதாபிமானத்திற்கான தகவல் தொழில்நுட்பம்'' என்ற கட்டுரைப் போட்டியில் பங்குபற்றி தேசிய மட்டத்தில் பரிசிலும் சான்றிதழும் பெற்றுள்ளேன்.

எனக்கு எதிர்காலத்தில் பல்கலைக்கழகத்திலே தமிழ்த்துறையில் சிறந்ததோர் பட்டம் பெற்று என் கலை உணர்வுகளை அனைவரிடமும் பகிர்ந்து என்னை வளர்த்த கல்லூரிக்கும், கிராமத்திற்கும், பெற்றோருக்கும் என்னால் முடிந்தளவு உயரிய சிறந்த சேவையாற்றுவதே என் இலட்சியம். இதற்கும் நரசிம்ம வைரவர் வழிவிடுவார் என நம்புகிறேன்.



## அந்தோனிப்பிள்ளை றூபேட்
### பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயம்
கலைப்பிரிவு - 2ஏபி

எனது தந்தை ஒரு சாதாரண மீனவத் தொழிலாளியாக இருந்தபோதும் மிகுந்த கஷ்ரத்தின் மத்தியில் எனது கல்விக்கான செலவைச் செய்ய வேண்டி இருந்தது. எனது தந்தையின் பொருளாதாரக் கஷ்ரத்தையும் அவர் மீனவத் தொழிலில் படும்இடர்பாடுகளையும் பார்த்து பல நாள்கள் வேதனையடைந்தேன்.

எனவே மன வைராக்கியத்துடன் படித்து பல்கலைக்கழகம் செல்ல வேண்டும் என உறுதிகொண்டேன். அந்த உறுதியே நான் இப்பெறுபேற்றைப் பெறுவதற்கு முதற் காரணமாகியது.

தமிழ், கிறிஸ்தவ நாகரிகம், புவியியல் ஆகிய பாடங்களைத் தெரிவுசெய்து இப்பெறுபேற்றைப் பெறுவதற்கு உதவிய எனது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிலைய ஆசிரியர்களுக்கும் எனது நண்பர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

கல்வியோடு ஒழுக்கத்தையும் சேர்த்து ஊட்டிய எமது கல்லூரிப் பெருமையைக் காப்பது என்போன்ற மாணவரின் கடனாகும் என்பதை கூறுவதில் பெருமிதம் கொள்கின்றேன்.

எமது ஆசிரியர்களால் கற்பிக்கப்படும் பாடங்களை அன்றைய தினமே கற்பதால் கல்வி எனக்கு என்றுமே சுமையாக இருக்கவில்லை.

எனவே ஏனைய மாணவர்களும் இம்முறையைக் கடைப்பிடித்து சிறந்த பெறுபேற்றைப் பெறமுடியும் என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

இப்பெறுபேற்றின் மகிழ்வினை அனைவருடனும் பகிர்ந்துகொள்ள இச் சந்தர்ப்பத்தை வழங்கியுள்ள உதயனுக்கும் இவற்றிற்கெல்லாம் அருளாசி வழங்கிய இறைவனுக்கும் என் மனமார்ந்த நன்றியைக் கூறுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பருத்தித்துறை மெதடிஸ்த உயர்தரப் பெண்கள் பாடசாலையின் இந்து மன்றக் கலை விழாவின் போது எடுக்கப்பட்ட படங்கள். நிகழ்வில் இந்து மன்றத் தலைவி செல்வி ஜெயராதிகா ஜெயவர்த்தனராஜா மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேசன், பகுதித் தலைவர் திருமதி வி.வேலும்மயிலும், மன்றப் பொருளாளர் செல்வி ரி.தாரணி, உபதலைவர் மற்றும் மாணவிகள் நிற்பதையும் பாடசாலை அதிபர் மாணவி ஒருவருக்குப் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.



சுன்னாகம் அறிஞர் ஐயன்னா சனசமூக நிலையத்தின் முன்பள்ளிக் கல்வியை நிறைவு செய்து வெளியேறும் சிறார்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் கௌரவிக்கப்பட்ட முன்பள்ளிச் சிறார்களைப் படத்தில் காணலாம்.


25 வருடம் உங்கள் நம்பிக்கையை வென்ற

டபல் யானை ஓடு




● 10 வருட உத்தரவாதம்

டினேஸ் ஓடு உற்பத்தி தொழிற்சாலை
கோனவில தங்கொடுவை
தொலைபேசி: 031 - 2258636 பக்ஸ் : 031 - 2258505
Hotline: 0777 -735951, 071-8436207

SINGER®
சைக்கிள்கள்

அனைவரினதும் தெரிவு...



உறுதியின் அச்சாணி
சிங்கர் ஸ்டேன்டட்
சைக்கிள்கள்

நங்கையர்க்கே
உருவான
மோனாலீசா
சைக்கிள்கள்



ஊக்கமுள்ள
சிறுவர்களுக்கு
குட்டி சைக்கிள்கள்



SINGER
உத்தரவாதத்துடன்
இலகு தவணைக்
கொடுப்பனவில்

(011) 5 400 400
www.singersl.com

நாடெங்கிலும் உள்ள
SINGER Plus SISIL WORLD SINGER Mega
காட்சியறைகளில் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடம்

இந்த கிறிஸ்மஸ் விழாவின்போது உலகில்
பல்வேறுவிதமான கையடக்கத் தொலைபேசிகளில் மிகச்
சிறந்ததைத் தெரிவு செய்து உங்களின்

பிரியமானவர்களுக்கு அன்பளிப்புச் செய்யுங்கள்

வர்ணம் வானொலி இசை கமரா



| LG KP 105 | LG GB 106 | LG GB 110 |
|---|---|---|
| ~~Rs.4,270/-~~ | ~~Rs.4,750/-~~ | ~~Rs.7,490/-~~ |
| Rs.3,970/- | Rs.4,399/- | Rs.6,990/- |
| Rs.662x6* | Rs.733x6* | Rs.1165x6* |
| Rs.662x6 | Rs.733x6 | Rs.583x12 |




| LG KP 175 | Motorola W 160 | Motorola VE 538 | Philips 9@9U |
|---|---|---|---|
| ~~Rs.9,990/-~~ | Rs.3,650/- | Rs.13,990/- | ~~Rs.12,490/-~~ |
| Rs.9,190/- | | ~~Rs.12,990/-~~ | Rs.11,750/- |
| Rs.1532x6* | | Rs.2165x6* | Rs.1958x6* |
| Rs.766x12 | | Rs.722x18 | Rs.653x18 |

EXCLUSIVELY FOR STANDARD CHARTERED CREDIT CARD HOLDERS

யாழ்ப்பாணம்: -B, இல. 31, மானிப்பாய் வீதி- யாழ்ப்பாணம். 021-222 1140
சுன்னாகம்: இல. 160A, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம், யாழ்ப்பாணம். 021 -224 0440
சங்கானை: இல 221, பிரதான வீதி, சங்கானை, யாழ்ப்பாணம். 021-4920660
மானிப்பாய்: இல.182/A யாழ்ப்பாண வீதி, மானிப்பாய்.021-4920655
நெல்லியடி: N.M.M.V வீதி, நெல்லியடி, கரவெட்டி, யாழ்ப்பாணம். 021-2264934
சாவகச்சேரி: இல.105, கண்டி வீதி, சாவகச்சேரி, யாழ்ப்பாணம். 021-4920730
- 0775279995.
பொருந்தும். www.abans.lk

Abans
Office Automation (Pvt) Ltd.
Genuine Products. Genuine Service.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையின், அதிசய ஒற்றுமை

என்ன அதிசய ஒற்றுமை பாருங்கள் !

தக்காளிப்பழம் எங்கள் இருதயத்தின் தோற்றத்தை ஒத்திருக்கிறது. சிவத்த நிறம்.

அதன் உட்பகுதி இருதயத்தைப்போல நாலு பகுதிகளாக பிரிக்கப்பட்டிருக்கிறது. தக்காளிப்பழத்தைத் தினமும் உணவில் சேர்த்து வருபவர்களுக்கு இருதய நோய்கள் அணுகவே அணுகாதாம்.

அந்தளவு ஊட்டச்சத்தை இருதயத்திற்கு தக்காளிப் பழம் வழங்குகிறது என ஒரு புதிய ஆய்வு தெரிவிக்கின்றது. எங்கள் உடல் உறுப்புகளின் தோற்றத்திற்கு சமாந்தரமாக இருக்கும் தாவர உணவு வகைகள் அந்தந்த உறுப்புகளுக்கு அதிக சத்தை வழங்கும் உணவாகக் காணப்படுகிறது எனப் பல்வேறு உதாரணங்களை எடுத்துக் காட்டியிருக்கிறது அந்தப் புதிய ஆய்வு.



போஞ்சி [அவரை] விதைகள் கிட்னி எனப்படும் சிறுநீரகத்தின் உருவத்தை ஒத்ததாகக் காணப்படுகின்றது.

உண்மையில் அவரை விதை சத்து கிட்னியின் ஆரோக்கியத்தைப் பேணி, அதன் தொழிற்பாடுகளுக்கு உறுதுணை புரிகிறது.

பாதாம் பருப்பு கண்களின் உருவத்தை ஒத்திருக்கிறது. அந்தப் பருப்பை அரைத்துப் பாலில் கலந்து குடித்தால் கண் வருத்தமே ஏற்படாது என அந்த ஆய்வு அறிக்கை தெரிவிக்கிறது.

திராட்சைப்பழக்குலை எங்கள் இருதயத்தின் உருவத் தில் இருக்கிறது. ஒவ்வொரு பழமும் ஒவ்வொரு இருதயக் கலங்கள் போல காட்சியளிக்கின்றன. திராட்சைப்பழம் இருதய ஆரோக்கியத்திற்கு இன்றியமையாதது.

முள்ளங்கி மற்றும் நோகோல்ட் வகைகள் எலும்பைப்போல காட்சியளிக்கின்றன. அவை எலும்புகளுக்கு சிறந்த ஊட்டச்சத்தை வழங்குகின்றன.

வத்தாளங்கிழங்கு நமது குடலுக்கு சமீபமாக உள்ள [இன்சுலின் சுரப்பி] பன்கிறயாஸ்சின் உருவத்தை ஒத்ததாகக் காணப்படுகிறது. கிளைசிமிக் சுட்டி யின் சமநிலை பிறழ்வதால்தான் குருதியில் சர்க்கரை அதிகரித்து அல்லது குறைந்து நீரிழிவு நோய்த்தாக்கம் அதிகரிக்கிறது. வத்தாளைக்கிழங்குச்சத்து இந்த கிளைசிமிக்சுட்டியின் சமநிலையைப் பேணிவர பெரிதும் உதவுகிறது.

திராட்சைப்பழம் , தோடம்பழம் , எலுமிச்சம்பழம் போன்ற பழங்கள், பெண்களின் மார்பக பால்சுரப்பிக் கலங்களின் உருவத்தைச் சிறியளவில் ஒத்திருக்கின்றன. அவை அந்தச் சுரப்பிகளின் ஆரோக்கியத்திற்கு அவசியமான போசாக்கை வழங்குகின்றன.

வாழைப்பழம் மற்றும் கத்தரிக்காய் ஆண் பிறப்பியல் உறுப்பின் உருவத்திற்கு சமாந்தரமாகக் காணப்படுகிறது. அவை அந்த உறுப்பின் வளர்ச்சிக்கும், வலிமைக்கும் பெரிதும் துணை புரிகின்றன.




வெங்காயம் உடற்கலங்களின் தோற்றத்தில் காணப்படுகிறது. அதிலுள்ள சத்து கலங்கள் கழிவுப் பொருள்களை அகற்ற உதவி செய்கிறது.

எங்கள் உடல் உறுப்புகளின் தோற்றத்தை ஒத்திருக்கும் தாவர உணவு வகைகள், அந்தந்த உறுப்புகளுக்கு அதிக சத்தை வழங்கும் உணவாகக் காணப்படுவது ஆச்சரியமாக இருக்கிறதல்லவா? ★★★★★★★★★★★★★

# வண்ணத்துப் பூச்சி வயதென்னாச்சு



பூச்சி இனங்களில் சினிமா நட்சத்திரமாக ஜொலிப்புடன் காணப்படும் பூச்சியினம் வண்ணத்துப் பூச்சியாகும். வண்ணத்துப் பூச்சியின் வண்ண வண்ண நிறங்களைப் பார்த்து மனதைப் பறிகொடுக்காதவர் எவருமில்லை எனக் கூறலாம். பறக்கும் பூக்கள் என்றும் இறக்கை கட்டிய ஆபரணங்கள் என்றும் கூறப்படுகின்றன.

வண்ணத்துப் பூச்சிகளின் கூட்டத்தில் சில அந்துப் பூச்சிகளும் கலந்திருக்கும். இவற்றின் தோற்றங்கள் மூன்றுக்கு ஒன்று என்ற வீதம் தொடர்புடையனவாக இருக்கும். ஆனால் வண்ணத்துப்பூச்சிகள் எப்போதும் பிரகாசமான சூரிய வெளிச்சத்திலேயே பறப்பதுண்டு. அந்துப் பூச்சிகள் தான் இரவு வேளைகளில் நம் கண்களுக்குத் தென்படுகின்றன. இவை பகலில் ஒரு சில சமயங்களில்தான் தலைகாட்டும்.

வண்ணத்துப் பூச்சிகளைப் பார்க்கும் போது எவருக்கும் அவை கவலையில்லாமல் எப்போதும் மகிழ்ச்சியுடன் பறந்து செல்லும் இனம் என்று எண்ணத்தோன்றும். அது நிச்சயம் உண்மைதான். இவற்றிற்கு மகிழ்ச்சியாகப் பறந்து திரிவதும், இனப் பெருக்கம் செய்வதுமே முக்கியமான வேலையாகும். வண்ணப் பூக்களில் அமர்ந்து மகரந்தங்களை உண்டு உணவு தேடுவது இவற்றுக்கு இரண்டாம் பட்சம்தான்.

வண்ணத்துப் பூச்சியானது கம்பளிப்புழு வடிவில் தேவைக்கு அதிகமாக உணவருந்தி விடுகின்றது. எனவே இரை தேடுவது இவற்றுக்கு முக்கியவேலையல்ல.

பல்வேறு உபாயங்களைப் பயன்படுத்தி இணைசேருவதில் இவை படுகில்லாடிகள். சில பூச்சிகள் தங்களது இணையை மணத்தாலும் வேறு சில பூச்சிகள் தங்களின் வர்ண நிறங்களாலும் மற்றும் சில பூச்சிகள் சினிமாப் படங்களில் வரும் கதாநாயகர்கள் போன்று சாகசங்கள் செய்து தங்களுக்குப் பிடித்த துணையை தங்கள் பக்கம் கவர்கின்றன.

ஒவ்வொரு வகையான வண்ணத்துப்பூச்சிகளும் ஒவ்வொரு வகையில் மகிழ்ச்சியாகக் காணப்படுகின்றது. ஒரேஞ்நிற வண்ணத்துப் பூச்சிகள் வேகமாகப் பறப்பதில்லை. இந்த இனத்தில் ஆண் பூச்சியானது பெண் பூச்சி எங்கே போனாலும் பின்னாலேயே மெதுவாக நோட்டமிட்டுத் தொடர்ந்து செல்லும். பெண் பூச்சியானது மரத்தின் மீதோ அல்லது பூச்சிகளின் மீது அமர்ந்த பின்னர் சினிமா நட்சத்திரங்களைப் போன்று சில சில்மிசங்கள் செய்த பின்னர் தானும் ஓர் பூவின் மீது அமர்ந்து பெண் பூச்சி தன் பக்கம் வரும் வரை தவமாய்த் தவம் இருக்கும். "பிரிம்ஸ்டோன்" வகை வண்ணத்துப் பூச்சிகளில் ஆண் பூச்சியானது பெண்ணை வில்லனைப் போலத் துரத்திச் செல்லும்.[ வீதிகளில் காதலர் செல்வதைப் போல ] பல கிலோ மீற்றர் தூரம் பெண் பூச்சி ஓடிப் பறக்கும். பின்னர் முடியாத பட்சத்தில் ஆணுடன் ஐக்கியமாகி விடும். இவை கந்தக மஞ்சள் நிறத்தில் இருக்கும். மரப்பட்டைநிற வண்ணத்துப்பூச்சிகள் காதல் நேரம் வெகுதூரம் பறப்பதில்லை. நமது சினிமா நட்சத்திரங்களைப் போல் ஒரே மரத்தைச் சுற்றித் திரும்பத்திரும்ப ஓடி வருவதைப் போல் காணப்படும். இவை சூரியகாந்திப் பூ போன்ற பூக்களின் மீது ஒன்றையொன்று "உய்யலாலா" பாட்டுப் பாடுவது போன்று வட்டமடித்து இறுதியில் ஒன்றாகச் சேர்ந்துவிடும். பொதுவாக எல்லா வண்ணத்துப் பூச்சிகளும் குறிப்பிட்ட ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்து, அங்கு சென்று தான் மகிழ்ச்சியாக இருக்கின்றன.

நீல நிற வண்ணத்துப் பூச்சிகள் அன்றையகால சுயம்பர முறையில் பெண் பூச்சியானது தனது துணையைத் தேர்ந்தெடுக்கும். பல ஆண் பூச்சிகள் ஒன்றாகச் சுற்றிச் சுற்றி வட்டமடித்துக் கொண்டிருக்கும். அவற்றில் பெண் பூச்சியானது தனக்குப் பிடித்த ஆணைத்தேர்ந்தெடுக்கும். உடனே மற்ற ஆண் பூச்சிகள் நல்ல பிள்ளைகளாக வேறு ஒரு மகாராணி தேர்ந்தெடுப்பாள் தானே என விலகிவிடுகின்றன. இப்படியாகவே கருவுற்ற பெண் பூச்சியானது ஓர் இடத்தில் முட்டையிடாமல் மரங்கள், செடிகள் போன்றவற்றில் முட்டைகளை இடுகின்றன. முட்டையில் இருந்து கம்பளிப் புளு வெளிவந்து அதிக பசியுடன் அது பிறந்த இடம் எதுவானாலும் வேறு செடி வகை இலைகள் போன்றவற்றைத் தின்று தீர்த்து விடும். இவையே மயிர் கொட்டிகளாக எமக்குத் தொந்தரவு தருவன. அழகிலும் ஆபத்து உண்டு என்பதை இதனூடாக அறியலாமோ?..............

கந்தரோடை.

# கணனியும் கண்ணும்

அதிக நேரம் கணனிக்கு முன்னால் கண் விழித்திருப் பவர்களைப் பல விதமான நோய்கள் பிடிக்கின்றன. அதில் முக்கியமான ஒன்று கண் உலர்தல். இமைக்கக் கூடச் செய் யாமல் கணனியே கதியென கிடக்கும் மக்களை, இந்த நோயை விரும்பி அழைப்பவர்கள் பட்டியலில், சேர்த்துக் கொள்ளலாம்.

கணனிப் பொறிக்கு முன்னால் அமர்ந்து நீண்டநேரம் வேலை செய்பவர்களின் கண்கள் அதிக அழுத்தத்தைச் சந்திக்கின்றன. இத்தகைய சூழலில் வேலை செய்யும் கண்களுக்கு 'டிரைஐ சிண்ட்ரோம்' எனப்படும் கண் உலர்தல் நோய் விரைவிலேயே வந்து விடுகின்றது.

அதன் விளைவுகளாகக் கண் எரிச்சல்,கண் அரிப்பு, வலி போன்ற நோய்கள் கூடவே வந்துவிடும் என்கின்றனர் மருத்துவர்கள்.

கண்ணில் இருக்கும் ஈரப்பதம் குறைந்து போவது தான் "டிரைஐ சிண்ட்ரோம்" அல்லது கண் உலர்தல் நோயின் ஒரு வரி விளக்கம். இது எளிதான நோய் எனக் கருதி விட்டு விட்டால் இரும்பைத் துரும்பு அரித்து தீர்ப்பது போல இந்த நோய் நிரந்தரமாகவே கண் பார்வையைப் பறித்துக் கொள்ளும் அபாயம் உண்டு.

கண் எரிச்சல், கண் அரிப்பு, கண் வலி, கண் சிவத்தல் போன்ற அறிகுறிகள் இருந்தால் உங்களுக்கு இந்த நோய் இருக்கும் வாய்ப்புகள் இருக்கின்றன என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். எச்சரிக்கையாய் இருத்தல் பெரும் இன்னலைத் தீர்க்கும்.

நகரங்களில் வாழும் மக்கள் தான் இந்தக் கண் உலர்தல் நோயினால் அதிகம் பாதிப்படைவதாக மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். காரணம் அவர்கள் தான் அடிக்கடி கணனியே கதியெனக் கிடக்கிறார்கள்.

கணனியில் குளிரூட்டப்பட்ட அறையில் இருக்கும் போது குளிர்க்காற்றுப்படும் இடத்தில் அதிக நேரம் இருப்பது கூட கண் உலர்தலுக்குக் காரணமாகி விடுமாம். கண் உலர்தலிலிருந்து தப்பிக்கும் சுலப வழிகள் கண்ணை அடிக்கடி இமைத்துக் கொண்டே இருப்பதும், தொடர்ந்து கணனியைப் பார்க்காமல் இருப்பதும்தான்.

கணனி பயன்படுத்தும் போது அடிக்கடி கண்ணை இமைத்துக் கொண்டே இருப்பது கண்ணின் ஈரப்பதத்தைப் பாதுகாக்கும். குளிர் கண்ணாடிகளை அணிந்து பயணம் செய்வதும் கண்களைப் பாதுகாக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரிக்கு அண்மையில் பிரதிக்கல்வி அமைச்சர் எம்.சச்சிதானந்தன் விஜயம் செய்த போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. பிரதிக்கல்வி அமைச்சரை கல்லூரி மாணவர் ஒருவர் மலர்மாலை அணிவித்து வரவேற்பதையும், அமைச்சரும் ஏனைய அதிகாரிகளும் மங்கள வாத்தியங்களுடன் பாடசாலைக்கு அழைத்து வரப்படுவதையும் முதல் இரு படங்களிலும், பிரதிக்கல்வி அமைச்சர் எம்.சச்சிதானந்தன் உரையாற்றுவதை மூன்றாவது படத்திலும், இவ்வாண்டு இடம் பெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் ஒருவருக்கு அமைச்சர் பரிசில் வழங்குவதை இறுதிப்படத்திலும் காணலாம். (50-250)

## பொதுக் கூட்டம்

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு வலி.வடக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. சகல பொதுச்சபைப் பிரதிநிதிகளுக்கும் இக்கூட்டம் தொடர்பான நிகழ்ச்சி நிரல், அதிகார கடிதம் ஆகியன அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (50-201)


## சேவை நலன் பாராட்டு



திருக்குடும்ப கன்னியர் மடத்தில்
31 ஆண்டுகள் முழு மூச்சாய் பணிசெய்து
ஆசிரியராய், உப அதிபராய் அர்ப்பணிப்புடன்
அளப்பரிய பணியாற்றி அகவை அறுபதில்
(16.12.2009) ஓய்வுபெறும் எமது உப அதிபர்
**திருமதி சித்ரா இராஜரட்ணம்**
அவர்களின் தன்னிகரற்ற சேவையைப்
பாராட்டி அவரது ஓய்வுக்காலம் சிறப்புறவும்
இறையருள் பெருக இதய நெகிழ்வுடன்
வாழ்த்தி நிற்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவிகள், சிற்றூழியர்கள்.


## அனைவரதும் கருத்துச் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதே அரசின் நோக்கம்

### ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, டிச.16

புத்திஜீவிகளுக்கு விலங்கிட்டுச் சிறைவைப்பது அரசின் கொள்கை அல்ல. ஜனநாயகத்தை வலுப்படுத்தி அனைவரதும் கருத்துச் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதே அரசின் நோக்கம் - என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

புத்திஜீவிகளுக்கு விலங்கிட்டு சிறைவைப்பதன்மூலம், அவர்கள் கருத்துக்கள் வெளியிடுவதை எந்த வகையிலும் தடுக்க முடியாது என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அலரி மாளிகையில் பல்கலைக்கழக உப வேந்தர்கள் உட்பட விரிவுரையாளர்களை கடந்த 14ஆம் திகதி மாலை சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு -

ஜனநாயகத்தை வலுப்படுத்தி அனைவரதும் கருத்துச் சுதந்திரத்தினை உறுதிப்படுத்துவதே அரசின் நோக்கம்.

பயங்கரவாதிகள் தமிழ்ச் சமூகத்திலுள்ள புத்திஜீவிகளுக்கு அழுத்தம் கொடுத்ததையும் இதன் காரணமாக எத்தனை பேராசிரியர்கள், கலாநிதிகள் பல்கலைக்கழக உப வேந்தர்கள் நாட்டை விட்டுச் சென்றனர் என்பதையும் அறிந்திருந்தோம். பயங்கரவாதிகள் இந்தப் புத்திஜீவிகளை ஒடுக்குவதற்கு நடவடிக்கை எடுத்த விதத்தைத் தெளிவாகப் பார்த்தோம் - என்றார். (சி)

## ஓய்வூதியர் விவரம் திரட்டப்படுகிறது

நவாலி, டிசெ.16

வலி.தென்.மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் ஓய்வூதியம் பெற்று வரும் ஓய்வூதியர்களின் விவரம் பிரதேச செயலகத்தினால் சேகரிக்கப்பட்டு வருகின்றது.

இதற்கான படிவங்கள் இம்மாத ஓய்வூதிய வவுச்சருடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியம் பெறுபவர்கள் படிவத்தைப் பூர்த்தி செய்து எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதிக்கு முன்னர் தமது பிரிவு கிராமசேவையாளரிடம் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (50-100)


## வீடு-காணி விற்பனை

கொழும்புத்துறை வீதியில் கணக்கர் சந்திக்கு அருகில் 6 பரப்புடன் கூடிய பழைய நாற்சதுர வீடும், வீட்டுக்கு அடுத்துள்ள 5 பரப்பு வெற்றுக்காணியும், இக்காணிக்கு அடுத்து கட்டிமுடிக்கப்படாத வீட்டுடன் 1¾ பரப்புக் காணியும், புங்கன்குளம் வீதியில் கணக்கர் சந்திக்கு அருகில் 2 பரப்புக் காணியும் அதில் அமைந்துள்ள நாலு அறைகளுடன் வீடும் விற்பனைக்கு உள்ளன.

தொடர்பு:- 0718609753, 0777420240

## காணி விற்பனைக்கு

முதலாம் குறுக்குத் தெருவில் ஆஸ்பத்திரி வீதிக்கு மிக அண்மையில், இல.17 இல் அமைந்துள்ள கடை அல்லது களஞ்சியம் அமைக்கக் கூடிய வகையில் 16.5 குளி காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
0779439813, 0779382868

(91457)

## இறைச்சிக்கோழி தேவை

புறொயிலர், கல்பேட்ஸ், ஊர்ச்சேவல்கள் என்பன உடன் தேவை. நியாயமான விலையில் கொள்வனவு செய்யப்படும்.

தொடர்பு: மல்லிகாம் செல்வரா
61, இராமநாதன் வீதி, நாச்சிமார் கோயிலடி. தொ.பே: 0217912783

(91460)

## சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்
## கேள்வி அறிவித்தல் - 2009

### சாவகச்சேரி பிரதேசசபையால் கீழ்க்குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன

1. நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட் M - 09, M - 08) பதிவு செய்யப்பட்டவர்கள் கீழ்க் குறிப்பிடப்பட்ட தொகையைச் செலுத்தி, கேள்விப் பத்திரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
2. முன் அனுபவமும், நிதி வளமும் உள்ள பதிவு செய்யப்பட்ட சமூக மட்ட நிறுவனங்களும் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
3. கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்" என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கும் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
4. ஒவ்வொரு கேள்விகளும் தனித்தனியாக உறையிலிடப்பட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்பட்டு கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
5. கேள்விகள் பரிசீலிக்கப்படும் போது கேள்வி சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
6. கேள்விப் படிவம் வழங்கப்படும் இறுதித் திகதி: 22.12.2009 பி.ப. 2 மணி வரை
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி: 24.12.2009 நண்பகல். 12 மணிவரை
கேள்விகள் திறக்கப்படும் திகதி: அன்றைய தினம் (24.12.2009) பி.ப. 1 மணியளவில் கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.
7. மேலதிக விவரங்களை சாவகச்சேரி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் (கொடிகாமம்) அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

| இல. | வேலையின் பெயர் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் ரூபா | மீளளிக்கப்படாத கேள்விப் படிவம் பணம் ரூபா | மீளளிக்கப்படாத பெறுமதி சேர் வரி 12% ரூபா |
|---|---|---|---|---|
| 01 | சரசாலை உப அலுவலகத்தில் நீர்த் தாங்கி அமைத்தல் | 3500.00 | 750.00 | 90.00 |
| 02 | ஐங்கரன் பாலர் பாடசாலையில் மின்சார இணைப்பு பொருத்துதல். | 1000.00 | 750.00 | 90.00 |
| 04 | இராமாவில் கொல்களத்திற்கு சுற்றுமதில் அமைத்தல் | 3000.00 | 750.00 | 90.00 |
| 05 | நாவற்குழி உப அலுவலகத்தில் கொட்டகை (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு) அமைத்தல் | 2500.00 | 750.00 | 90.00 |

சாவகச்சேரி பிரதேசசபை,
தலைமை அலுவலகம், கொடிகாமம்.
14.12.2009

திரு.வேலுப்பிள்ளை சிவராஜலிங்கம்,
செயலாளர்,
சாவகச்சேரி பிரதேசசபை.

(சி/563278)


## மானிப்பாயில் டெங்கு ஒழிப்புப் பிரசாரம்

நவாலி, டிசெ.16

நுளம்புகள் மூலம் டெங்கு நோய் பரவுவதை தடுப்பதற்காக மானிப்பாய் சுகாதாரப் பகுதியினர் அப்பிரதேசம் முழுவதும் ஒலி பெருக்கி மூலம் வீட்டு வளவுகளில் தேவையற்றுக் கிடக்கும் பிளாஸ்ரிக் பொருள்கள் மற்றும் கழிவுப் பொருள்கள் என்பவற்றை வெட்டிப் புதைக்குமாறும் மரக்கொப்புகள் வெட்டி வெளிச்சம் வர விடுமாறும் அறிவித்து வருகின்றனர்.

இவற்றை செய்ய தவறுபவர்கள் மீது நீதி மன்றம் மூலம் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்றும் மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (50-100)

## வறுமையான குடும்பங்களுக்கு ஆடுகள் வழங்கப்பட்டன

நவாலி, டிசெ.16

ஐசாக் நிறுவனம் ஆனைக்கோட்டை ஜே-133 கிராம சேவையாளர் பிரிவில் வறுமைக்கோட்டின் கீழுள்ள 7 குடும்பங்களுக்கு தலா இரண்டு ஆடுகள் வீதம் கிராம சேவையாளர் நிசாந்தன் தலைமையில் அவரது அலுவலகத்தில் [illegible] வாரம் வழங்கியுள்ளது. (50-100)


## 42-3495 இலக்க இசுசு லொறி விற்பனைக்கான கேள்விக் கூறு கோரல்

எமது சங்கத்தில் நல்ல நிலையிலுள்ள 42 - 3495 இலக்க இசுசு லொறி விற்பனைக்கான கேள்விக் கூறு கோரப்படுகின்றது. சங்கக் காரியாலய நேரத்தில் லொறியினை பார்வையிட்டு பின்வரும் தொகைப்பணத்தை காரியாலயத்தில் செலுத்தி கேள்விக் கூறுக்கான விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று 31.12.2009ஆம் திகதிக்கு முன் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கீழ் காட்டப்பட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

கேள்வி வைப்பு பணம் (மீளளிக்க முடியாதது 500.00)
கேள்வி வைப்பு பணம் (மீளளிக்கக் கூடியது 5000.00)

கேள்விக் கூறுவிலை தொடர்பாக சங்க இயக்குநர் சபையின் முடிவே இறுதியானது.

15.12.2009.

கூட்டுறவு சேவையிலுள்ள
பொதுமுகாமையாளர்,
வலி.கிழக்கு வட பகுதி பலநோக்கு
கூட்டுறவுச் சங்கம், அச்சுவேலி.

(சி/563279)


## மரண அறிவித்தல்

### சங்கரப்பிள்ளை நடனசிங்காரவேலன் (சொக்கலிங்கம் / அமுதன்)



(முன்னாள் ஊழியர், கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்)

வேலணை மேற்கு, 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டை மூத்தநயினார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட ச.நடனசிங்காரவேலன் 14.12.2009 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - மாரிமுத்து தம்பதியரின் புதல்வனும் முத்துமணியின் அன்புக் கணவரும் புஷ்பராணி, விக்னேஸ்வரி, கமலேஸ்வரி, வடிவேல் (யாழ்.போதனா வைத்தியசாலை), வரதராஜன், சுரேந்திரன், அமரர் லோகேந்திரன் மற்றும் மகேஸ்வரி (ஆசிரியை, மானிப்பாய் மகளிர் கல்லூரி), பிரியதர்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவராசா, குணசிங்கம், சதீஸ்குமார், சாரதா, வசந்தமலர், அகிலா ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (15.12.2009) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரையம்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மூத்தநயினார் கோயிலடி,
ஆனைக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.

(91467)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். நகரின் அபிவிருத்தித் திட்டங்களின் பங்காளராக வர்த்தகர்கள் இணைய வேண்டும்

## யாழ். மேயர் கோருகிறார்



யாழ்ப்பாணம்,டிசெ.16

யாழ்.நகரின் அபிவிருத்தியில் பங்காளிகளாக வர்த்தகர் சங்கங்கள் இணைந்து கொள்ள வேண்டும்.

யாழ். நகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா மேற்கண்டவாறு கோரியுள்ளார்.

கொழும்பில் இருந்து வருகைதந்த வர்த்தகர் சங்கத்தின் பிரதிநிதிகளுடன் நடத்திய கலந்துரையாடலிலேயே அவர் இப்படிக் கோரினார்.

யாழ்.மாநகர சபை முதல்வர் சங்கப் பிரதிநிதிகளுடனான சந்திப்பு மாநகரசபை முதல்வர் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

அங்கு உரையாற்றிய மேயர் கூறியதாவது:-

சுகாதார வேலைத்திட்டங் கள் தொடர்பில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தல், பாவனைக்கு உதவாத பொருள்களை நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லுதல், நீரில் கலந்துள்ள நோய் காவிக் கிருமிகளையும் இரசாயனக் கழிவுகளையும் கண்டறிந்து கொள்ளக்கூடிய பரிசோதனைக் கூடங்களை அமைத்தல், குப்பைகளை அகற்றுதல், விலங்கு விசர் நோய் பரப்பும் கட்டாக்காலி நாய்களை அழித்தல், சுகாதாரக் கல்வி தொடர்பான தகவல் படங்களைக் காண்பித்தல் போன்ற செயற்பாடுகள் முன்னெடுக் கப்பட வேண்டும்.

நகரமண்டபம், பொது நூலகம், கலாசார மண்டபம், நவீன சந்தை, விளையாட்டு மைதானம், குடிதண்ணீர் விநியோகம், வடிகாலமைப்பு, பொழுதுபோக்கு சாதனங்களை அபிவிருத்தி செய்வதற்குமான வேலைத் திட்டங்களில் தேவையான வளங்கள், நிதி உதவிகளை வழங்கும் பங்காளிகளாக வர்த்தகர் சங்கமும் இணைந்து கொள்ள வேண்டும் - என்றார்.

முதல்வரின் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டு அதை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என வர்த்தகர் சங்கம் உறுதியளித்தது.

மாநகரசபைக்கென கொழும்பில் வைத்து இரு சக்கர உழவு இயந்திரத்தைக் கையளிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (1-111)

## வடக்கில் நீதித்துறைக் கட்டமைப்பை நடைமுறைப்படுத்த உயர்மட்டக் குழு

வட மாகாணத்தில் உடன் அமுலுக்கு வரும் வகையில் நீதித்துறைக் கட்டமைப்பை ஸ்தாபிப்பதற்கும் நீதிமன்ற நிர்வாகத்தை நடைமுறைப் படுத்துவதற்கும் உயர்மட்டக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொடவினால் நியமிக்கப்பட்டுள்ள இக்குழு 3 உறுப்பினர்களைக் கொண்டதென அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்ற நீதியரசர் கே.ஸ்ரீபவன் தலைமையிலான இந்தக் குழுவினர் முப்பது வருட மோதல் முடிவுக்கு வந்துள்ளதை அடுத்துச் சட்டத்தையும் ஒழுங்கையும் மீண்டும் நிலைநாட்டும் வகையில் செயற்படவுள்ளனர்.

நீதி மற்றும் அரசியல் யாப்பு விவகார அமைச்சுக்களின் அதிகாரிகளும், சிறைச்சாலை பிரதம அதிகாரிகள் ஆகியோருடன் யாழ். அரச அதிபர் கே.கணேஷும் இந்தக் குழுவின் உறுப்பினர்களாவர்.

# சரணடைய வந்த புலித் தலைவர்களை கொன்ற பொறுப்பை ஜனாதிபதி - சரத் ஏற்க வேண்டும்!

## விக்கிரமபாகு கருணாரத்ன கோரிக்கை

கொழும்பு, டிசெ. 16

வெள்ளைக்கொடியுடன் சரணடைய வந்த விடுதலைப் புலிக ளின் முக்கியஸ்தர்களை கொலை செய்த பொறுப்பை முப்ப டைகளின் தளபதியான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், யுத்தத் தின்போது இராணுவத்தளபதியாக பதவி வகித்த ஜெனரல் சரத் பொன்சேகாவும் ஏற்க வேண்டும் - என்று இடதுசாரி முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது

இவர்களின் இந்த நடவடிக்கை காரணமாக சர்வதேச ரீதியாக வரும் அழுத்தங்களை இந்த நாட்டு மக்களே எதிர்கொள்ள வேண்டி ஏற்படும் என முன்னணியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார்.



கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே இவர் இதனைக் கூறினார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு -

தமது குடும்பத்தினருடன் இணைந்து வெள்ளைக் கொடியை ஏந்தியவாறு சரணடையவந்த பிரபாகரன், நடேசன், புலித்தேவன் ஆகியோரை தாக்கிக் கொலை செய்துள்ளனர்.

அவர்களின் குடும்ப உறுப்பினர்களையும் கொலை செய்துள்ளனர். இதற்கான சான்று யுத்தத்தின் இறுதிக்காலத்தில் இராணுவ தரப்பிலிருந்து வெளிவரவில்லை. எனினும் முன்னாள் இராணுவத் தளபதியான சரத் பொன்சேகாவால் தற்போது இது வெளியாகியுள்ளது.

சர்வதேச யுத்த நீதி களுக்கு அமைவாக வெள்ளைக்கொடியுடன் வருபவர்களை கொலை செய்வது பாரிய அநீதியாகும்.

தமிழர் போராட்டத்தை முன்னெடுத்தவர்களை சரணடையுமாறு சர்வதேசத்தின் ஊடாக மஹிந்தவே அழைத்துள்ளார். அந்த அழைப்பை ஏற்று வந்தவர்களை இவ்வாறு கொலை செய்துள்ளனர். இவ்வாறான யுத்தக் குற்றவாளிகளுக்கா உதவினீர்கள் என அமெரிக்காவிலுள்ள மக்கள் தற்போது அந்த அரசிடம் கேட்கின்றது. யுத்த இரகசியங்களை வெளியிடுவது தவறு என அரசு கூறுகின்றது. பொன்சேகா கூறியது போன்ற சம்பவங்கள் இடம்பெற்றிருப்பதையே இது எடுத்துகாட்டுகின்றது. சரத்பொன்சேகாவும் யுத்த குற்றவாளியே. லசந்தவை இராணுவமா கொன்றது என அன்று கேட்டபோது அதனை மறுத்த சரத் பொன்சேகா தற்போது அதனை ஏற்றுக் கொள்ளும் நிலையில் உள்ளார்.

தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட இந்த அநீதியை நாம் ஐக்கிய நாடுகளிடம் தெளிவு படுத்தப் போவதில்லை. அவர்கள் எதனையும் செய்யமாட்டார்கள். சேகுவேரா போன்றோர் கொல்லப்பட்டதற்கும் அவர்கள் எதனையும் கூறவில்லை.

அத்துடன் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் உத்தியோக பூர்வமாக இன்னும் பேச்சு நடத்தப்படவில்லை. சிவாஜிலிங்கம், சந்திரநேரு ஆகியோர் எனக்கு உதவுவதாக கூறியுள்ளனர். தமிழ் மக்களும் எனக்கு வாக்களிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது - என்றார்.

# பொய்யான வாக்குறுதிகளை வழங்கும் அரசியல் பிரசார வழி முறையை விரும்பவில்லை

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.16

தேர்தல் காலங்களில் பொய்யான வாக்குறுதிகளை வழங்கும் அரசியல் பிரசார வழிமுறையை தாம் ஒருபோதும் விரும்புவதில்லை என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா வன்னி தொண்டராசிரியர்கள் மத்தியில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் காலை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யாழ்.பணிமனைக்கு வருகை தந்திருந்த வன்னி பிரதேசத்தைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்கள் மத்தியில் உரை நிகழ்த்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தவறான தமிழ்த் தலைமைகளின் வழிநடத்தலின் விளைவாக மக்கள் எதிர்கொண்ட சொல்லொணாத் துன்பங்களின் அனுபவத்தைச் சரியாகப் புரிந்துகொண்டு எதிர்காலத்தில் நேர்மையான தமிழ் தலைமை ஒன்றை தெரிவுசெய்ய வேண்டும் எனத் தெரிவித்ததுடன் அடிப்படைச் சுதந்திரங்கள் அனைத்தையும் இழந்து புலித் தலைமையின் கீழ் நடைப்பிண மாக வழிநடத்தப்பட்ட மக்கள் மிகப்பெரும் விலை கொடுத்து மீட்கப்பட்டுள்ளனர் எனக் கூறினார்.

இந்த நேர்மையான அமைதியான சூழலை யாருக்கும் தாரைவார்த்து விடாமல் தொடர்ந்தும் தக்கவைத்துக் கொள்வது அனைவரதும் பொறுப்பான பணி என்றும் எதிர்காலத்தில் உங்கள் அனைத்து அடிப்படைச் சுதந்திரங்களையும் பாதுகாத்துக்கொண்டு உங்களின் வாழ்வை வளமானதாக அமைத்துக் கொள்வதற்கு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் உரிய ஒத்துழைப்பினை வழங்குவதின் ஊடாக உங்கள் அனைவரினதும் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாகவும் நிம்மதியானதாகவும் சுபீட்சமானதாகவும் அமைத்துக்கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.

வன்னிப்பிரதேச தொண்டர் ஆசிரியர்களின் இக்கட்டான நிலைமையை கவனத்திற்கொண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் விசேட அமைச்சரவைப் பத்திரம் ஒன்றைச் சமர்ப்பித்து நேர்முகப் பரீட்சையை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதாகவும் தேர்தல் முடிவடைந்த பின்னர் நியமனக் கடிதங்களை வழங்குவதற்கு ஜனாதிபதியுடனும் கல்வி அமைச்சருடனும் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்தார். (1)

# மாற்றுவலுவுள்ளோர் தினத்தை ஒட்டி வலி.வடக்கில் விசேட நிகழ்வுகள்

வலி. வடக்கு,டிசெ.16

வலிகாமம் கல்வி வலய முறைசாராக் கல்விப் பகுதியின் ஏற்பாட்டில் சர்வதேச மாற்று வலுவுள்ளோர் தினக்கொண்டாட்டம் வலி காமம் கல்வி வலய ஆரம்பப் பிரிவு உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ். மாதவகுமாரன் தலைமையில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி அருணாசலம் மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை புற்றுநோய் சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி எஸ்.ஜெயக்குமாரும் சிறப்பு விருந்தினர்களாக கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தின் நிர்வாக அலுவலகர் எஸ். திலகரட்ணம், கடவுளின் குழந்தைகள் அமைப்பின் பணிப்பாளர் செல்வி பூபதி சின்னத்தம்பி உட்பட மற்றும் பலரும் கலந்து கொண்டார்கள்.

மாற்று வலுவற்றோர் தினத்தையொட்டி நடைபெற்ற கட்டுரைபோட்டி, பேச்சுப் போட்டி, நாடகம், நடனம் என்பவற்றில் வெற்றியீட்டிய பாடசாலை மாணவ மாணவிகளுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

வாழ்வகம், சிவபூமி, நவீல்ட் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளுடன் இளவாலை புனித கன்னியர் மடம் பாடசாலை, பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை ஆகியவற்றின் மாணவிகளின் நடன நிகழ்வுகளும் இடம் பெற்றன.

(1-86)

# சுண்ணாம்புக்கல் அகழ்வில் ஈடுபடுவோர் முறையான அனுமதியை செயலகத்தில் பெறவேண்டும்

## அனுமதிபெறாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை என அரச அதிபர் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.16

குடாநாட்டில் சுண்ணாம்புக்கல் அகழ்வுப் பணியில் ஈடுபடுவோர் முறையான அனுமதியைப் பெறவேண்டும். அவ்வாறு அனுமதி பெறாமல் அகழ்வோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

யாழ். அரச அதிபர் கே. கணேஷ் மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.மாவட்டத்தில் துரித அபிவிருத்தியைப் பற்றிப் பேசப்படுகின்ற இக் காலகட்டத்தில் நீர்வளம், நிலவளம் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமாகும். யாழ். மாவட்டத்தில் நிலத்தடி நீர் மிக வேகமாக மாசுள்ள நீராக மாறி வருகின்றது. இவ்வாறு மாசுள்ள நீராக மாறி வருவதற்கு யாழ். மாவட்டத்தில் பரவலாக மேற்கொள்ளப்படும் சுண்ணாம்புக்கல் அகழ்வும் ஒரு முக்கிய காரணமாக கருதப்படுகின்றது.

சுண்ணாம்புக்கல் அகழ்வானது யாழ். மாவட்டத்தில் முன் அனுமதியின்றி சட்டத்திற்கு முரணான வகையில் பரவலாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதுவரை 16 பேர் மட்டுமே கல் உடைப்பது தொடர்பான அனுமதியைப் பெற்றுள்ளனர். சட்டத்திற்குப் புறம்பான கல் அகழ்வுச் செயற்பாடானது யாழ்.மாவட்டத்தில் நிலத்தடி நீர் வளம் பாதிக்கப்படுவதுடன் சுற்றுச் சூழலும் மாசடையும் தன்மையும் ஏற்பட்டுவருவதுடன் எமது எதிர்கால சந்ததிக்கு பாதிப்பினை ஏற்படுத்துவதாக வும் அமைகிறது. சுண்ணாம்புக்கல் அகழ்வு தொடர்பாக சட்டங்கள் இருந்தும் கல் அகழ்வோர் முறையாகக் கடைப்பிடிக்காமையைக் காணக்கூடியதாக உள்ளது.

இலங்கையில் கனிமங்களை அகழ்ந்தெடுப்பது தொடர்பாக முழுமையான அதிகாரத்தினை இலங்கை புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகம் என்ற நிறுவனமே கொண்டுள்ளது. இப் பணியகத்திடமிருந்து கனிமப் பொருள்களை இனங்காண்பது, மதிப்பீடு செய்வது, தோண்டி எடுப்பது, பதப்படுத்துவது போன்றவற்றிற்கான அனுமதியினைப் பெற வேண்டும். யாழ்.மாவட்டத்தில் கல் மண் அகழ்வுகளும் இப்பணியகத்திடமிருந்தே அனுமதி பெறவேண்டும்.

யாழ்.மாவட்டத்தில் மண் அகழ்வு தொடர்பான அனுமதிகள் தற்போது யாழ்ப்பாணம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் கட்டடத்தில் இயங்கி வரும் இலங்கை புவிச்சரிதவியல் அளவை, மற்றும் சுரங்கங்கள் பணிமனையினால் வழங்கப்பட்டு வருகின்றது. அதேபோல் யாழ்.மாவட்டத்தில் சுண்ணாம்புக்கல் அகழ்வுத் தொழில்களில் ஈடுபட்டு வருவோர் இப்பணியகத்திடமிருந்தே அதற்கான அனுமதியைப் பெறவேண்டும்.

இச்செயற்பாடானது யாழ்.மாவட்டத்தில் நீண்டகால அபிவிருத்தியைக் கொண்டு அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. கல் அகழ்வோர் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகத்திலும், கல் உடைக்கும் தொழிற்சாலை உரிமையாளர்கள் யாழ் மாவட்ட செயலகவளவில் இயங்கும் சூழல் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு அலுவலகத்திலும் உரிய அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொண்டு தமது தொழில்களுக்குரிய சட்டபூர்வ ஏற்பாட்டுடன் செய்யுமாறு வேண்டப்படுகின்றார்கள். தவறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட வேண்டும் என மாவட்டச் செயலக கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான செயற்பாடுகளை உள்ளூராட்சி மன்றங்கள், கிராம அலுவலர்கள் மற்றும் பிரதேச செயலக சூழல் அபிவிருத்தி உத்தியோகத்தர் கண்காணிப்பார்கள் - என்றுள்ளது. (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சியால் உங்களின் பலன் மாறப்போவது எப்படி?

## வித்யா தருவதைப் பழயுங்கள்

விரோதி வருடம் கார்த்திகை மாதம் 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நேற்று டிசெம்பர் 15ஆம் திகதி அமாவாசை திதி, கேட்டை நட்சத்திரம், சூலம் நாம யோகம், நாகவம் நாம கரணம், நேத் திரம், ஜீவனில்லாத சித்த யோகத்தில் புதன் ஓரையில், பஞ்ச பட்சியில் கோழி துயில் கொள்ளும் நேரத்தில் சூரிய உதயம் புக இரவு மணி 11.07க்கு மகரத்திலிருந்து ஸ்திர வீடான கும்பத்திற்குள் குரு பகவான் நுழைகிறார். குரு பக வானின் திருவருள் இருந்தால் நாம் எதிலும் முதலிடத்தைப் பிடிக்க முடியும். தேசப்பற்று உள்ளவர்களை உருவாக்குபவர் குரு பகவான்தான்.

ஓடி ஓடி உழைத்தும் ஒரு குண்டு மணித் தங்கம்கூட சேர்க்க முடியாமல் தவிப்பவர்களின் ஜாதகத்தில் இவர் பலவீனமாக இருப்பார். இவரின் அனுக்கிரகம் இருந்தால் தங்கத்திலேயே புரளலாம். இந்த நவீன உலகத்தில் பெற்றெடுத்த குழந்தைக்குப்பால் புகட்ட மறக்கும் தாய்மார்கள் மத்தியில் எந்தப் பிரதிபலனும் பாராமல் தன் பாலால் குழந்தையின் உயிரைக் காக்கும் பசுவை ஆள்பவரும் குரு பகவான் தான்.

நான்கு வேதங்களிலும் பழுதில்லாமல் பாண்டித்தியம் பெற்றிருந்தும் சாதி, மத பாகுபாடு பார்க்காமல் மனித நேயத்துடன் எல்லோருக்கும் போதிக்கும் ஆன்மீகப் போதகர்களின் மொத்த உருவமும் இவர்தான். ஐநூறு, அறுநூறு பக்கமுள்ள கோப்புகளாக இருந்தாலும் அதை அரைமணி நேரத்தில் படித்து ஐம்பது வரியில் அறிக்கை தயாரிப் பவரின் அறிவாற்றலில் நிறைந்திருப் பவரும் இவர்தான்.

அதிக பருமனாகவோ அல்லது ஒல்லியாகவோ இல்லாமல் உயரத்திற்கு தகுந்த எடையுடன் பார்ப்பதற்கு லட்சணமாக கருணைப் பார்வையால் நம்மைக் காந்தம்போல் இழுப்பவர்களெல்லாம் குருவின் ஆதிக்கத்தில் பிறந்தவர்கள்தான். கலசத்துடன் உயர்ந்து நிற்கும் கோபுரங்கள், அசைந்து செல்லும் ரதங்கள், ஆர்ப்பரிக்கும் வெண் குதிரைகளுக்கெல்லாம் அதிபதியும் இவர்தான். லஞ்சமே வாங்காமல் கடமையாற்றும் அரசு அதிகாரிகளெல்லாம் குரு பகவானின் சாயல்தான். எமது எதிர்காலச் சந்ததியினருக்கு இலவசக்கல்வி தருபவர்களின் இதயத்தில் இருப்பவர் இந்தக் குருதான்.

பணத்தை வெளியிடும் மத்திய வங்கியும் இவர்தான். சுனாமி, வெள்ளம், நில நடுக்கம், தீ விபத்து, சாலை விபத்து மற்றும் கொடிய நோய்களால் பாதிக்கப்படுபவர்களை அந்த இடத்திற்கு உடனே ஓடிப்போய் உதவும் உள்ளங்களில் வாழ்பவரும் இந்த குரு பகவான் தான். வறுமையிலும் வார்த்தை தவறாமல் வாழ்பவர்களை இயக்குபவரும் இவர்தான்.

தனகாரகனான குருபகவான் இது வரை தனது நீச வீடான மகரத்தில் அமர்ந்திருந்து உலக அளவில் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தினார். தற்சமயம் பலவீனமாக இருந்த நீச வீட்டிலிருந்து விடுபட்டு வளைய வீடான கும்பத்தில் குரு அமர்வதால் கறுப்புப் பணம் வெளியே வரும்; உலகெங்கும் பணப்புழக்கம் ஓரளவு அதிகரிக்கும். 4.5.2010 முதல் 6.11.2010 முடிய குரு பகவான் தனது சொந்த வீடான மீனத்தில் ஆட்சி பெற்று அமர்வதால் வேலை வாய்ப்பு பெருகும். மூடிக் கிடக்கும் தொழிற்சாலைகள் திறக்கப்படும். நிதி ஆதாரம் பெருகும். பங்குச்சந்தை கொஞ்சம் ஏறுமுகமாகும்.

தங்கம் விலை உயரும். நீதி, நேர்மையுள்ளவர்கள் கௌரவிக்கப்படுவார்கள். 4.5.2010 முதல் 6.11.2010 முடிய குருவும் சனியும் பார்த்துக்கொள்வதால் நீதிபதிகள், காவல்துறையையும் ஆள்பவர்களையும் எச்சரிப்பார்கள். அயல் நாட்டுத் தொடர்புடைய வங்கிகள் தடுமாறி முன்னேறும். மிகப்பெரிய நிறுவனங்கள் பல, தங்கள் பங்குகளை நெருக்கடியால் விற்பனை செய்யும். பள்ளிகளில், கல்லூரிகளில் புதிய பாடத் திட்டங்கள் நடைமுறைக்கு வரும். இதனால் பாரம்பரிய கல்வி புறக்கணிக்கப்படும். கல்லூரி மாணவர்களிடையே அமைதியின்மையும் சண்டைக் குணமும் காணப்படும். ஆலயங்கள் புதுப்பிக்கப்படும். பெற்றோல், டீசல் விலை கட்டுப்பாட்டுக்குள் இருக்கும். கட்டுமானப் பொருள்களின் விலை உயரும். குருபகவான் கன்னியையும் பார்ப்பதால் இளம் பெண்கள் சாதிப்பார்கள். பெரிய பதவிகளில் இளைஞர்கள் அமர்வார்கள்.

தைரொய்ட், புற்றுநோய் அதிகரிக்கும். அதேசமயம் மருத்துவத் துறை வளரும். மருத்துவ ரீதியாகப் பிள்ளைப்பேறு பெறுவதும் அதிகமாகும். கிராமங்கள் வளர்ச்சியடையும். பருவமழை தவறிப் பெய்யும். சிறுதானிய வகைகளின் விளைச்சல் குறையும். 2010 மத்திய பகுதியிலிருந்து பால் உற்பத்தி குறையும். ஆகமொத்தம் இந்தக் குரு மாற்றம் நிலையான புத்தியை தராமல் ஒருவித தடுமாற்றத்தையும், எதிலும் கலப்படத்தையும் தருவதாக அமையும்.

உள்ளொன்று வைத்து புறமொன்று




பேசாதவர்களே, உறவினர்களைவிட நண்பர்களிடம் மனம் திறந்து பேசுபவர்களே, உட் கார்ந்த இடத்திலேயே உலகியல் சம்பவங்களைத் தெரிந்து கொள்பவர்களே, யாருக்காகவும் எதற்காகவும் தன்னை மாற்றிக் கொள்ளாதவர்களே, எல்லோரும் எல்லாம் பெற வேண்டும் என்று விரும்பும் நீங்கள் பகிர்ந்து உண்பதில் சந்தோஷமடைவீர்கள். லட்சியவாதிகளான உங்களை லட்சங்களால் விலை பேச முடியாது. அப்படிப்பட்ட உங்களை குரு என்ன செய்யப் போகிறார் என்று பார்ப்போம்.

இதுவரை 10ஆம் வீட்டில் அமர்ந்து உங்களைப் பலவிதங்களிலும் பழிவாங்கினாரே குருபகவான். கையில் பத்து காசு தங்க விடாமல் அடுத்தடுத்து செலவுகளிலும், பிரச்சினைகளிலும் சிக்க வைத்தாரே! உங்களைப் பார்த்தாலே பவ்வியமாக பேசுபவர்களெல்லாம் கை நீட்டி நையாண்டியாகப் பேசினார்களே! எந்த வேலையிலும் நிலைக்க முடியாமல் சிரமப்பட்டீர்களே! சாதாரண வேலையைக்கூட முடிக்க முடியாமல் திணறினீர்களே!

வரவேண்டிய பணமும் வராமல் தவித்தீர்களே! சில இடங்களில் சில நேரங்களில் அவமானப்பட்டீர்களே! பெரிய திட்டம் தீட்டியும் அதை செயல்படுத்த முடியாமல் தவித்தீர்களே! இனி எல்லாம் மாறும்.

15.12.2009 முதல் உங்களின் பிரபல யோகாதிபதியான குரு பகவான் லாப வீட்டில் வந்தமர்வதால் எதிலும் வெற்றி பெறுவீர்கள். சந்தேகத்தின் பேரில் பிரிந்திருந்த கணவன்-மனைவி ஒன்று சேர்வார்கள். உங்களையுடைய அறியாமல் உங்களுக்குள் ஒருவித சோம்பலும், அலட்சியமும் இருந்ததே! இனி பல வேலைகளையும் ஒரே நேரத்தில் பார்க்கும் அளவிற்கு சுறுசுறுப்பாவீர்கள். தாமரை இலையும் தண்ணீரும் போல மனைவி, மக்களுடன் ஒட்டாமலிருந்தீர்களே. இனிக் கலகலப்பாக பேசுவீர்கள். குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். விழாக்களை முன்னின்று நடத்துவதன் மூலம் பதுங்கியிருந்த நீங்கள் வெளிச்சத்திற்கு வருவீர்கள். பார்த்தும் பார்க்காமல் போய்க்கொண்டிருந்த பிரபலங்கள் நின்று நேரம் ஒதுக்கி உங்களிடம் பேசுவார்கள். நாடாளுபவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு கிட்டும். கௌரவப் பதவிகள் தேடிவரும். கல்வியாளர்கள், அறிஞர்களால் பாராட்டப்படுவீர்கள். வெளிவட்டாரத்தில் உங்களுக்கு எதிராக பின்னப்பட்டிருந்த சூழ்ச்சிகளை முறியடித்து முன்னேறுவீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தையும், அதிக வட்டிக்கு வாங்கியிருந்த கடனையும் தந்து முடிப்பீர்கள்.

குருபகவான் 5ஆம் வீட்டைப் பார்ப்பதால் பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வழக்கில் வெற்றி பெறுவீர்கள். சொந்த ஊரில் வீடு கட்டுவீர்கள். மகளுக்கு எவ்வளவோ வரன் பார்த்தும் உங்கள் ரசனைக்கேற்ப அமையாமல் போனதே! இனி அழகு, அறிவு அந்தஸ்துள்ள வரன் அமைவான். ஊரே வியக்கும்படி கல்யாணத்தை நடத்துவீர்கள். அடிக்கடி இனி வேலை மாறாமல் நிரந்தரமாக ஓரிடத்தில் அமர்வீர்கள். தாய்மாமன், மாமி வழியில் இருந்து வந்த மன வருத்தங்கள் நீங்கும். 7ஆம் வீட்டைக் குரு பார்ப்பதால் தலைவலி, கால்வலி குணமாகும். மருத்துவச் செலவுகள் இனிக் குறையும். இருண்டிருந்த முகம் பள பளப்பாகும். மனைவி வழி உறவினர்களுடன் இருந்து வந்த சண்டை, சச்சரவுகள் விலகும். அடிமனதில் இருந்த தாழ்வு மனப்பான்மையில் இருந்து விடுபடுவீர்கள். வீடு கட்ட அல்லது வாங்க, வங்கிக் கடன் கிடைக்கும். உங்களின் 3ஆம் வீட்டை குரு பார்ப்பதால் சகோதர, சகோதரிகளிடையே இருந்து வந்த சங்கடங்கள் சரியாகும்.

### குருபகவானின் நட்சத்திர சஞ்சார பலன்கள்:

15.12.2009 முதல் 18.1.2010 முடிய உங்கள் ராசிநாதனான செவ்வாயின் அவிட்டம் நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் பதவிகள் தேடிவரும். சொத்துப் பிரச்சினை தீரும். அரசால் ஆதாயம் உண்டாகும். நிர்வாகத் திறமை கூடும். உடன் பிறந்தவர்கள் உதவுவார்கள். சகோதரிக்கு திருமணம் ஏற்பாடாகும்.

19.1.2010 முதல் 17.3.2010 முடிய ராகுவின் சதயம் நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் நட்பு வட்டம் விரியும். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். வேற்று மொழி பேசுபவர்கள் உதவுவார்கள். விலை உயர்ந்த மின்னணு, மின்சார சாதனங்கள் வாங்குவீர்கள். இழந்த உரிமையைப் பெறுவீர்கள். பழைய வாகனத்தை விற்றுப் புதிதாக வாங்குவீர்கள்.

18.3.2010 முதல் 3.5.2010 வரை மற்றும் 7.11.2010 முதல் 21.11.2010 முடிய உங்களின் பாக்யாதிபதியான குருபகவான் தனது பூரட்டாதி நட்சத்திரத்தில் செல்வதால் இக்காலக்கட்டத்தில் வரவேண்டிய பணம் கைக்கு வரும். மூத்த சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். வழக்கில் வெற்றி கிடைப்பதன் மூலம் செல்வாக்குக் கூடும். பிள்ளைகளால் புகழ், கௌரவம் உயரும். வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும். நகை வாங்குவீர்கள்.

4.5.2010 முதல் 21.5.2010 வரை மற்றும் 28.9.2010 முதல் 6.11.2010 முடிய குருபகவான் தனது பூரட்டாதி நட்சத்திரத்தில் சென்றாலும் உங்கள் ராசிக்கு 12ஆம் வீட்டில் சென்று மறைவதால் வரவுக்கு மிஞ்சிய செலவுகளும் அரசு வகையில் அலைச்சலும் பிள்ளைகளால் மனஉளைச்சலும் வரும். திடீர் பயணங்கள் அதிகரிக்கும்.

22.5.2010 முதல் 27.9.2010 முடிய உங்களின் பாதகாதிபதியான சனிபகவானின் உத்திரட்டாதி நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் சிறுசிறு விபத்துகள் வந்து நீங்கும். வாகனம் பழுதாகும். யாருக்காகவும் பிணைக்குக் கையெழுத்திட வேண்டாம். தங்க நகைகளை இரவல் தரவேண் டாம். வீண் பழி, பதட்டம் வந்து நீங்கும். அரசுக்கு செலுத்த வேண்டிய வரிகளை தாமதப்படுத்த வேண்டாம். இக்காலகட்டத்தில் குருபகவான் விரய ஸ்தானத்தில் செல்வதால் சேமிப்புகள் கரையும். புண்ணிய தலங்கள் சென்று வருவீர்கள். உத்தியோகத்தில் இடமாற்றம் வரும். மூத்த சகோதரரின் 'உடல் நிலை பாதிக்கும்-.

வியாபாரத்தில் அநாவசிய பேச்சைக் குறைப்பீர்கள். அதிரடியாக செயலில் இறங்குவீர்கள். வருமானத்தை உயர்த்த கடையை அழகுபடுத்துவீர்கள். சில சலுகைத்திட்டங்களையும் அறிவிப்பீர்கள். சந்தை நிலவரத்தை உன்னிப்பாக கவனித்து அதற்கேற்ப புதிய முதலீடுகளையும் செய்வீர்கள். பழைய சரக்குகள் விற்றுத்தீரும். இடவசதியில்லாமல் தவித்தீர்களே! கடையை விசாலமான இடத்திற்கு மாற்றுவீர்கள். வேலையாள்கள், பங்குதாரர்கள் ஒத்துழைப்பு அதிகரிக்கும். உணவு, இரும்பு, கமிஷன் வகைகளால் ஆதாயம் உண்டு. டிசெம்பர், ஜனவரி மாதங்களில் புது ஒப்பந்தங்கள் தேடி வரும். பெப்ரவரி, மார்ச் மாதங்களில் வெகு நாள்களாக நிலுவையிலிருந்த பாக்கித் தொகைகள் வசூலாகும்.

உத்தியோகத்தில் எத்தனையோ அவமானங்களைச் சந்தித்தீர்களே! உங்களை விடப் படிப்பில், அனுபவத்தில், திறமையில் குறைவானவர்கள் முன்னிலையில் உங்களை மட்டம் தட்டிப் பேசினார்களே! இனி அந்த அவல நிலை மாறும். பதவி உயரும். மூத்த அதிகாரி மனம் விட்டுப்பேசுவார். மார்ச், ஏப்ரல் மாதங்களில் பெரிய நிறுவனங்களிலிருந்து புது வாய்ப்புகள் தேடி வரும். வேலையில் நிரந்தரமாக்கப்படுவீர்கள்.

கன்னிப் பெண்கள் காதலில் சிக்கி தடுமாறினீர்களே! இனித் தெளிவாக முடிவுகள் எடுப்பீர்கள். பழைய நண்பர்கள் உதவுவார்கள். நீங்கள் எதிர்பார்த்ததைப்போல நல்லவர் வாழ்க்கை துணையாக அமைவர். உயர்கல்வியை முடிப்பீர்கள்.

மாணவ-மாணவிகளே பாகற்காயாக இருந்த படிப்பு இனி இனிக்கும். ஆசிரியர் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார். மதிப்பெண் கூடும். புகழ் பெற்ற நிறுவனத்தில் சேர்ந்து உயர்கல்வியைத் தொடர்வீர்கள்.

அரசியல்வாதிகளே! கோஷ்டிப் பூசலில் சிக்கி காணாமல் போனீர்களே, இனி தலைமைக்கு நெருக்கமாவீர்கள். பெரிய பதவியில் அமர்வீர்கள். கலைஞர்களே! பரிசும் பாராட்டும் உங்களை உற்சாகப்படுத்தும். விவசாயிகளே! விளைச்சல் பெருகும்.

இந்தக் குரு மாற்றம் பணம், பதவியைத்தருவதுடன் சமூகத்தில் புது அந்தஸ்தை ஏற்படுத்தும். வாழ்க்கையில் புது அத்தியாயத்தை ஆரம்பித்து வைக்கும்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொட்டும் மழையில் கால் கடுக்க காத்திருந்த பயணிகளின் அவலம்

## வவுனியா, கொழும்பு செல்ல வந்தவர்கள் பெரும்பாடு



யாழ்ப்பாணம்.டிசெ.16

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியிடங்களுக்குச் செல்லும் பயணிகள் தரித்து நிற்கும் இடமான சிங்கள மகா வித்தியாலயச் சுற்றாடல் பகுதி, தற்போது பெய்துவரும் மழை காரணமாகச் சேறும் சகதியுமாக மாறியுள்ளது.

இதனால் பயணிகள் பெரும் சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர். இதனைவிடப் பயணிகள் தங்கி நிற்பதற்கு போதிய கொட்டகை வசதிகள் அமைத்துக் கொடுக்காததனால் அவர்கள் கொட்டும் மழையில் நனைந்தபடியே பஸ்ஸுக்காகக் காத்திருக்க வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

ஏ- 9 வீதி திறக்கப்பட்டு நீண்ட நாள்களாகியும் பஸ்களில் பயணிக்கும் மக்களுக் குரிய அடிப்படை வசதிகள் எதுவும் ஏற்ப படுத்திக் கொடுக்கப்படவில்லை என்றும் இதனால் பெரும் அசௌகரியங்கள் மத்தியிலேயே பயணத்தைத் தொடரவேண்டியிருப்பதாகவும் பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(04-224-15)

# அரச சொத்துகள், ஊட[illegible] தவறான முறையில் பயன்படுத்[illegible]கின்றன!

## எதிர்க்கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ.16

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்காக அரச ஊடகங்கள் மற்றும் அரச சொத்துக்களைத் தவறான முறையில் பயன்படுத்தும் நடவடிக்கையில் அரசு ஈடுபட்டுள்ளது - என்று ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டுகின்றது.

பொது மக்களின் பணத்தில் விருந்துகளை நடத்துதல் மற்றும் எதிர்க்கட்சியினரின் தேர்தல் அலுவலகங்களையும் பதாதைகளையும் தாக்குதல் போன்றவற்றின் மூலம் அரசு தேர்தல் சட்டங்களை மீறி வருகிறது என ஐக்கிய தேசியக் கட்சி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு -

எதிரணி வேட்பாளர்களின் பதாதைகள் உள்ளிட்ட பிரசார உபகரணங்கள் தாக்கப்படும் போது அவற்றிற்கு எதிராகச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு பொலிஸாருக்கு சந்தர்ப்பம் வழங்கப்படுவதில்லை. அனைத்துச் சட்டவிரோதப் பதாதைகளும், கட் அவுட்களும் அகற்றப்பட வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளமை நகைப்பிற்கு இடமானவை. இவ்வாறான அறிக்கைகள் மூலம் அரசு அரசியல் இலாபத்தைப் பெற முயற்சிக்கிறது - என்றுள்ளது.

# யாழ்.மாவட்ட பதிவாளர் திணைக்களத்தின்பதிவுகளை கணனிமயமாக்க 300மில்லியன் ரூபா தேவை

## நிதியுதவி கிடைத்தால் துரித சேவை வழங்க முடியும்

யாழ்ப்பாணம்.டிசெ.16

யாழ்.மாவட்டத்தில் உள்ள மக்களின் இறப்பு, பிறப்பு மற்றும் காணிப்பதிவுகளை கணனி மயப்படுத்த 300 மில்லியன் ரூபா நிதி தேவைப்படுகிறது. இந்த நிதி கிடைக்குமானால் துரித சேவையினை வழங்க முடியும் என்று யாழ். மாவட்டப் பதிவாளர் திணைக்களத்தின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தவை வருமாறு-

யாழ்.மாவட்டத்தில் உள்ள மக்களின் பிறப்பு, இறப்பு பதிவுகள் யாவும்தற்போது சாதாரண பதிவேடுகளிலேயே பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகின்கின்றன.

இதனால் இறப்பு, பிறப்பு பிரதிகளைப் பெறவருகின்ற மக்களுக்கு விரைவாகவும், நிறைவனாதுமான சேவையினை வழங்க முடியாமல் உள்ளது.

இத்தகைய பதிவுகள் யாவும் கணனி மயப்படுத்தப்படுமானால் பொதுமக்களுக்கு விரைவாக சேவையினை வழங்க முடியும். அத்துடன் தாம் விண்ணப்பிக்கும் ஆவணங்களுக்குரிய கணனிப் பிரதியினையும் பெற்றுக் கொள்ள ஏதுவாக இருக்கும்.

எனவே இத்தகைய பதிவுகள் கணனி மயப்படுத்தப்பட்டு மக்களுக்கு நிறைவான சேவையாற்றுவதற்கு 300மில்லியன் ரூபா நிதி தேவைப்படுகிறது -என்றார்

(04-9)

# இந்து ஆலயங்களில் கொள்ளையைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை

கொழும்பு,டிசெ.16

இந்து ஆலயங்களில் இடம்பெறும் கொள்ளைச் சம்பவங்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு சப்ரகமுவ மாகாண முன்னாள் உபதலைவரும் இரத்தினபுரி சிவன் ஆலய அறங்காவலர் சபைத் தலைவருமான கணபதி இராமச்சந்திரன் ஜனாதி பதிக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

பிரதான சமய வழிபாட்டுத் தலங்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

காலி சிவன் ஆலயத்திலிருந்து 17 விக்கிரகங்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. அதேபோன்று இரத்தினபுரி சிவன் ஆலயம் , இரத்தினபுரி காளி கோயில் உட்பட இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள பல இந்து ஆலயங்கள் கடந்த காலங்களில் உடைக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டன.

இது குறித்து ஜனாதிபதி மற்றும் அமைச்சர்களுக்கு கடிதம் மூலம் அறிவித்தும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

இந்து மக்களின் முக்கிய வழிபாட்டுத் தலங்களைக் கொள்ளையடிக்கும் விஷமிகளை இனங்கண்டு அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறான சம்பவங்களைத் தடுப்பதற்கு உரிய பாதுகாப்பு வழங்குவதே பொருத்தமானதாக இருக்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(50)

# தற்காலிக குடிசைகளை குடியமர்ந்த மக்களுக்கு வழங்க நடவடிக்கை

கோப்பாய், டிசெ.16

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் இயங்கிவந்த கோப்பாய் இடைத்தங்கல் முகாம் மூடப்பட்டதைத் தொடர்ந்து அங்கு அமைக்கப்பட்டிருந்த 37 தற்காலிக குடிசைகள் அகற்றப்பட்டு வன்னியில் இருந்து வந்து வளலாய் பகுதியில் மீளக் குடியமர்ந்த மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(50-72)

# திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம்,டிசெ.16

சதாவதானி கதிரவேற்பிள்ளை அறநெறிப் பாடசாலையின் ஆதரவில் திருவாசக முற்றோதல் இன்று புதன்கிழமை ஆரம்பமாகி இம்மாதம் முழுவதும் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

திருவாசக முற்றோதலின் ஆரம்ப நிகழ்வுகள் மாதங்கெனி சிவன் ஆலயத்தில் நடைபெறும்.

இரண்டாம் நாள் நிகழ்வு தம்பசிட்டி புதுச்சந்நிதி கந்தன் ஆலயத்திலும் மூன்றாம் நாள் நிகழ்வுகள் அத்தியடி முதலியம்மன் ஆலயத்திலும் நடைபெறவுள்ளன.

(50-201)

# பாடசாலைகளுக்கான சர்வதேச, பிராந்திய, தேசிய நிகழ்வுகளில் இலங்கைத் தமிழ் மாணவர் கலந்து கொள்ளாமை வேதனைக்குரியது

## யாழ்.வந்த மலேசியப் பெண் சாரணிய ஆணையாளர் கவலை தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.16



பாடசாலை மாணவர்களுக்கென நடத்தப்படும்சர்வதேச,பிராந்திய மற்றும் தேசியநிகழ்வுகளில் இலங்கையிலிருந்துதமிழ் மாணவர்கள் பங்குபற்ற முடியாமலிருப்பதனையிட்டு நான் மிகுந்த மனவேதனை அடைகிறேன் என மலேசியப் பெண்கள் சாரணிய அமைப்பின் சர்வதேச ஆணையாளர் ஜெயதேவி சுப்பிரமணியம் தெரிவித்தார்.

யாழ்.சுண்டிக்குளி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நேற்று இடம்பெற்ற பெண் சாரணியர்களுக்கான விசேட வழிகாட்டல் கருத்தமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சர்வதேச ஆணையாளர் மேலும் குறிப்பிட்ட விடயங்கள் வருமாறு:-

சர்வதேச, பிராந்திய நிகழ்வுகளில் இலங்கை பெண் சாரணியத் தமிழ் மாணவர்களும் கலந்து கொள்வதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்வது குறித்து உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடவிருக்கிறேன்.

முதற்கட்டமாக யாழ். மாவட்டத்திலுள்ள பெண் சாரணியர்களை மலேசியாவுக்கு அழைத்து ஏனைய நாட்டுப் பெண் சாரணியர்களும் கலந்து கொள்ளும் பயிற்சிகள் மற்றும் செயலமர்வுகளில் பங்கேற்க நடவடிக்கை எடுத்துள்ளேன்.

மலேசியாவில்தங்குவதற்குரிய அனைத்துச் செலவுகளையும் எமது அமைப்பு பொறுப்பேற்றுக் கொள்ள விருக்கிறது. இவ்விடயம் குறித்து யாழ்.மாவட்டப் பெண் சாரணிய அமைப்பின் ஆணையாளருடனும் கலந்துரையாடவிருக்கிறேன்.

பாடசாலை மட்டத்தில் இடம்பெறும் நிகழ்வுகளில் மட்டும் பெண் சாரணியர்கள் கலந்து கொள்வது போதுமானதாக இருக்காது.

வெளியே சென்று மக்களுக்கு சேவையாற்றும் நடவடிக்கையிலும் அவசியம் ஈடுபட்டிருக்க வேண்டும். அதன் மூலமே பெண்சாரணிய அமைப்பின் இலக்கினை எட்டமுடியும்.

அதுமட்டுமன்றி எமது நாட்டிலுள்ள நடைமுறையான. மாணவர் ஒருவர் பல்கலைக்கழக அனுமதி பெறுவதற்குப் பாடசலை கல்வியை மட்டும் கருத்தில் எடுக்காது ஏனைய செயற்பாடுகளான- சாரணியம், கழகங்கள், விளையாட்டு ஆகியவற்றில் ஏதாவது ஒன்றில் பங்குபற்றியிருக்க வேண்டும் என்னும் நடைமுறை இலங்கையிலும் கொண்டு வரப்பட வேண்டும்.

இதன் மூலமே மாணவர்கள் பூரணத்துவமுடையவராக ஆளுமை நிறைந்தவராக முடியும். அத்துடன் அவர்களுக்கு ஆங்கில அறிவும் அவசியமாக இருக்கிறது.

இலங்கையில் பெண் சாரணியத்தின் செயற்பாடுகள் சிறப்பாக உள்ளபோதும் யாழ்.மாவட்டப் பெண் சாரணியத்தின் செயற்பாட்டில் அவ்வாறான நிலைமை இல்லாதிருப்பதனை அவதானிக்க முடிகிறது- என்றார்.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட பெண் சாரணிய அமைப்பின் மாவட்ட இணைப்பாளர் திருமதி நீ.தர்மகுலசிங்கம், கல்லூரி அதிபர் திருமதி டி.துஷிதரன், கல்லூரியின் பெண் சார்ணியப் பொறுப்பாசிரியர் திருமதி ஜெ.அரவிந்தன் மற்றும் கல்லூரி ஆசிரியர்களும் கலந்துகொண்டனர். (50-14-16)



தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்.மாவட்ட அலுவலகம் நடத்திய இளைஞர் விருது வழங்கும் விழா அண்மையில் திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

மதகுருமார்கள் மற்றும் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதை முதல் படத்திலும் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் உரையாற்றுவதை இரண்டாவது படத்திலும், இளைஞர்களுக்கான விருதை மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், இலங்கை வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் சீவரத்தினம் ஆகியோர் வழங்கிக் கௌரவிப்பதை அடுத்துள்ள இரு படங்களிலும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களை இறுதிப் படத்திலும் காணலாம்.

(படங்கள்: சுகந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்
# 2010 ஆம் ஆண்டுக்கான மீள் கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள் என்பவற்றை 2010.01.01 தொடக்கம் 2010.12.31 ஆம் திகதிவரை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

**அட்டவணை**

| இல | சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள் விவரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்பு | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வற்வரி தவிர) | மாத வாடகை (வற்வரி தவிர) |
|---|---|---|---|---|---|
| | **சுன்னாகம் உப அலுவலகம்** | | | | |
| 01 | சுன்னாகம் மத்திய சந்தை (துவிச்சக்கர வண்டித் தரிப்பிடம் உட்பட) | 1,500.00 | 20,000.00 | 6,666,666.00 | ..... |
| 02 | சுன்னாகம் மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 10,000.00 | 500,000.00 | 250.00 |
| 03 | கருவாட்டுக்கடை இல.4 | 500.00 | 5,000.00 | 35,000.00 | 250.00 |
| 04 | கருவாட்டுக்கடை இல.5 | 500.00 | 5,000.00 | 35,000.00 | 250.00 |
| 05 | கோழிக்கடை இல. 6 | 500.00 | 5,000.00 | 60,000.00 | 250.00 |
| | கோழிக்கடை இல. 7 | 500.00 | 5,000.00 | 60,000.00 | 250.00 |
| | **உடுவில் உப அலுவலகம்** | | | | |
| 01 | இணுவில் பொதுச் சந்தை | 500.00 | 5000.00 | 25,000.00 | ...... |
| 02 | மல்வம் மாட்டிறைச்சிக்கடை (கொத்தியாலடி கொல்களத்தில் மாடுகள் வெட்டப்பட வேண்டும்) | 1000.00 | 10,000.00 | 90,000.00 | ...... |
| 03 | இணுவில் சந்தை ஆட்டிறைச்சிக்கடை (கொத்தியாலடி கொல்களத்தில் ஆடுகள் வெட்டப்பட வேண்டும்) | 750.00 | 10,000.00 | 60,000.00 | 250.00 |
| | **ஏழாலை உப அலுவலகம்** | | | | |
| 01 | ஏழாலை மயிலங்காடு மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 10,000.00 | 50,000.00 | ...... |
| 02 | ஏழாலை பொதுச் சந்தை | 500.00 | 5,000.00 | 15,000.00 | ...... |

01. கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் : 2009.12.21 பி.ப .2.00 மணிவரை

02. கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளுதல் : 2009.12.22 நண்பகல் 12.00 மணிவரை

03. கேள்விப் பத்திரம் திறக்கப்படுதல் : 2009.12.22 பி.ப. 2.00 மணிக்கு

04. கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை 19.11.2009 ஆம் திகதிய உதயன், தினக்குரல் பத்திரிகைகளிலும், எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.
14.12.2009

**திருமதி சு.முருகநேசன்**
செயலாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

(சி/563283)

# விலைக் கேள்விகளுக்கான கோருதல்
# கட்டடங்கள் திணைக்களம், வடமாகாணம், யாழ்ப்பாணம்

1. திட்டத்தலைவர், சர்வதேச அபிவிருத்திக்கும், நிவாரணத்திற்குமான ஒன்றியம் ஜப்பான் சார்பில் தவிசாளர், மாவட்ட பெறுகை குழு அவர்கள் கீழே அட்டவணைப்படுத்தப் பட்ட வேலைக்காக தகவுடைய மற்றும் தகைமை பெற்ற கேள்விதாரர்களிடமிருந்து மூடிக் குறியீடு செய்யப் பட்ட கேள்விகளைக் கோருகிறார்.

2. கேள்வியானது தேசிய போட்டிக் கேள்வி நடைமுறைப்படி நடத்தப்படும்.

3. ஒப்பந்த வழங்கலிற்கு தகுதி பெறுவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலிடப் படாதவராகவும், நிர்மாண, பயிற்சி மற்றும் அபிவிருத்திக்கான நிறுவனத்தில் கட்டட நிர்மாணத்துறையில் கீழே அட்டவணைப்படுத்தப்பட்ட வேலைக்கான குறித்த பதிவை அல்லது அதற்கு மேற்பட்ட பதிவை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

4. ஒப்பந்த வழங்கலிற்கான தகைமையைப் பெறுவதற்குத் தேவையான தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 4 இலும் மேலதிக தகவல்கள் விலைக் கேள்வித்தரவிலும் (பகுதி 5) கொடுக்கப்பட்டுள்ளன.

5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை *பிரதம பொறியியலாளர், பிரதம பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம் (வமா), கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம்* (தொ.பேசி, தொ.நகல் இல: 021•222-2632) இலிருந்து பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் விலைக்கேள்வி ஆவணங்களை மேற் கூறிய முகவரியில் காலை 9 மணியிலிருந்து பி.ப. 4 மணிவரை பார்வையிடலாம்.

6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து மீளளிக்கப்படாத வைப்புப்பணம் ரூபா 1,000.00 ஐ *பிரதம பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம் (வமா), கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணத்தில்* பணமாகச் செலுத்துவதன் மூலம் 16.12.2009 ஆம் திகதியிலிருந்து 05.01.2010 ஆம் திகதி வரை காலை 9 மணியிலிருந்து பி.ப.3.30 மணிவரை ஆங்கில மொழியிலான பூரண தொகுதி கேள்வி ஆவணம் ஒன்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

7. கேள்விகள் இரண்டு பிரதிகளில் மாவட்ட செயலக பிரதம கணக்காளர் அறையில் உள்ள கேள்விப் பெட்டியில் 08.01.2010 ஆம் திகதியன்று பி.ப. 3 மணி அல்லது அதற்கு முன்னராக பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கையளிக்கப்படல் வேண்டும். காலந்தாழ்த்தி சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் நிராகரிக்கப்படும். பெறப்பட்ட கேள்விகள் உடனடியாகவே வருகைதர விரும்பும் விலைக்கேள்வியாளர்களின் பிரதி நிதிகளது சமுகத்தில் திறக்கப்படும்.

8. கேள்வி ஆவணத்துடன் அட்டவணையில் கொடுக்கப்பட்ட தகவலிற்கமைய கேள்விப் பிணைப்பத்திரம் இணைக்கப்பட வேண்டும்.

| ஒப்பந்த இல. | வேலை விவரம் | மதிப்பிடப்பட்ட செலவு (மில்லியன்) | ஒப்பந்த காலம் | தேவையான ICTAD தரம் (கட்டடங்கள்) | விலைக்கேள்வி பிணைப் பொறுப்பு | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைத் தொகை | செல்லுபடியாகும் காலம் |
| JF/BD/GA/HS/30/2009 | பூரணப்படுத்தல் சிறுவர் விடுதி, ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி | 15.29 | 6 மாதங்கள் | M5/C6 | 153,000.00 | 24.04.2010 |

பிரதம பொறியியலாளர் அலுவலகம்,
கட்டடங்கள் திணைக்களம், வட மாகாணம்,
கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.,
தொ.பேசி இல. 021-222-2632

க.கணேஷ்
தவிசாளர், மாவட்ட பெறுகைக்குழு,
அரசாங்க அதிபர்,
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.

(சி/563230)


வாருங்கள்
எங்கள் தனித்துவ சேவையை அனுபவியுங்கள்

யாழ் நகர் ஸ்டான்லி வீதியில் இயங்கிவரும் யூனியன் வங்கியில் வசதியான வங்கி சேவையை பெற்றுக் கொள்ளவும்.

- பாதுகாப்பு பெட்டகம்
- அடகு சேவை
- அதி உயர் வட்டியை தரும் உச்ச சேமிப்பு கணக்கு
- சனிக்கிழமை வங்கிச் சேவை
- கிழமை நாட்களில் மாலை 4 மணிவரை வங்கிச் சேவைகள்

தொ.பே.இல. 021-2224567 - 9

யூனியன் வங்கி
62/17, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.


## வாசகர் திருமுகம்

### எங்களையும் கவனிப்பீர்களா?

மானிப்பாய், சென்.ஆன்ஸ் வீதி பல வருடங்களாக அதாவது 20 வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாது குண்டும் குழியுமாக எல்லோராலும் கைவிடப்பட்ட நிலையில் காணப் படுகிறது. இந்த ஒழுங்கையானது ஜே/130 சுதுமலை தெற்கு கிராம சேவகர் பிரிவினுள் அமைந்துள்ளது. இந்த ஒழுங்கையில் சுமார் 25 குடும்பங்கள் வசிக்கின்றன. மேற்படி ஒழுங்கையில் சென்.ஆன்ஸ் முன்பள்ளியும் திருக்குடும்பக் கன்னியர் மடமும் அமைந்துள்ளன. இந்த வீதியின் மண் அரிக்கப்பட்டு கல் மட்டுமே காணப்படுகின்றது. சிறார்கள், மாணவர்கள் இந்த ஒழுங்கையினால் நடந்து செல்லும்போது விபத்துக்களை அடிக்கடி எதிர்கொள்கின்றனர். துவிச்சக்கர வண்டிகளில் செல்வோர் இறங்கி நடந்து செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் காணப்படுகின்றனர்.

இவ்வீதியில் வசிப்போர் ஏற்கனவே பத்திரிகையின் மூலம் தெரியப்படுத்தி உள்ளனர். ஆனால் இதனை யாரும் ஏற்றுக்கொண்டதாக இல்லை. எல்லோரும் பாராமுகமாகவே இருக்கின்றனர். இந்த ஒழுங்கை வாழ் மக்களின் போக்குவரத்தை இலகுவாக்க சம் பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் எடுப்பார்களா? இந்த ஒழுங்கையில் ஏனைய வீதிகள் போல் பயணிக்கும் காலம் எப்போது வரும்?..................

மானிப்பாய். சுபா.

### ஆசிரியர் இடமாற்றம் வெல்லப்படுவதாக!

யாழ்.மாவட்டத்தில் ஆசிரியர் இடமாற்றம் உரிய முறையில் மேற்கொள்ளப்படும் என்று மாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்த செய்தியை 24.11.2009 உதயனில் வாசித்து இதயம் கனிந்தேன். இடமாற்றம் கிடைத்தமாதிரி மிகவும் சந்தோஷப்பட்டேன். முப்பத்தேழு வருட ஆசிரிய சேவையைப் பூர்த்தி செய்துள்ளேன். தற்போது கடமையாற்றும் பாடசாலையில் இருபது வருடங்கள் கடந்து என்பணி செய்து இட மாற்றத்திற்காக ஆவலுறுகின்றேன். காலம், மாற்றத்தினை வேண்டி நிற்கிறது. ஆசிரியர்கள், அதிபர்கள் பிறந்து கொண்டிருக்கிறார்கள். விடாப்பிடியாக ஒரே பாடசாலையில் , மற்றவர்கள் விரும்புவதாக ''என்னை நான் முன்னிலைப்படுத்துவது'', தர்ம மல்ல என்பதனை எனக்குக் கற்பித்த பேராசான், அறமாகப் போதித்த காரணத்தினால், 2010 ஆம் ஆண்டில் இடமாற்றம் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடும், தகுதியோடும் புதியதோர் உலகினைக் காண்பதற்காக எல்லாம் வல்ல இறைவனை வணங் குகின்றேன். வெல்லப்படுவேனா?

கொக்குவில். இடமாற்றம் விரும்பும் ஓர் ஆசிரியன்.

### வங்கிகளின் பொறுப்பதிகாரிகள் கவனிப்பார்களா?

நான் அரச சேவையில் இருந்து ஓய்வுபெற்று தற்போது யாழ்.மக்கள் வங்கியின் கிளையில் ஓய்வூதியம் பெற்று வருகிறேன். எனக்கு மனைவி, பிள்ளைகள் இருக் கின்றார்கள். எனது ஓய்வூதியப் பணத்தைப் பெற்று எனது குடும்ப சீவியம் நடத்துவதற்குக் கஸ்டமாக இருக்கிறது. எனக்கு வயது 67 ஆகிறது. முன்பு எல்லாம் வங்கியில் கடன்பெற்று ஏதாவது பிரத்தியேகமாகத் தொழில் செய்து குடும்ப சீவியத்தை ஓரளவுக்கு நடத்த முடிந்தது. ஆனால் தற்போது மிகவும் கஸ்டத்தில் வாழவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு வருகிறது. ஆனால் தற்போது வங்கிப் பொறுப்பாளரிடம் கடன் (LOAN) கேட்டால் வயது கூடிவிட்டது. 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கடன் (LOAN) தரமுடியாது எனக் கூறுகின்றார்கள். ஆனால் இதுவரை காலமும் கடன் பெற் றுக்கொள்வதற்கு அரசாங்கத்தில் கடமையாற்றும் இருவர் பிணையுடன் கையொப்பம் வைத்தால் கடன் பணம் வழங்கப்பட்டு வந்தன. ஆனால் நான் சிலவேளை காலமானால் பிணையாகக் கையொப்பமிட்ட இருவரினதும் சம்பளப்பணத்தில் எனது கடன் பணம் கழிக்கலாம். அத்துடன் மனைவி உயிரோடு வாழ்வதால் கடன் வழங்கும்போது மனைவியின் கையொப்பம் பெற்று மனைவியின் விதவைகள் ஓய்வூதியப் பணத்தில் கடன் பணம் கழிக்கலாம். ஆகவே தயவு செய்து வங்கி பொறுப் பாளர்கள் கவனத்தில் எடுத்து நல்லதொரு தீர்வு கிடைக்க வழி செய்வார்களா?

[illegible]வில். இ.தர்மலிங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா 'திரில்' வெற்றி!

இலங்கைக்கு எதிரான முதலாவது ஒரு நாள் போட்டியில் இந்திய அணி 3 ஓட்டங்களால் 'திரில்' வெற்றிபெற்றுள்ளது.



இந்தியா-இலங்கை அணிகளுக்கிடையிலான 5 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடர் தற்போது நடந்து வருகிறது.

இதில் முதலாவது போட்டி நேற்று பகல் ஆட்டமாக நடந்தது.

நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி,

இந்திய அணியை முதலில் துடுப்பெடுத்தாடும்படி பணித்தது.

அதன்படி இந்திய அணியின் ஆரம்ப வீரர்களான ஷேவாக்கும், சச்சின் டெண்டுல்கரும் களமிறங்கினர்.

களமிறங்கிய இருவரும் இலங்கை அணியின் பந்துவீச்சுக்களை வாங்கு வாங்கென்று வாங்கினர்.

இவர்கள் இணைப்பாட்டமாக 153 ஓட்டங்களைக் குவித்திருந்தனர். சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த சச்சின் டெண்டுல்கர் அரைச்சதம் கடந்து 69 ஓட்டங்களைத் தொட்டபோது பெர்னாண்டோவின் பந்து வீச்சில் 'போல்ட்' ஆனார். இவர் 10 பவுண்டரிகளையும் ஒரு சிக்ஸரையும் விளாசியிருந்தார்.

அடுத்து -

அணித்தலைவர் டோனி களமிறங்கினார். மறுபுறத்தில் பந்துகளை விரட்டிக்கொண்டிருந்த ஷேவாக் 66 பந்துகளை எதிர்கொண்டு தனது சதத்தைப் பூர்த்திசெய்தார். இது இவரது மூன்றாவது அதிவேக சதமாகும். இதற்கு முன்பு 60 பந்துகளிலும், 69 பந்துகளிலும் சதம் அடித்துள்ளார். இதில் 12 பவுண்டரிகளையும் 5 மிகப் பெரிய சிக்ஸர்களையும் அடித்துள்ளார்.

இவருக்குப் போட்டியாக மறுமுனையில் நின்ற டோனியும் அதிரடியைக் காட்டினார்.

இவர்களின் ஆட்டத்தைப் பார்த்தபோது ஷேவாக் இரட்டைச் சதம் அடித்துவிடுவாரோ என்றும் - இந்திய அணி 450இற்கு மேல் ஓட்டங்களைக் குவித்து புதிய சாதனையைப் படைக்கும் என்பது போல் ஆட்டம் அமைந்திருந்தது.

ஆனால், சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த இந்த ஜோடியை வெலகெதர பிரித்தார். 146 ஓட்டங்களைப் பெற்றவேளை ஷேவாக் ஆட்டமிழந்தார். இவரது இந்த ஓட்ட எண்ணிக்கையில் 17 பவுண்டரிகளும் 6 சிக்ஸர்களும் அடங்கும். இவர் ஆட்டமிழந்தபோது இந்திய அணி 35.3 ஓவர்களில் 309 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

அடுத்து ரெய்னா களமிறங்கினார். சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த டோனி 53 பந்துகளில் 72 ஓட்டங்களைப் பெற்றவேளை ஆட்டமிழந்தார். இவரது ஓட்ட எண்ணிக்கையில் 7 பவுண்டரிகள் 3 சிக்ஸர்கள் அடங்கும்.

பின்னர் வந்த வீரர்களில் ரெய்னா 16 ஓட்டங்களையும் கம்பீர், ஹர்பஜன் சிங் ஆகியோர் தலா 11 ஓட்டங்களையும், கோஹ்லி 27 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர்.

ஜடேஜா 30 ஓட்டங்களுடனும் குமார் 5 ஓட்டங்களுடனும் இறுதி வரை ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர்.

இலங்கை அணி சார்பாக பந்துவீச்சில் குலசேகர, வெலகெதர, பெர்னாண்டோ ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளையும் மத்யூஸ் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து 415 ஓட்டங்கள் என்ற மிகப் பெரிய வெற்றியிலக்கை நோக்கி தனது ஆட்டத்தைத் தொடர்ந்தது இலங்கைஅணி.

ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கிய தரங்கவும், டில்ஷானும் இந்தியர்களுக்கு நாம் சளைத்தவர்கள் அல்லர் என்பது போல பதிலடி கொடுக்கும் விதமாக ஆடினர்.

இந்த ஜோடி முதல் விக்கெட்டுக்காக 24 ஓவர்களில் 188 ஓட்டங்களைக் குவித்தது.

சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த தரங்க 67 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். இவர் 60 பந்துகளை எதிர்கொண்டு 3 பவுண்டரிகள் 4 சிக்ஸர்கள் அடங்கலாக இந்த ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றுக் கொடுத்தார்.

அடுத்து அணித்தலைவர் குமார் சங்கக்கார, டில்ஷானுடன் இணைந்தார். இவர்களின் ஆட்டம் இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான போட்டி என்பதை விட டில்ஷானுக்கும் சங்கக்காரவுக்கும் இடையிலான போட்டி என்பது போல இருவரும் அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்த வண்ணம் இருந்தனர்.

அதிரடியாக ஆடிக்கொண்டிந்த குமார் சங்கக்கார 43 பந்துகளில் 10 பவுண்டரிகள், 5 சிக்ஸர்கள் அடங்கலாக 90 ஓட் டங்களைப் பெற்றுக்கொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த ஜெயசூர்ய (5) வந்த வேகத்திலேயே 'பெவிலியன்' திரும்பினார். அவரைத் தொடர்ந்து மஹேல ஜெயவர்த்தன உள்ளே வர, எதிர்பாராத விதமாக டில்ஷான் 160 ஓட்டங்களைப் (124 பந்துகள்) பெற்றவேளை ஹர்பஜன் சிங்கின் பந்துவீச்சில் 'போல்ட்' ஆனார். இவரது ஆட்டமிழப்பைத் தொடர்ந்து இலங்கை அணியின் வெற்றியும் கேள்விக்குறியானது. இவரது ஓட்டக் குவிப்பில் 20 பவுண்டரிகளும் 3 சிக்ஸர்களும் அடங்கும்.

மறுமுனையில் நின்ற மஹேல ஜெயவர்த்தன 3 ஓடட்டங்களைப் பெற்றவேளை 'ரன் -அவுட்' ஆனார்.

பின் னர் வந்த கண்டம்பி (24) அணி 401 ஓட்டங்களைப் பெற்றவேளை 'ரன்-அவுட்' ஆனார். அவரைத் தொடர்ந்து சமரவீர ஓட்டம் எதையும் பெறாமல் ஆட்டமிழந்தார்.

ஒருபுறம் விக்கெட்டுகள் சரிந்தாலும் மறுபறுத்தில் மத்யூஸ் நிதானமாக ஆடிக்கொண்டிருந்தார். இவருடன் குலசேகர இணைந்தார்.ஆட்டம் உச்சக்கட்டத்தை அடைந்தது. 6 பந்துகளில் 11 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலை காணப்பட்டது. பின்னர் அணி, 49.4 ஓவர்களில் 409 ஓட்டங் களைப் பெற்றவேளை மத்யூஸ் (38) ஆட்டமிழந்தார்.

களத்தில் குலசேகரவுடன் வெலகெத இருந்தார். கடைசி இரு பந்துகளில் 6 ஓட்டங்கள் பெறவேண்டும். அதில் முதல் பந்தில் ஓர் ஓட்டம் பெறப்பட்டது. கடைசிப் பந்திலும் ஓர் ஓட்டம் அடிக்கப் பட - வெற்றி இந்தியாவின் பக்கம் வீழ்ந்தது.

இறுதியில் இலங்கை அணி 411 ஓட்டங்களைப் பெற்றது. இதன்மூலம் இந்திய அணி 3 ஓட்டங்களால் திரில் வெற்றி பெற்றது.

ஆட்ட நாயகனாக ஷேவாக் தெரிவு செய்யப்பட்டார்.

இந்தப் போட்டியில் வெற்றிபெற்றதன் மூலம் 5 போட்டிகளைக் கொண்ட தொடரில், இந்திய அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

# பாகிஸ்தான் - நியூஸிலாந்து டெஸ்ட் சமநிலையில் முடிந்தது

நியூஸிலாந்து-பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டி சமனிலையில் முடிவடைந்துள்ளது. இதன் காரணமாக 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் 1-1 என சமனிலையானது.

நியூஸிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர், நியூஸிலாந்து நடந்துவந்தது.

இதன் முதல் போட்டியில் நியூஸிலாந்து வென்றது. இரண்டாவது போட்டியில் பாகிஸ்தான் அணி வென்றது.

இந்நிலையில் மூன்றாவது போட்டி நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, முதல் இன்னிங்ஸிற்காக சகல விக்கெட்டுகளையும் இழந்து 223 ஓட்டங்களைப் பெற்றது.

தொடர்ந்து ஆடிய நியூஸிலாந்து அணி தனது முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 471 ஓட்டங்களைப் பெற்றது.

தொடர்ந்து தனது இரண்டாவது இன்னிங்ஸை 248 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் பாகிஸ்தான் அணி ஆடியது. நேற்றுமுன்தினம் நான்காம் நாள் ஆட்ட நேரமுடிவின்போது 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 347 ஓட்டங்களைக் குவித்திருந்தது.

உமர் அக்மல் 48 ஓட்டங்களுடனும் மிஸ்பா உல் ஹக் 4 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர்.

பின்னர் நேற்று தனது இன்னிங்ஸைத் தொடர்ந்த பாகிஸ்தான் அணி,

தனது இரண்டாவது இன்னிங்ஸிற்காக 445 ஓட்டங்களைப் பெற்றவேளை சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

பின்னர் தொடர்ந்து 208 ஓட்டங்கள் எடுத்தல் வெற்றி என்ற இலக்குடன் நியூஸிலாந்து அணி தனது இரண்டாவது இன்னிங்ஸை விளையாடியது.

பின்னர் நேற்றை கடைசி நாள் ஆட்ட நேர முடிவின்போது விக்கெட் இழப்பின்றி 90 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இதனால், இந்தப் போட்டி சமனிலையில் முடிவுற்றது.

இந்தப் போட்டி சமனிலையில் முடிவடைந்தமையால் 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரும் சமனிலையில் முடிவடைந்தது.

ஆட்டநாயகனாக விற்றோரி தெரிவு செய்யப்பட்டார். தொடரின் நாயகனாக வாற்லிங் தெரிவுசெய்யப்பட்டார்.

# ஷேவாக்குக்கு கங்குலி பாராட்டு

கல்கத்தா, டிசெ. 16

இந்திய அணியின் ஆரம்ப வீரரான ஷேவாக் சிறப்பான வீரர்.'' - இவ்வாறு இந்திய அணியின் முன்னாள் தலைவர் செளரவ் கங்குலி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கங்குலி மேலும் கூறியவை வருமாறு:-

ஷேவாக்குடன் இணைந்து நான் விளையாடியிருக்கிறேன். அவர் மிகச் சிறப்பான வீரர். அவரை மேற்கிந்தியத் தீவுகளின் ரிச்சர்ட்சுடன் ஒப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

''இவர் ரிச்சர்ட்சைப் போன்று அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார். எனினும், அவரை விட சற்றுப் பின் தங்கியியே இருக்கிறார். விரைவில் ரிச்சர்ட்சை முந்திவிடுவார். அதற்கு இன்னும் சிறிது காலம் தேவைப்படும்.'' - என்றார்.

# இரண்டாவது ஒருநாள் போட்டி இடமாற்றம்

புதுடில்லி, டிச.16

இந்தியா-இலங்கை அணிகளுக்கிடையிலான 2ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி, மராட்டிய மாநிலத்தின் நாக்பூரில் பகல்-இரவு ஆட்டமாக நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா-இலங்கை அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டி விசாகப்பட்டினத்தில் நாளை மறுதினம் 18ஆம் திகதி நடைபெறும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், இந்தியாவில் ஏற்பட்டிருக்கும் தனி தெலுங்கானா பிரச்சினை காரணமாக ஆந்திர மாநிலத்தில் பல்வேறு இடங்களில் கலவரம் நிலவுகிறது. தொடர்ந்து அங்கு பதற்றமான சூழ்நிலை காணப்படுவதால் விசாகப்பட்டினத்தில் நடைபெறவுள்ள போட்டிக்கான நுழைவுச்சீட்டு விற்பனையும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

அதேவேளை, விசாகப்பட்டினம் கிரிக்கெட் போட்டிக்கு தங்களால் போதிய பாதுகாப்பு வழங்க முடியாது என்று அந்த மாவட்ட பொலிஸ் அதிகாரிகளும் கைவிரித்துவிட்ட நிலையில்,அங்கு நடக்கவிருந்த 2ஆவது ஒருநாள் போட்டியை அதே திகதியில் மராட்டிய மாநிலத்தின் நாக்பூரில் பகல் -இரவு ஆட்டமாக நடைபெறும் என்று இந்திய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

## ஆசிய தடகளப் போட்டி: இந்தியா 3ஆவது இடம்!

ஆசிய தடகள சம்பியன்ஷிப் தொடரில் 12 பதக்கங்களை வென்ற இந்திய அணி, 3ஆவது இடத்தைப் பிடித்தது.

சீனாவின் குவாங்ஸூவில் ஆசிய தடகள சம்பியன்ஷிப் தொடர் நடந்தது.

ஐந்து நாட்கள் நடந்த இந்தப் போட்டித் தொடரின் முடிவில், ஒரு தங்கம், 4 வெள்ளிகள் மற்றும் 7 வெண்கலங்கள் உட்பட 12 பதக்கங்களை வென்ற இந்திய அணி மூன்றாவது இடத்தைப் பிடித்தது.

47 (18 தங்கங்கள், 19 வெள்ளிகள், 10 வெண்கலங்கள்) பதக்கங்களுடன் சீனா முதல் இடத்தையும், 22 (12 தங்கங்கள், 5 வெள்ளிகள், 5 வெண்கலங்கள்) பதக்கங்களுடன் ஜப்பான் இரண்டாவது இடத்தையும் பெற்றன.


**S.T.R. TRAVELS**



★ பாடசாலைச் சுற்றுலாக்கள்
★ திருமண வைபவங்கள்
★ விசேட வைபவங்கள்

மேலும் உங்களது தேவைகளுக்கும் 30, 54 ஆசனங்கள் கொண்ட அரைச்சொகுசு பேருந்துகள் பயண சேவைகளுக்கு எம்மிடம் உள்ளன. உங்கள் தேவைகளுக்கு உடன் எம்மிடம் தொடர்புகொள்வதற்கு

S.T.R. Multy Center
அராலி கிழக்கு,
வட்டுக்கோட்டை
0213212601, 0777570150.

S.T.R. Multy Center
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
0214590223, 0779257488

**தவறிவிட்டது**

அ.அரிதரன் என்பவருடைய TVS NPHC 3289 எனும் இலக்கத்தையுடைய மோட்டார் சைக்கிள் 14.12.2009 திங்கட்கிழமை திருநெல்வேலி சந்தைச் சூழலில் காணாமற் போய்விட்டது. கண்டவர்கள் தொடர்புக்கு- 0779865452

**தவறிவிட்டது**

இலகடி, கோப்பாய் வடக்கு கோப்பாயைச் சேர்ந்த கதிர்காமநாதன் தனுஜன் என்பவரது அடையாளஅட்டை (881233266V) மற்றும் மோட்டார் சைக்கிள் ஆவணங்கள், வாகன அனுமதிப்பத்திரம் என்பன கோப்பாய்க்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புக்கு 0775029277

**வீட்டுப் பணிப்பெண் தேவை**

இரவு பகல் வீட்டில் தங்கியிருந்து பணிபுரியும் 35வயதிற்கு மேற்பட்ட பணிப்பெண் தேவை.

குறிப்பு:- தனியாள் வரவேற்கத்தக்கது (பொறுப்புகளற்ற)

தொடர்பு- 0774371539 (91486)

**நல்லூர் பிரதேச செயலக ஆயுர்வேத பாதுகாப்புச் சபையின் கருத்தரங்கு-03**

காலம் :- 18.12.2009 (வெள்ளிக்கிழமை)
நேரம் :- பி.ப. 2.30 மணி
இடம் :- நல்லூர் பிரதேச செயலக சமுர்த்தி மண்டபம்
விடயம் :- ஆரம்பகால புற்றுநோய் தடுப்பில் மருத்துவ மூலிகைகளின் எதிர் ஒட்சியேற்றல் ஒரு பார்வை

கருத்துரை வழங்குபவர்
Dr.க.ஸ்ரீதரன் B.Sms (S.L) M.phil(JF)

ஆர்வமுள்ள சகலரும் பங்குபற்றலாம்.

தலைவர், ஆயுர்வேத பாதுகாப்புச் சபை.

(91479)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கிய நகரங்களில் தாக்குதல் நடத்த தற்கொலைத் தீவிரவாதிகள் ஊடுருவல்!

## இந்திய மத்திய அரசு எச்சரிக்கை

புதுடில்லி, டிசெ.16

டில்லி, மும்பை, கொல்கத்தா நகரங்களில் தற்கொலைப்படைத் தீவிரவாதிகள் புகுந்துள்ளனர் எனவும், முக்கிய இடங்களில் தாக்குதல் நடத்த அவர்கள் சதித்திட்டம் தீட்டியுள்ளனர் எனவும் மத்திய அரசு பரபரப்பான தகவலை வெளியிட்டுள்ளது.

இதனால் முக்கிய நகரங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டு உள்ளன.

இந்த நிலையில், தலிபான் இயக்கத்தினரால் பயிற்சி அளிக்கப்பட்ட தற்கொலைப் படைத் தீவிரவாதிகள் குஜராத் மாநிலத்திலும் மற்றும் மும்பை, டில்லி, கொல்கத்தா நகரங்களிலும் ஊடுருவியுள்ளனர் என மத்திய புலனாய்வுத்துறை எச்சரிக்கை விடுத்திருக்கிறது என மத்திய உள்துறை அமைச்சகத்தின் உயர் அதிகாரி ஒருவர் நேற்றுமுன்தினம் புது டில்லியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு -

டில்லியில் அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் உலகக்கோப்பை ஹொக்கிப் போட்டி நடைபெறவுள்ளது. அந்த இடமும், குஜராத்தில் மக்கள் அதிகம் கூடும் இடங்களும் தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு இலக்காகலாம் என்றும் புலனாய்வுத்துறை எச்சரித்து இருக்கிறது.

இதனால் உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து விமான நிலையங்கள், பஸ் நிலையங்கள், ரயில் நிலையங்கள், நட்சத்திர ஹோட்டல்கள் ஆகிய இடங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகளை பலப்படுத்துமாறு மராட்டியம், மேற்கு வங்கம், டில்லி, குஜராத் மாநில அரசுகளை உள்துறை அமைச்சகம் உஷார்படுத்தி இருக்கிறது. இதைத் தொடர்ந்து டில்லி, மும்பை, கொல்கத்தா நகரங்களில் உள்ள விமானநிலையங்களில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டு இருக்கிறது - என்றார்.

இந்தியாவின் முக்கிய நகரங்களான டில்லி, மும்பை, கொல்கத்தா ஆகியவற்றில் பெரும் நாச வேலைகளில் ஈடுபடுவதற்காக ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த தற்கொலைப் படைத் தீவிரவாதிகள் ஊடுருவியுள்ளனர் என உளவுப் பிரிவு எச்சரித்துள்ளது. இதையடுத்து இந்த நகங்களில் பாதுகாப்பு பல மடங்கு அ[illegible]கரிக்கப்பட்டுள்ளது.

இதற்[illegible]டையே, உள்துறை ராஜாங்க அமைச்சர் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கையில்-

இந்தியாவில் உள்ள அணுமின் நிலையங்கள் தீவிரவாதிகளின் தாக்குதல் இலக்காக இருந்து வருகின்றன. இதனால் அவற்றுக்கு மத்திய படையினரின் பாதுகாப்பு போடப்பட்டு இருக்கிறது எனவும் தெரிவித்தார்.

சில முக்கிய அணுமின் நிலையங்களுக்கு மத்திய தொழில் பாதுகாப்பு படையுடன், வான்வெளி பாதுகாப்புக்காக இராணுவ பாதுகாப்பு போடப்பட்டிருக்கிறது எனவும் அப்போது அவர் கூறினார்.

# மஹிந்தவின் திருப்பதி வருகையால்தான் ஆந்திரா முழுவதும் இன்று பற்றி எரிகிறது!

## வைணவத் துறவி ஒருவர் கருத்து

ஹைதராபாத், டிச. 16

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இரண்டு முறை திருப்பதி வந்தார். முதல் முறை ஆந்திர முதல்வர் பலியானார். இரண்டாவது முறை வந்து திருப்பதி ஏழுமலையானை வணங்கி விட்டுப் போனார். இன்று ஆந்திர மாநிலம் முழுவதும் பற்றி எரிகிறது.

இன்னும் என்னென்ன நடக்குமோ என்று பெயர் குறிப்பிட விரும்பாத வைணவத் துறவி ஒருவர் கூறியுள்ளார் என தமிழக இணையங்களில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து அந்த இணையங்களில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

மஹிந்த ராஜபக்ஷ இரண்டு முறை இந்தியாவில் உள்ள திருப்பதி கோவிலில் வந்து சுவாமி தரிசனம் செய்து திரும்பினார். முதல் முறை இறுதி யுத்தக் கட்ட காலங்களில் வந்தார். இப்போது ஹெலிகொப்டர் விபத்தில் ஆந்திர முதலமைச்சர் பலியானார்.

இரண்டாவது முறை வந்து திருப்பதி ஏழு மலையானை வணங்கி விட்டுச் சென்றார். இதன் விளைவாக இன்று ஆந்திர மாநிலம் முழுவதும் பற்றி எரிகிறது.

ஆந்திர வரலாற்றில் இதுபோன்று ஒரு பெரிய போராட்டம் நடந்தது கிடையாது.

தமிழர்களின் எல்லை தெய்வம் ஏழு மலையான். அவரால் மஹிந்த ராஜபக்ஷவின் கொடுமைகளை பொறுத்துக் கொள்ள முடியவில்லை. மஹிந்த ராஜபக்ஷ, தனது சன்னிதானத்திற்கு வந்து சுவாமி கும்பிட்டதை பொறுத்துக் கொள்ளமுடியவில்லை.

மஹிந்த ராஜபக்ஷவை திருப்பதி வர அனுமதி வழங்கிய ஆந்திர அரசுக்கு தகுந்த தண்டனையை திருப்பதியின் ஏழுமலையான் வழங்கியிருக்கிறார். இன்னும் என்னென்ன நடக்குமோ. மஹிந்தவின் வருகையால் இந்தியாவிற்கு பெரும் அழிவு நடக்கப் போகிறது.

எனவே, திருப்பதி ஏழுமலையான் கோவிலில் பிரம்மஹத்தி தோஷம் பீடித்த மஹிந்த ராஜபக்ஷ நுழைந்ததால் ஏற்பட்ட தீட்டைக் கழிக்க தக்க பரிகார பூஜைகள் யாகங்கள் நடத்தப்பட வேண்டும். இல்லை என்றால் ஆந்திர தேசத்திற்கும் இந்தியாவிற்கும் மிகப்பெரிய அவலமும் அழிவும் ஏற்படும் - என்று அந்தத் துறவி எச்சரித்துள்ளார்.

# ஆந்திராவின் அரசியல் குழப்பங்களுக்கு மத்திய அரசே பொறுப்பேற்க வேண்டும்!

## சந்திரபாபு நாயுடு விசனம்

ஐதராபாத், டிசெ. 16

தெலுங்கானா பிரச்சினைக்கு மத்திய அரசே பொறுப்பேற்க வேண்டும் - என்று



தெலுங்கு தேசம் கட்சித் தலைவர் சந்திரபாபு நாயுடு கூறியுள்ளார்.

ஐதராபாத்தில் நேற்றுமுன்தினம் பேட்டியளித்த சந்திரபாபு நாயுடு இது குறித்து மேலும் கூறியவை வருமாறு -

ஆந்திராவைப் பிரித்து தெலங்கானா மாநிலம் அமைப்பதை தெலுங்கு தேசம் கட்சி ஆரம்பம் முதலே எதிர்த்து வந்துள்ளது. எங்கள் ஆட்சியில் இந்தக் கோரிக்கை ஏற்கப்படவில்லை. இப்போது, தெலுங்கானா விவகாரத்தால் ஆந்திராவில் பதற்றமும் அரசியல் ஸ்திரமற்ற சூழ்நிலையும் நிலவுகிறது.

இதற்கு மத்திய அரசுதான் பொறுப்பு. தெலுங்கானா மாநிலம் அமைக்கப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரமும் வீரப்ப மொய்லியும் வெளியிட்ட அவசர அறிவிப்பால் ஆந்திர மக்களின் உணர்வுகளைத் தூண்டிவிட்டனர். இப்போது, நிலைமை கட்டுமீறிப் போய்விட்டது. பதற்றத்தை தணித்து நிலைமையைச் சுமுகமாக்க வேண்டிய பொறுப்பும் மத்திய அரசுக்குத்தான் உள்ளது.

மிகவும் முக்கியமான இந்தப் பிரச்சினையில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் உள்ள கட்சிகளைக் கூட காங்கிரஸ் கலந்தாலோசிக்கவில்லை. மத்திய அரசு அவசர முடிவு எடுத்து விட்டது என தமிழக முதல்வர் கருணாநிதி கூறியிருப்பதே இதற்கு உதாரணம் - என்றுள்ளது.

# ஈழத்தமிழர் அதிரடித் தயாரிப்பில் 'நிலா', 'விடியல்' திரைப்படங்கள்!

ஈழத் தமிழர்களால் தமிழ்நாட்டு மண்ணில் தயாரிக்கப்பட்ட விடியல் மற்றும் கனேடிய மண்ணில் தயாரிக்கப்பட்ட நிலா ஆகிய திரைப்படங்கள் டிசெம்பர் 19 மற்றும் 20ஆம் திகதிகளில் திரையிடப்படவிருகின்றன.

அனைத்து கனேடியத் தமிழ் மக்களும் இந்த திரைப்படங்களை பார்த்து ஈழக் கலைஞர்களுக்கு ஆதரவு கொடுக்க வேண்டுமென கனேடியத் தமிழ் திரைப்படக் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

விடியல் திரைப்படம் முழுக்க முழுக்க தமிழ்நாட்டு மண்ணில் கனேடிய ஈழத்துக் கலைஞர்களால் தயாரிக்கப்பட்டது. இந்தத் திரைப்படத்தில் மனோ, சுதா, கவிதா மற்றும் இயக்குநர் தரன் மற்றும் தமிழ்நாட்டுக் கலைஞர்களும் நடித்துள்ளனர்.

திரைப்படத்தின் பாடல்களை தமிழ்நாட்டு பாடலாசிரியர் காதல்மதி, இயக்குநர் தரன் ஆகியோர் எழுதியுள்ளனர்.

நிலா திரைப்படம் முழுக்க முழுக்க கனேடிய மண்ணிலேயே தயாரிக்கப்பட்டது. நிலா திரைப்படத்தில் சுதன், நவநிதா, ருபா, வினோத், விஜய், மாலன், சூரி, ராஜா, சங்கர், ஜிவன், உதயன், ராணி இவர்களுடன் இயக்குநர் தரன் மற்றும் பலர் நடித்துள்ளனர்.

இத்திரைப்படத்துக்கு இசையமைப்பை அண்மையில் தமிழினப் படுகொலையைப் பற்றி 'இதுவே.. இதுவே.. நிலையா....' என்ற பாடலை வெளியிட்ட கனேடிய இசையமைப்பாளர் சிறீஜிவன் பாடல்கள் எழுதி இசையமைத்துள்ளார்.

படத்தொகுப்பை தமிழ்நாட்டில் உள்ள தொழில் நுட்பக் கலைஞர் பன்னீர் செல்வம் மற்றும் படத்துக்கு பின்னணிக் குரலை தமிழ்நாட்டுக் கலைஞர்கள் சினி[illegible] [illegible]ள்ளனர்.


**Wanted** *Immediately*

1. Medical Representatives
2. Sales Representatives

*Harcourts Pvt Ltd*

A Colombo Based Pharmaceutical Company representing well reputed Principals is looking for young, energetic, honest, hard working individuals for above vacancies for Northern region.

*Requirements:*

- ★ G.C.E. A/L with Science Background
- ★ Age 22-28 Years
- ★ Experience preferably 2-3 Years
- ★ Applicants should be from North

*Attractive Salary, performance based Commission/ Incentives, Travelling Allowance etc.*
*Apply with contact Tel.Number, within 2 weeks with 2 non related referees.*

*Harcourts Pvt Ltd*
C/O **Jegan Pharmacy**
462-B, Hospital Road, Jaffna.



**KALAIMAGAL INTERNATIONAL COLLEGE**

எமது கல்லூரி ஆங்கில மொழிமூல ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியை கொக்குவிலில் வெற்றிகரமாக ஆரம்பித்து தனது கல்விச்செயற்பாட்டில் முதல்படியை யாழ்.மாவட்டத்தில் பதித்துள்ளது. கண்டி மாவட்டத்தில் வெற்றிகரமாகச் செயற்பட்டு வரும் எமது கல்லூரி 15 வருட கால அனுபவமுதிர்ச்சியையும் ஆயிரக்கணக்கான மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு வழிகாட்டியாகவும் திகழ்கின்றது. ஆசிரியர் பயிற்சிக்கல்லூரியை முதலில் நிறுவியதன் தூரநோக்கு எமது கல்லூரியின் ஆங்கில மொழிமூல ஆசிரியர் பற்றாக்குறை என்றுமே நிலவக்கூடாது என்ற நோக்கில் சிறந்த கல்வித்தகைமை உள்ளவர்களை தெரிவு செய்து சிறப்பான ஆசிரியர் பயிற்சி நெறியை வழங்கி எமது கல்லூரியில் ஆசிரியர்களாக வருங்காலத்தில் பயன்படுத்தும் நோக்குடன் இச் செயற்பாட்டை முதலில் அமுல்படுத்தியுள்ளோம்.

எமது அடுத்தகட்ட நடவடிக்கையாக யாழ்.மாவட்டத்தில் எமது கலைமகள் சர்வதேச கல்லூரியை ஜனவரி முதல் இயக்கத்திட்டமிட்டுள்ளோம். இக்கல்லூரியில் முதற்கட்டமாக PREE, K.G, L.K.G, U.K.G, GR=>01, G.R=>02, G.R=>03, G.R=>04, G.R=>05 ஆகிய வகுப்புகளை ஆரம்பிக்கவுள்ளோம். எம்முடன் இணையும் மாணவர்களுக்கு ஆங்கிலமொழிமூலம் கல்விச் செயற்பாடுகள் நடைபெறும். இச்செயற்றிட்டத்தின் படி வருடம் ஒரு வகுப்பாக அதிகரித்துG.C.E (O/L), G.C.E (A/L) வரை எமது கல்விச்செயற்பாடு முன்னெடுக்கப்படும்.

எமது பாடத்திட்டம்

Pree KG முதல் G.R -05 வரை Oxford பாடத்திட்டம் மூலமும் G.R-06 முதல் A/L வரை இலங்கைப்பாடத்திட்டத்தை உள்வாங்கும் வகையில் எமது கல்விக்கொள்கை காணப்படுகின்றது.

அத்துடன்

- ✱ பிரத்தியேக சீருடை
- ✱ சர்வதேச தரத்துடன் கூடிய வகுப்பறை
- ✱ அனுபவ முதிர்ச்சி பெற்ற ஆசிரியர் குழாம்.
- ✱ சீரான கண்டிப்புடன் கூடிய வழிகாட்டல்.
- ✱ அரச பாடசாலைகளின் கலண்டர் நாள்களை பின்பற்றிய வேலைநாள்கள்.
- ✱ அரச பாடசாலைகளின் வேலைநேரத்தை பின்பற்றிய நேரசூசி அமைப்பு.
- ✱ தேசிய கல்வி நிறுவனமான N.I.E இலும் இலங்கை பரீட்சைத்திணைக்களத்துடனும் முறையாக பதிவுசெய்யப்பட்ட உறவு நிறுவனம்.
- ✱ பூரண அரச அங்கீகாரம் பெற்ற முழுநேரப்பாடசாலை
- ✱ மிக மிக குறைந்த கட்டண வசதி
- ✱ சிறுவர்களுக்கான விளையாட்டுப் பூங்கா
- ✱ பிரத்தியேக பாதுகாப்பு உத்தியோகத்தர்.
- ✱ வேலை நாள்களில் வேலை நேரமான காலை 8 மணி முதல் 2 மணி வரை எந்த நேரத்திலும் நீங்கள் தொடர்பு கொள்ளக்கூடிய பெற்றார் தொடர்பாளர் வசதி.

மேற்கூறப்பட்ட பல்வேறு சேவைகளுடனும் ஆரம்பிக்கும் எம்து கல்லூரியின் கட்டண விவரம் வருமாறு

| GRADE | ADDMISSION FEE | MONTHLY FEE | LIMITE OF AGE |
|---|---|---|---|
| PREE K.G | 10,000 | 750 | 2½ - 3 |
| L.K.G | 10,000 | 750 | 3 - 3½ |
| U.K.G | 15,000 | 1,000 | 5 + |
| GR - 01 | 15,000 | 1,250 | 6 + |
| GR - 02 | 20,000 | 1,500 | 7 + |
| GR - 03 | 20,000 | 1,500 | 8 + |
| GR - 04 | 25,000 | 1,500 | 9 + |
| GR - 05 | 25,000 | 1,500 | 10 + |

மேற்குறிப்பிட்ட வகையில் எமது கட்டண அமைப்பு காணப்படுவதோடு அனுமதிக் கட்டணமானது மாணவர் எமது கல்லூரியில் உள்வாங்கப்படும் போது ஒரே முறை மட்டுமே செலுத்தப்படும் கட்டணமாகும். அவர் எந்த வகுப்பில் இணைக்கப்படுகின்றாரோ அதற்கேற்ற வகையில் அனுமதிக்கட்டணம் மேற்குறிப்பிட்ட வகையில் மாறுபடும்.

ஜனவரி 15ஆம் திகதி முதல் எமது கல்லூரி கீழ்வரும் பகுதிகளில் செயற்படவுள்ளது.

KALAIMAGAL INTERNATIONAL COLLEGE,
NO:56-A, NUNAVIL EAST,
CHAVAKACHCHERI

KALAIMAGAL INTERNATIONAL COLLEGE,
NO:82/12, CHETTY STREET,
NALLUR.

KALAIMAGAL INTERNATIONAL COLLEGE,
CHURCH LANE, KOKUVIL

உங்கள் சிறார்களின் சிறப்பான எதிர்காலத்திற்கு எமது கல்லூரியில் இணையவிரும்பின் எமது கல்லூரிக்கு நேரில் சென்று மேலதிக விவரங்களைப் பெற்று விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பிக்கவும். எமது நிறுவனம் திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8 மணி முதல் 2 மணி வரை திறந்திருக்கும். விண்ணப்பப் படிவங்களை ஜனவரி முதலாம் திகதிக்கு முன் சமர்ப்பிக்கவும்.

மேலதிக விவரங்களுக்கு
*0212222773, 0778834592, 0779389006* (91452)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கீரிமலை - சேந்தாங்குளம் வீதி பொதுமக்கள் போக்குவரத்துக்கு நேற்று திறக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். அரச அதிபர் கே.கணேஷ், 515 ஆவது படையணித் தளபதி பிராங்கிளின் றொட்றிக்கோ, கீரிமலை நகுலேஸ்வர ஆலய ஆதீன கர்த்தா கு. நகுலேஸ்வரக்குருக்கள் ஆகியோர் கூட்டாக நாடாவை வெட்டி பாதையை திறப்பதையும், நகுலேஸ்வரக்குருக்கள் அர்ச்சனைப் பொருள்களை பெறுவதையும் படை அதிகாரி ஒருவருக்கு திலகமிட்டு ஆசீர்வதிப்பதையும் மேல் வரிசையிலும் -

ஆல்யத்தில் பூசை நடைபெறுவதையும் நகுலேஸ்வரக் குருக்கள் உரையாற்றுவதையும் கீரிமலைப் புனித கேணியை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பார்வையிடுவதையும் கீழ் வரிசையிலும் காணலாம்.

(படங்கள்: லக்ஸ்மன்)

# கொழும்பு செல்லும் பயணிகள் காலை 6 மணிக்கு யாழ். பஸ் நிலையத்துக்குச் செல்ல வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் நேற்று நேரில் சென்று ஆராய்வு

யாழ்ப்பாணம்,டிசெ.16

கொழும்பு, வவுனியா மற்றும் பிற மாவட்டங்களுக்குச் செல்லும் பயணிகள் காலை 6 மணிக்கு குறித்தொதுக்கப்பட்ட தரிப்பிடங்களுக்கு வருகை தரவேண்டும் என்றும் போக்குவரத்து சபை பஸ்களில் கொழும்பு செல்வோர் காலை 6 மணிக்கு யாழ். பிரதான பஸ் தரிப்பு நிலையத்துக்கு வந்துசேர வேண்டும் என்றும் அறிவிக்கப் படுகிறது.

ஏ-9 பாதை ஊடாக பயணம் மேற் கொள்ளும் பயணிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று அதிகாலை ரயில் நிலையப் பகுதிக்கு நேரடியாகச் சென்று ஆராய்ந்தார்.

அதன்பின்னர் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருடனும் கலந்துரையாடி சில முக்கிய முடிவுகளை அமைச்சர் எடுத்துள்ளார் என சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

அந்த முடிவுகள் வருமாறு:-

* கிளிநொச்சி செல்லும் அரச ஊழியர்கள் காலை 6 மணிக்கு யாழ். சிங்கள மகா வித்தியாலய மைதானத்துக்கு வருகை தர வேண்டும். இவர்கள் பயணம் செய்யும் பஸ்கள் காலை 7 மணிக்கு அங்கிருந்து புறப்படும்.

* சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் பகுதிகளில் இருந்து கிளிநொச்சி செல்லும் அரச ஊழியர்களை அப்பகுதிகளில் வைத்து பஸ்களில் ஏற்றிச் செல்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டன.

* இலங்கை போக்குவரத்து சபைக்குரிய பஸ்களில் கொழும்பு செல்லும் பயணிகள் காலை 6 மணிக்கு யாழ். பிரதான பஸ்தரிப்பு நிலையத்துக்கு வருகை தரவேண்டும். பின்னர் 7 மணிக்கு இப்பயணிகள் சிங்களமகாவித்தியாலய மைதானத்துக்கு கூட்டிச்செல்லப்பட்டு சோதனைகள் முடிவுற்றதன் பின்னர் இவர்களை ஏற்றிச்செல்லும் பஸ்கள் காலை 8.30 இற்கும் 9 மணிக்கும் இடையில் கொழும்பு நோக்கிப் புறப்படும்.

* தனியார் பஸ்களில் கொழும்பு செல்லும் பயணிகளும் காலை 6 மணிக்கு சிங்கள ம்காவித்தியால மைதானத்துக்கு வருகைதர வேண்டும். இப் பயணிகளும் 8.30 இற்கும் 9 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் புறப்படும் முதலாவது வாகன அணியில் கொழும்பு நோக்கிப்புறப்பட இயலும்.

* வவுனியா செல்லும் பயணிகள் காலை 6 மணிக்கு யாழ். ரயில் நிலையக் கட்டடத்துக்கு வருகைதரவேண்டும். இப்பயணிகள் அங்கிருந்து நேரே வவுனியா செல்வதற்கான ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த ஏற் பாடு நிறைவுறும் வரையில் தற்பொழுது நடைமுறையில் இருக்கும் முறையே சில நாள்களுக்கு நீடிக்கும்.

* இரண்டாவது வாகன அணி காலை 10.30 மணிக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்படும். (ஒ-1)

# தும்பளையிலும் திருமலையிலும் மாதா திருவுருவப் படங்களில் அதிசயக் காட்சிகள்

## கைகள் நீண்டு வந்து ஆசீர்வாதம் வழங்கின




யாழ்ப்பாணம்,டிசெ.16

மாதாவின் திருவுருவப்படங்களிலிருந்து இரு கைகளும் வெளியே வந்து ஆசீர்வாதம் வழங்குவது போன்ற அருட்காட்சி நேற்று பருத்தித்துறை தும்பளையிலும் திருகோணமலையிலும் பலரையும் பரவசப்படுத்தியது.

பருத்தித்துறை தும்பளை லூர்த்து மாதா தேவாலயத்துக்கு சமீபமாக உள்ள ஒரு வீட்டில் வணக்கத் துக்காக சுவரில் அன்னை வேளாங்கன்னி திருவுருவப் படம் மாட்டப்பட்டிருந்தது. அந்தப் படத்தின் கீழ்ப்பகுதியில் கைகள் நீண்டு வந்து ஒரு கை அப்படத்தை தாங்குவது போன் றும் மற்றைய கை திருவுருவத்தின் கீழ்ப் பகுதியை தொட்டுக்கொண்டு இருப்பது போன்று காட்சியளிப்பதாக தெரிவிக்கப்பட்டது.

இந்தக் காட்சியை வீட்டிலிருந்த பிள்ளைகள் அவதானித்து விட்டு பெற்றோருக்கு தெரிவித்தனர் என கூறப்பட்டது.

இந்தச் செய்தியை கேள்வியுற்ற மத குருமார் மற்றும் பொதுமக்கள், படையினர் பெரும் எண்ணிக்கையில் திரண்டு வந்து இக்காட்சியை கண்டு தரிசித்தனர் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கின்றார்.

இதேவேளை, திருகோணமலை 10 ஆம் குறிச்சியில் உள்ள சைவசமயத்தைச் சேர்ந்த ஒருவரின் வீட்டிலும் நேற்று மாலை மடு மாதாவின் திருவுருவப் படத்தில் அற்புதம் நிகழ்ந்தது. அந்தப் படத்தில் இருந்து இரு கைகளும் வெளியே வந்து ஆசீர்வாதம் வழங்குவது போன்று அருட்காட்சியைக் கண்டு வீட்டார் பரவசமடைந்து வழிபட்டனர்.

இந்தத் தகவல் பல இடங்களுங்கும் பரவியதையடுத்து பெரும் எண்ணிக்கையானவர்கள் அங்கு கூடி அந்த அற்புதக் காட்சியை தரிசித்தனர். அந்தக் காட்சியை கைத்தொலைப்பேசிகளிலும் வீடியோக்களிலும் பலர் படம் எடுத்தனர். மதவேறுபாடின்றி பெரும் எண்ணிக்கையான மக்கள் அந்தக் காட்சியைப் பார்த்தனர் என்று எமது திருகோணமலைச் செய்தியாளர் அறிவித்தார். (ஒ-1-190-150)

# சிறுப்பிட்டியில் மினிபஸ் விபத்து; நடத்துநர் பலி; 4பேர் படுகாயம்!

யாழ்ப்பாணம், டிசெ.16

அச்சுவேலியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த தனியார் பஸ் புத்தூர் சிறுப்பிட்டிப் வைரவர் கோயிலடியில் தடம் புரண்டதில் பஸ் நடத்துநர் அந்த இடத்திலேயே மரணமானார்.4பேர் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.மேலும் சிலர் சிறு காயங்களுக்கு இலக்காகினர்.

இந்தவிபத்துச்சம்பவம் நேற்றுக்காலை 5.35 மணியளவில் நடைபெற்றது.

பஸ்நடத்துனரான பத்தமேனி, பாரதி வீதியைச் சேர்ந்த சரவணமுத்து ரவிச்சந்திரன் (28வயது) என்பவரே மரணமானவர் ஆவார். அவரது சடலம் யாழ்.ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டு பின்னர் நேற்று மாலை உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

அச்சுவேலி மேற்கைச் சேர்ந்த ச.சசிக்குமார் (30 வயது), புத்தூர் மேற்கைச் சேர்ந்த க.பாலசுப்பிரமணியம் (57 வயது), வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வந்த சு.மிராஜ் (20வயது), ஆவரங்காலைச் சேர்ந்த ஜோதிகா (21 வயது)ஆகியோரே இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் ஆவர்.

மழை பெய்து கொண்டிருந்த வேளையில் சாரதி வேகமாக மற்றைய பஸ்ஸை முந்த விடாமல் செலுத்தியதாலேயே இந்த விபத்து நேர்ந்ததாக பஸ்ஸில் பயணித்தவர்கள் விசனம் தெரிவித்தனர்.

(ஒ-10-15-224- 78-86)

# குடாநாட்டில் தொடரும் மழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

## தாழ்ந்த நிலப்பகுதிகளில் வெள்ளநீர் தேக்கம்

யாழ்ப்பாணம்,டிசெ,16

குடாநாட்டில் கடந்த இருதினங்களாகக் தொடரும் கனமழை காரணமாக தாழ்ந்த பிரதேசங்களில் வெள்ள நிலை ஏற்பட்டது.இதனால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்ட்து.

நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் நேற்று முழுநாளும் சிறிதுநேர இடைவெளிகளுடன் தொடர்ந்து பெய்த மழை காரணமாக வீதிகள் மற்றும் தாழ்ந்த பிரதேசங்களில் உள்ள குடியிருப்புக்களில் வெள்ளம் தேங்கும் நிலை ஏற்பட்டது.

யாழ்நகரை அண்டிய பண்ணை, கொட்டடி, நாவாந்துறை, போன்ற இடங்களில் தாழ்ந்த பகுதியில் குடியிருக்கும் மக்கள் வெள்ளநீர் சூழ்ந்ததால் பெரும் சிரமப் பட்டனர்.

தொடர்ந்து மழை பெய்யும் பட்சத்தில் இந்த மக்கள் இடம்பெயரவேண்டிய நிலை ஏற்படலாம் என்று தெரிவிக்கப்பட்டது.நெல்வயல்களிலும் வெள்ளம் நிரம்பி வழிந்தோடுவதைக் காணமுடிந்தது.

வயல்களில் நிரம்பிய வெள்ளநீரை வேறு இடங்களுக்கு வெட்டி வெளியேற்றும் முயற்சியில் விவசாயிகள் ஈடுபட்டனர். அதே சமயம், வீதிகளில் வெள்ளம் தேங்கி நிற் பதால் பொதுமக்கள் போக்குவரத்துச் செய்வதிலும் பெரும் அசௌரியங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

வெறும் காணிகள்,வீட்டு வளவுகள் என்பவற்றிலும் வெள்ளம் தேங்கி நிற்பதால் தொற்று நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.இதனிடையில் காலநிலை சீரின்மையால் நேற்றும் குடாநாட்டு மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்குச் செல்லவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-1-9-51-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவாஜிலிங்கத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குள் மாறுபட்ட கருத்துக்கள் தோன்றியுள்ள நிலையில் எம்.கே.சிவாஜிலிங்கம் (ரெலோ) சுயேச்சையாகப் போட்டியிட தீர்மானித்து நேற்று தேர்தல் செயலகத்தில் கட்டுப்பணம் செலுத்தியுள்ளார்.

அவர் எடுத்துள்ள இந்த முடிவானது அவரது தனிப்பட்ட முடிவேயன்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தொடர்புடையது அல்ல என அக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

## தாம் சரண்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டுகோள் விடுத்தனர். அந்தத் தகவலை உரிய ஐ.நா. அதிகாரிகளுக்கு வழங்கினோம்.

ஐக்கிய நாடுகள் சபை இதனைக் கண்காணிக்கவும் இணங்கியது. எனினும், அதற்கு உதவுவதற்கான கால அவகாசமோ அல்லது யுத்தம் இடம்பெற்ற பிரதேசத்திற்குச் செல்வதற்கான அனுமதியோ எமக்குக் கிடைக்கவில்லை.

இலங்கையைப் பொறுத்தவரை, தமிழ் மக்கள் சமூகத்தின் ஒரு பகுதி என்பதை ஏற்றுக்கொள்கின்ற நடைமுறைகளும் - உணர்வு வெளிப்பாடுகளும் ஏற்படுத்தப் படுவது அவசியமானது. இதனைச் செயல் வடிவில் கொண்டுவரவேண்டும்.

எதிர்வரும் தேர்தலில் தமிழர்கள் உட்பட ஏனைய சிறுபான்மை இனத்தவர்கள் முழுமையாகப் பங்கு கொள்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படுமெனக் கருதுகிறோம்.

இந்தத் தேர்தல் முடிவடைந்ததும் தேசிய நல்லிணக்க அரசியல் மற்றும் பொருளாதார முன்னேற்றம் என்பவை குறித்து ஆராய்வது முக்கியமானது - என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.(அ-சி)



BIT University of Colombo
Call 772395895
Bachelor of Information Technology (UCSC)
Want to Qualify in IT?
3 Pass A' Levels? → Register for BIT
No Pass A' Levels? → Foundation in Information Technology
MCS 324,Palaly Road,Parameswara Junction
Web site : Http://www.mcsitcampus.org


## அரச இல்லத்திலிருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாளை தாக்கல் செய்வதற்கு முன்னர், அந்த இல்லத்திலிருந்து வெளியேறிவிடுவார் எனக் கூறப்படுகின்றது.

புதிய வீடு பார்த்திருக்கும் அவர் பெரும்பாலும் இன்று அந்த வீட்டுக்குச் செல்வார் எனக் கூறப்பட்டது.

நேற்றுமுன்தினம் இரவு ஊடகவியலாளர்களை ஜெனரல் பொன்சேகா சந்தித்து உரையாடிய வேளை, அவரின் துணைவியார் தாங்கள் வீடுமாறும் தகவலை வெளியிட்டார் எனக் கூறப்படுகின்றது.

## புயல் அபாயம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முக்கம் தற்சமயம் செயல் இழந்துள்ளது.

அதன் காரணமாக புயல் அபாய நிலை நீங்கிவிட்டது. எனினும் காற்று மற்றும் இடிமுழுக்கத்துடன் கூடிய மழை தொடரும்.

வடக்கு,கிழக்கு,வயம்பா, வட மத்திய மாகாணகங்களில் இந்தக் கால நிலை தொடரும் சாத்தியம் காணப்படுகின்றது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. இதே வேளை - கடுமையான காற்று ஒரிடத்திலேயே சுழன்று வீசும்.பொதுமக்கள் மின்னலினால் ஏற்படும் பாதிப்புகளை குறைப்பதற்கான போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் பொது மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார். (அ-1)

## கூட்டமைப்பை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றொரு வேட்பாளருக்கு ஆதரவளிக்கலாம் என்பன போன்ற யோசனைகள் கூட்டமைப்பு எம்.பிக்களினால் முன்வைக்கப்பட்டிருந்தன.

வேட்பு மனுத்தாக்கல் செய்யும் தினமான 17 ஆம் திகதிக்கு முன் இது தொடர்பான முடிவு எடுப்பதற்கு கால அவகாசம் போதாமையால், அதற்குப் பின்னர் கூட்டமைப்பு அதன் தீர்மானத்தை வெளியிடும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், கூட்டமைப்பின் யோசனைகளை எல்லாம் தூக்கி எறிந்து விட்டு சுயேச்சை வேட்பாளராகக் களமிறங்கி இருக்கிறார் சிவாஜிலிங்கம்.

கடந்த பல மாதங்களாக வெளிநாடுகளில் தங்கியிருந்த சிவாஜிலிங்கம் சமீபத்தில் தான் நாடு திரும்பியிருந்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பொது வேட்பாளர் ஒருவரை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தாவிட்டால் தாம் சுயேச்சையாகப் போட்டியிடுவாரென அவர் சமீபத்தில் தெரிவித்திருந்தார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவு எடுக்காத நிலையில் சுயேச்சை வேட்பாளராக சிவாஜிலிங்கம் களமிறங்கி இருக்கின்றமை கூட்டமைப்பு வட்டாரங்களில் பெருத்த ஏமாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது.

(அ-சி)

## சனல் - 4...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை. மாறாகக் குறிப்பிட்ட வீடியோவில் காணப்படும் துல்லியமான விடயங்கள் தொழில்நுட்ப ரீதியாக உருவாக்க முடியாதவை என அவர் தெரிவித்துள்ளார் என்றும் 'த டைம்ஸ்' குறிப்பிட்டுள்ளது.

துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெறும் போது அதன் குழாயிலிருந்து (பரலிலிருந்து) வாயு வெளிப்படுகின்றது. இவ்வாறான துல்லிய விடயங்களை செயற்கையாக உருவாக்க முடியாது. இது உண்மையாகப் பதிவு செய்யப்பட்ட ஒன்று எனப் பிரெட்ரிக்ஸ் தெரிவித்துள்ளார்.

மேலும் இது போலியான நாடகம் என்பதை நிராகரிப்பதற்கான வலுவான ஆதாரங்கள் உள்ளன. துப்பாக்கியின் பரல் வீடியோவில் காணப்படுபவர்களின் தலைக்கு மிக அருகில் உள்ளது. இதன் காரணமாக பரலிலிருந்து வரும் வாயுவே மரணத்தையும், காயத்தையும் உருவாக்கக்கூடியது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் சுட்டுக்கொல்லப்படுபவர்களைப் பார்க்கும்போது அது உண்மையான வீடியோ எனக் கருத முடிகின்றது. அவர்கள் முன்நோக்கி விழவில்லை. பின்நோக்கி விழுகின்றனர். இது மிகவும் நிஜமான செயற்பாடு. படங்களில் காட்டப்படுவது போலப் போலியானதல்ல என்றும் பிரெட்ரிக்ஸ் தெரிவித்துள்ளார்.

மேலும் இரண்டாவது நபரின் தலையில் தென்படும் காயமும் அதிலிருந்து வழியும் இரத்தமும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி உருவாக்க முடியாதவை.

குறிப்பிட்ட வீடியோ, தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்டது என்ற முடிவிற்கு வருவதற்கான சிறிய தவறு கூட அதில் தென்படவில்லை என்றும் பிரெட்ரிக்ஸ் தெரிவித்தார்.

கையடக்க (மொபைல்) தொலைபேசியைப் பயன்படுத்திக் குறிப்பிட்ட வீடியோ பதிவு செய்யப்பட்டது என்பதை உறுதி செய்ய முடிகின்றது என்றும் பிரெட்ரிக்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

'சனல் - 4' வீடியோ வெளியிட்ட காட்சிகள் உண்மையானவை என்பதற்கான உறுதியான ஆதாரங்கள் கிடைத்துள்ளமையைத் தொடர்ந்து மீண்டும் சுயாதீன யுத்தக்குற்ற விசாரணைக்கான வேண்டுகோள்கள் எழலாம் என 'த டைம்ஸ்' தெரிவித்துள்ளது.

பிரெட்ரிக்ஸின் அறிக்கையின் நகலைத் தனக்கு அனுப்பிவைக்குமாறு இலங்கை இராணுவப் பேச்சாளர் கோரியுள்ளார் என்றும் 'த டைம்ஸ்' தெரிவித்துள்ளது.

(அ-சி)

## மஹஜன சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

தேசிய லொத்தர் சபையின் மஹஜன சம்பத 2189 ஆம் இலக்கச் சீட்டிழுப்பின் அதிர்ஷ்ட எண் வடிவமைப்பு பின்வருமாறு H415462 எனத் தேர்ந்து எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டு H415462 (இடமிருந்து வலம்)

அதன் பிரகாரம் சுப்பர் பரிசான ஒரு கோடி ரூபாய் வெல்லப்படவில்லை.

415462 என்ற இலக்க வரிசைக்கான முதலாவது பரிசான இருபது லட்சம் ரூபா இருவருக்கு கிடைத்துள்ளது.

15462 என்ற இலக்க வரிசைக்கான இரண்டாவது பரிசான ஒரு லட்சம் ரூபா 13 பேருக்கு கிடைத்துள்ளது.

5462 என்ற இலக்க வரிசைக்கான மூன்றாவது பரிசான பத்தாயிரம் ரூபா 141 பேரால் வெல்லப்பட்டுள்ளது.

462 என்ற இலக்க வரிசைக்கான நாலாவது பரிசான ஆயிரம் ரூபா ஆயிரத்து நானூற்று இருபத்திநான்கு பேருக்கு கிடைத்துள்ளது.

62 என்ற இலக்க வரிசைக்குரிய ஐந்தாவது பரிசான நூறு ரூபா 14,240 பேரால் வெல்லப்பட்டுள்ளது.

2 என்ற இலக்க வரிசைக்குரிய ஆறாவது பரிசாக ரூபா இருபது 141186 பேருக்கு கிடைத்துள்ளது. வடிமைப்பிற்கு வலமிருந்து இடப்பக்கமாக வரிசைப்படுத்தப்பட்ட 41546 வடிமைப்பிற்கு ஏழாவது பரிசாக பத்தாயிரம் ரூபா 16 பேருக்குக் கிடைத்துள்ளது. வலமிருந்து இடமாக 4154 வடிவமைப்புக்கு எட்டாவது பரிசாக ஆயிரம் ரூபா 136 பேருக்கு கிடைத்துள்ளது.

அதே வடிமைப்பில் 415 இலக்கத்திற்கு ஒன்பதாவது பரிசாக நூறு ரூபா 1431 பேருக்கு வழங்கப்படவுள்ளது. மேலும் 41 என்ற வடிமைப்பிற்கு பத்தாவது பரிசாக ஐம்பது ரூபா 14,148 பேருக்குக் கிடைத்துள்ளது.

'H என்ற இலக்கத்திற்கு பதினோராவது பரிசாக இருபது ரூபா 56,414பேருக்கு கிடைத்துள்ளது.

## தேர்தல் களத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலதிக தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

இதன் பிரகாரம் நாளை 17 ஆம் திகதி காலை 9 மணிக்கும் மு.ப. 11 மணிக்கும் இடைப்பட்ட இரண்டு மணித்தியாலங்கள் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்வதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் கூறினார். (அ-சி)


New MediCare Hospital
தென்மராட்சி மக்களுக்கு ஓர் வரப்பிரசாதம்
நீங்கள் யாழ் நகர்ந்து செல்லாமல்
உங்கள் மருத்துவ ஆலோசனைகளையும், சிகிச்சைகளையும்
நீங்கள் விரும்பிய வைத்திய நிபுணர்களிடம்
சாவகச்சேரியில் பெற்றுக் கொள்ள செல்ல வேண்டிய இடம்
குளிரூட்டப்பட்ட நவீன வசதிகளைக் கொண்ட
நியூ மெடி கெயர் மருத்துவமனை
New Medi Care Hospital
இல 23, கச்சாய் வீதி, சாவகச்சேரி, தொ.பே. 021 3734505
NEW MEDI CARE HOSPITAL
எம்மிடம்.....
வெளிநோயாளர் பிரிவு
உள்நோயாளர் பிரிவு
முன்பதிவுகள் மூலம் வைத்திய நிபுணர்களின் ஆலோசனைகளையும், சிகிச்சைகளையும்
பிரதி வெள்ளிக்கிழமைகளில் பி.ப. 4.30 மணிக்கு சத்திரசிகிச்சைநிபுணர்
DR. S. ரவிராஜ் (VS) அவர்களிடமும்,
பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் மு.ப 9.00 மணிக்கு மகப்பேற்று பெண்நோயியல் நிபுணர்
DR. K. சுரேஸ்குமார் (VOG) அவர்களிடமும்,
பிரதி திங்கட்கிழமைகளில் பி.ப 4.30 மணிக்கு மகப்பேற்று பெண்நோயியல் நிபுணர்
DR. A. சிறிதரன் (VOG) அவர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.
அதிநவீன கணனி மயப்படுத்தப்பட்ட ஆய்வுகூட வசதிகள்.
நவீன கருவிகள் மூலம் ஸ்கானிங், ECG வசதிகள்
சகல விதமான பற்சிகிச்சைகளும், பல் பிடுங்குதல், கட்டுதல், அடைத்தல், கிளிப் போடுதல்.
திங்கட்கிழமை 12.00 - 2.00 மணிவரை
வெள்ளிக்கிழமை 1.00 - 2.00 மணி வரை நடைபெறும்.
இலவச வைத்திய ஆலோசனைகளுடன், நவீன முறையில் இரத்த, சல பரிசோதனைகளுடன் கூடிய அடிப்படை உடற் பரிசோதனைகளையும் (Basic Full Body Check up) மேற்கொள்ளலாம்.
(ECG, FBS, Lipid Profile, Kidney Funtion Test, FBC, ESR, UFR, Group+Rh)
(விசேட சலுகைக்கட்டணம் - 1100/ தை 1ம் திகதி வரை)
நியூ மெடி கெயர் மருத்துவமனை



கருத்தரங்கு
GIT
A/L-2010,கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவு மாணவர்களுக்கானது
இடம் :- The Science Corner Clock Tower Lane
நேரம் :- வியா, வெள், சனி, (4.00 - 5.30 pm)
by - K. Selvan B.sc (Hons)



THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE, JAFFNA
BIOLOGY 2010 A/L
பிரயோக உயிரியல்
ஆரம்பம் - 17.12.2009
வியாழன் - 1.00 - 2.30 pm
BY. சு. பொன்திவாகரன்



தரம் - 4, 5
புலமைப்பரிசில் பரீட்சைக்கான வகுப்பு
சாதனை ஆசிரியர் - K.தவயோகராசா
முன்னணி ஆசிரியர் - K.கைலநாதன்
அக்கடமி ஆசிரியர் - S.வினோத்
அக்கடமி ஆசிரியர் - K.கபிலன்
அக்கடமி ஆசிரியர் - M.பத்மராஜ்
அக்கடமி ஆசிரியர் - S.சாந்தினி
வெற்றித் தேர்வு பரீட்சையோடு
நல்லூர் சயன்ஸ் அக்கடமியில்
தொடர் சாதனை படைத்து வரும் வெற்றித் தேர்வு வினாப்பத்திரம் வழங்கல்
தரம் - 4 - 15 வினாப்பத்திரங்கள்
தரம் - 5 - 20 வினாப்பத்திரங்கள்
02122 29016, 0773126807, 0775388471
நல்லூர் சயன்ஸ் அக்கடமி, மீசாலை நியூ மறஸ் அக்கடமி




சுடர் ஒளி
THE SUDAROLI வார மலர்
REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA
(டிசெ.13 - டிசெ.19)
இப்போது விற்பனையில்
யார் பக்கம் தராசு?
ராஜபக்ஷ குடும்பத்தின் தலையிடிகள்
கூட்டமைப்பின் பேரங்கள்
நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையில் மறைந்துள்ள சர்வாதிகாரப் பண்புகள்
உயிர் வலிக்கும் கணங்கள் தொடரில் "வாழ்வைத் தொலைத்த சகோதரியின் வாழ்க்கை"
எம்.ஜி.ஆருக்கு நிகர் எம்.ஜி.ஆர் தான்
சதுரங்க வீரராக டென்மார்க் தமிழ்ச்சிறுவன்
இளஞ்சுடர், இலவச மருத்துவ ஆலோசனை, பித்தன் பதில்கள் மற்றும் வழமையான பல்சுவை அம்சங்களுடன்.
உங்கள் உதயன் முகவர்களிடம் கேட்டு வாங்குங்கள்


## மரண அறிவித்தல்

### பொன்னையா பாலநாதன்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

சைவமடம், கட்டுவன், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்னையா பாலநாதன் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) நேற்று (15.12.2009) செவ்வாய்க்கிழமை பிற்பகல் காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

இலந்தையிட்டி வைரவர் கோயிலடி, ஏழாலை வடக்கு, ஏழாலை.

தகவல் : பாலநாதன் சிவபாக்கியம் (மனைவி).


DMI COMPUTER EDUCATION வழங்கும்
GIT
A/L 2010
கணித, விஞ்ஞான, கலை, வர்த்தக மாணவர்களுக்கான
கருத்தரங்கு
DMI COMPUTER EDUCATION
No.113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
Dec. 20 ம் திகதி நடைபெறவிருக்கும் GIT பரீட்சைக்கான துறைசார் வல்லுனர்களின் கருத்தரங்கு.
இடம் : DMI ஸ்ரான்லி வீதி
காலம் : 18/12/2009 (Friday) காலை 10.00 மணிக்கு.
உங்கள் பதிவுகளை தவறாது முற்கூட்டியே No 113, கன்னாதிட்டி வீதி or DMI ஸ்ரான்லி வீதியிலோ மேற்கொள்ளவும். Tel : 021- 222 4...


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.12.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org